உ

சிவமயம்.

# மநோபோதை.

[மூலமும் - பழைய உரையும்]

இஃது,

சதுரை,

அ. சிவசிதம்பரப் பிள்ளையவர்களால்

பரிசோதிக்கப்பட்டு,

முதல் பதிப்பு.


சென்னை-சூளை,

ஆர். பாலைய நாயுடு

அவர்களது

பாலவிர்த்தி போதினி அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்ட

1906.



Registered Copy Right


இதன் விலை] [ரூபா 1

# பதிப்பு

இந்நூற் பிரதி யொன்று மிருக்கையாமையினானும், கற்போர்க்கு நயமாகி வருமென்று, இன்னுஞ் சிலநாட்படுமாகலானும், இவ்வாறென்று கிட்டு, அவைகள் சூழ்ந்த நிலையுங்கி கடம் கரதலாமலகமா விருத்தலால் விடுமாகலானும், பின்னர் வேறு விடினும், நன்றாய் புலவர்கள் செய்வருவாராகலானும், அவ்வாறுமை ணுடிபோலாகு மாகலானும், ஆ ஈடேறிவிடுகின்றதாகலானும், மிக கருத்துடன் பதிப்பாயினன்.

## இந்நூலில் சேர்ந்தவை

1. சிவஞான சித்தியார்
2. தத்துவப் பிரகாச விருத்தம்
3. தனிப்பாடற்றிரட்டு
4. திருமந்திரம்
5. திருவருட் பயன்
   திருவுந்தியார்
   பட்டினத்தார் பாடல்

| | வரி | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| | 10 | உருத்திரனும | உருத்திரனும உருத்திரியும் |
| | 12 | மகேஸ்வரனும் | மகேஸ்வரனும் மகேஸ்வரையும் |
| | 14 | சதாசிவனும | சதாசிவனும சதாசிவையும |
| | 2 | பக்ஷதி | சமுத்தி |
| | 18 | அந்தக்கரணங்கள் | அந்தக்கரணங்கள் [illegible] |
| | 5 | கழிவி | கருவி |
| | 11 | பசி | படி |
| | 23 | சில்லாதேயவன் | சொல்லாதேயவன் |
| | 29 | இல்லாதே | இல்லாதே |
| | 2 | பொருவன் | னைன்று |
| | 19 | மலத்தாரையுமோர | மலத்தாரையும் |
| | 22 | நனமை | நன்மை |
| | 15 | கணடிருப்பவக்கு | கண்டிருப்பவர்க்கு |
| | 20 | ஆன்ப | ஆன்ம |
| | 21 | நான்றி | நான்கு |
| | 24 | நடுகெடு | [illegible] |
| | 30 | நக்தாமல் | நத்தாமல் |
| | 25 | திரண்டி 26 27-ம் இருவே | திரண்டி வரி 26 27-ம் இருதே |
| | 31 | [illegible] | [illegible] |
| | 21 | புடுவோம் | புகுவோம் |
| 35 | 17 | ஆகும் | ஆகா |
| 44 | 20 | பொன்றி | வொன்றி |
| 49 | 4 | கல்பிணியே | னகீல்பிணியே |
| 50 | 7 | லறுபகில் | லறுபகி |
| 55 | 9 | யெல்லல | வெல்லல |
| 56 | 29 | போச் | பேனைச |
| 67 | 7 | பஞ் | பஞ்ச |
| 68 | 5 | | மீண்டும் |
| 69 | 4 | லேழுபத்து | லேழுபத்தி |
| ,, | 6 | பூதங்கடான் | பூதங்கடானே? |
| ,, | ,, | தேகமோ | நான் |
| ,, | 8 | ,, | நா |
| ,, | 10 | காணங்களும் உயிரோர | காணங்களுமோ |
| ,, | 31 | கான் | கள் |
| 71 | 12 | இல்லாது இவ்வுடல் | இல்லா உடல் |
| 77 | 22 | தத்துவங்களு | ங்களும், |
| 78 | 6 | நடுகு | |
| ,, | 29 | கிரியையாய் | ரயாய் |
| ,, | 28 | மூலைகை | |
| 80 | 3 | ஈபாவமாவது | |

# பிழை திருத்தம்.

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 1 | 1 | மயானாறுதலா | மெய்யானாறுதலால |
| | 2 | பொளறி | பொறி |
| „ | „ | விருசசா | விருதா |
| | 3 | பனபா | பனபாய |
| | „ | மொநகாயம் | ரழகாவும் |
| | 4 | பொாறின | பொறின |
| | 5 | பெருசே! | பெருசே! மனமே! 14 வரி கூடிய சொகாச |
| | 6 | பினைாபு | பிரைாயு |
| | 7 | மனாறு | நனறு இவ |
| | 10 | காவெனறும் | காலெனறும் |
| | 7 | அியும் | அரியும் |
| | 10 | அநகஞு | அநேகஞு |
| | 92 | கநாயாாசகும் | சாதகாாசம் |
| | 2 | சருமைது | கருமசனை |
| | 3 | பஞசாசசாசதடை | பஞசாககாநது |
| „ | 13 | வொனறின | வொனறி |
| 7 | 17 | மொணொறது | விணொறுவை |
| 8 | 5 | பிறவா | பிழவா |
| „ | 21 | பெபனா | பெமனா |
| „ | 23 | சை_ | சடை |
| 11 | 16 | அரியம் | அரியும் |
| 12 | 25 | பாசேகும் | பாரிகதய |
| 13 | 28 | வாழநதறபா | வாழநதமை |
| 14 | 16 | கான | கானை |
| | 18 | மனமே | மனமே! |
| „ | 20 | தோதிடம் | திடம் |
| 15 | 18 | அவியா | அவியா |
| 16 | 8 | [illegible] | X |
| | 10 | கனமகாதாநகிபம் | சனமசாதாசகியம் |
| „ | 15 | ஒருமுகம் | ஒருமுகமும் |
| „ | 20 | பினாசரிகது | பினாசரிதது |
| 17 | 11 | இவரிமேமலைனபு | இவரிமேமலைாகு |
| „ | 12 | போது | போதும் |
| „ | 26 | ஒயபோச | யசபோக |

| பக்கம் | வரி | பிழை. | |
|---|---|---|---|
| ,, | 30 | இருக்கவுண்டு | |
| ,, | 31 | உண்டாம் | |
| 18 | 2 | வான்றபடியும் | |
| ,, | 3 | இருபதமைதாம் இரு | ட |
| ,, | 4 | சாந்திரன் | வ |
| ,, | 24 | மேலாலைத்தை | ஒ |
| ,, | 25 | மிறாலைத்தை | |
| ,, | 26 | தனிமுமலைத்தை | [illegible] |
| ,, | 28 | லொன் வினொடி | லெ |
| ,, | ,, | வொண் யமைமேய | லெ |
| 19 | 3 | உணியன் | இ |
| ,, | 4 | வண்ணுமபடி | வ |
| ,, | 14 | மாயவதிகள் | ம |
| ,, | 15 | இபியத்தி | இ |
| ,, | ,, | வேதாக்கு கடவுள் | வே |
| ,, | 16 | வொட்டுவிதசாக | லெ |
| ,, | 17 | குக்குவமே | கு |
| ,, | 29 | மேமமுனுற | மேம |
| ,, | 30 | சோ நகாண | [illegible] |
| 20 | 5 | சோடம் | [illegible] |
| ,, | 6 | யிராா | உ |
| ,, | 22 | அடும் | அ |
| ,, | ,, | [illegible] | [illegible] |
| 21 | 1 | தந்கும் | கு |
| ,, | ,, | வெயசாயத்த | வெ |
| ,, | 2 | முலை வண்ப | [illegible] |
| ,, | ,, | தாவமெய்ப்பயி | தா |
| ,, | 22 | முகது பரி ருகப | [illegible] |
| ,, | 29 | இகன் | இ |
| 22 | 1 | பாழ் | ய |
| ,, | 9 | குடவளவுப | கு |
| ,, | 19 | க்கறவை | கே |
| ,, | 23 | அடும் | அ |
| ,, | 25 | யாடும் | ய |
| 23 | 26 | படப்பகை | ப |
| ,, | 9 | முன்றுண்டுதான் | பு |
| ,, | 15 | [illegible] | [illegible] |
| ,, | 20 | ஒதில் இமன்டிய | (இ |
| ,, | 25 | [illegible] | |

பாயவே யென்றபடியும் அமைந்த இலக்கங்கள் எவ்வாறு பொருளால் வேறுபட்டு நடந்ததோ அவ்வாறே, இலக்கப் பாக்களால் வேறுபட்டு, உண்மைப் பொருளை யோதுகின்றதே ஒருவிசேடம்.

இலக்கண விலக்கியத்தில் கற்போர் முதல் கற்றுணர்ந்தோர் ஈறாக வுள்ள எல்லார் தமக்கும், யோகாக நத்திக்க உயிர் வருக்கையாகவும், உயிர் மெய் வருக்கையாகவும், குணித வருக்கையாகவும், அந்தாதி யாகவும் பொருந்திக்கொள்வதுபோல் இந்நூலின இலக்கத்தில் இலக்கமுறையாக முதன்முதல் முடிவீறாகக் கூறப்பட்டிருப்பதும் பிறிதோர் விசேடம்.

எண்ணிலக்கணத்தாலும் யாப்பிலக்கணத்தாலும் சில பல விடங்களில் சரியொத்து வாவிலி அவ்வாறேல் நூலாசிரியர் குற்றமாமெனின்: அற்றன்று. ஏற்றியாதோ வெனின்: பிற்காலத்து ஏலப்பிரதியைப் பொரத்தெழுதியார் யாரோ சீர்திருத்தி யெழுதாது வழக்கச்சொல்லாக எழுதிவிட்டனர் போலும். இல்லையேல் அதிகப்பட்டுள்ள இடமெல்லாம் நாரிமையாகக் கொள்ளல் நலம். உதாரணம் இருபத்து + இ + ஒன்று = இருபத்தியொன்று.

இந்நூலில் எற்புடை கடவுளையாவது வழிபடு கடவுளையாவது முதலில் கூறாதது யாது காரணமோ? ஒருகால் எனக்கு அம்முதற்பா கிடைத்திலை போலும்.

இவ்வற்புதமான நூலை நற்காலத்தார் கண்டிரார். என்பது திண்ணம்.

இந்நூல், முனைவன் கண்ட முதனூற்கும, முன்னோர் நூலின் முடிபொருங்கொத்து, வேண்டும் விகற்பங் கூறியழியா மரபினது வழிநூற்கும் ஒப்ப முடிந்த சார்பு நூலாகும். எனினும் ஒருவாற்றான் வழிநூலென்றுந் துணியப்படுகிறது. அஃதெவ்வாறெனின்: மநோபோத என வடமொழியின்கண் ஒரு நூலுளது. அந்நூற்பெயரையே யிந்நூற்கு மமைத்து, அதிலுள்ள விடயமே யிதிலுங் கூறப்பட்டிருந்தால் அதற்கிது வழியே. ஒரு காலத்தில் வேறு விடயங் கூறப்பட்டிருந்தால் சார்பெனத் தடையில்லை.

பழைய வுரை யென்று குறிப்பிட்ட யிவ்வுரை யாரோ வோர் வேதியரா லெழுதப்பட் டிருக்குமென்பது துணிபு. ஏனெனின்: பிராம்மண வாக்காகவே சில பலவிடத்தில் வடசொற் கல

நது வருகின்றது. அல்லாமலும் முதற் சில விடங்களில் அனேகமாய்ப் பதவுரையாகவும், இடைச் சில விடங்களில் அனேகமாய்ப் பொழிப்புடன் விருத்தியாகவும், கடைச் சில விடங்களில் பொழிப்பு மேற்கோள்களுடன் விருத்தியாகவும், இருக்கின்றது.

இந்நூற்கு வேறுரை கிடையாமையாலும், மூலம் கிடைப்பது அரிதாக விருக்கையாலும், இனி யோர் உரைச் செய்விதாக எழுதினும் புது உரையா மாகலாலும், அவ்வா றெழுதினும் இவ்வுரையைக் கொண்டே யெழுதவேண்டு மாகலாலும் பழைய வுரை யென்று பெரிலாததற்குப் பேரிட்டேன்.

இந்நூலை யென்னாலானமட்டும் ஒருவாறு திருத்தினேன் பூரணமாகவுந் திருத்த எண்ணங்கொண்டும் மேற்கூறிப் போந்த கருவிக ளில்லாமையாலும், அச்சிடுங் காலத்து எனக்கு நேர்ந்த ஆபத்துகள் ஒவ்வொன்றும் சொல்லி முடியாதாகலாலும், அவ்வாறு சொல்லச் சுருக்கமாகப் பிரவேசிப்பினும் கேட்டா ரெவரும் ஆச்சரியத்துடன் துக்க சாகரத்துள் அழுந்துவாராகலாலும் ஊழிற் பெருவலியாவுள? என்றபடி நிச்சயித்தவதனை தற்போது கூறவொண்ணாதாகலாலும், அங்ஙனம் ஒருகாற் கூறினும், முத்து மாணிக்கம் என யானெழுதப்போகும் நூலில் கண்கூடாக் காணக்கூடுமாகலானும் இவண் கூறாமலே கூறினேன். இப்பால் இன்னொரு பதிப்பச்சிடுங்கால் இந்நூலுக்கு பெரிதாய விருத்தியுரை யென்னாலேயே யெழுதப்படுமாகலான், இதற்குள்ளாகவே மான தன்பிற்கினிய நண்பர்கள் பிரதிகள் கிடைத்தாலும், விசேட சங்கதி யிவைதப்பற்றித் தெரிந்தாலும் எனக்கனுப்பி யுதவி புரிதல் செய்நன்றியே. அந்நன்றியை யென்றும் மறவாதவனாய் அவ்வவர் திருநாமங்களை நூலுள் காட்டிப் பிரகாசப்படுத்திப் பூரிப்பேனுள்ளம். விலாசம்:—ஜி. ஆர். பாலைய நாயுடு கம்பெனி, ரூலா போஸ்டு, மதராஸ்.

சதுரை-அ. சிவசிதம்பரம்.

உ

சிவமயம

திருச்சிற்றம்பலம்.

# மநோபோதை.

[மூலமும் - பழைய உரையும்]

ஒன்றென் றிருதெய்வ முன்னுமன் மற்றொன்றை யொன்றுதலா
லொன்றி லிருக்கா லொழிந்தனமே லிச்சை யொழிதினமும்
ஒன்றி லொருகா லொருகாலும்பூ சித்துன் னரனை யன்பா
யொன்றின்முக் காற்றா னொழிவைப் பணிமுத்தி யுண்டுநெஞ்சே!

(எ-து) நெஞ்சே! ஒன்று என்று இருதெய்வம உன்னாமல் மற்று ஒன்றை-தெய்வம் ஒருவனே யென்றிரு, பின்னையு மொரு தெய்வ முண்டென்று நினையாதே; ஒன்றுதலால் ஒன்று இருகால் ஒழிந்தன மேல் இச்சை ஒழிதினமும்-ஒன்றிலே இருகால் நீங்கின் நின்ற தரையாம். ஸ்ரீகளுடைய அரையென்னும் யோனியின் மீதிலே யிருக்கின்ற விச்சையை யொழித்து விடுதினமும்; ஒன்று இல் ஒருகால் ஒழிகால் உம் பூசித்து உன் அரனை-ஒன்றிலே கால் நீங்கின் முக்கால். திரிகாலமும் பூசை செய்து தியானம் பண்ணும் பரமேஸ்வரனை யன்பாய்; ஒன்றின் முக்கால்தான் ஒழிவை பணி முத்தி உண்டு மனமே!-ஒன்றிலே முக்கால் நீங்கின், கால். சிவனடியார்களுடைய காலென்றும், பாதங்களைப் பணிந்தால்மோட்சமுண்டாகும் மென்றவாறு. (1)

இரண்டு மிரண்டு மிரண்டோ டிரண்டுகண் ணோனரியும்
இரண்டு தொழிற்செய் திரண்டுரு வாகியுமி ரண்டுமெட்டான்
இரண்டடி தன்னையுமி ரண்டொரு காலமு நேர்ந்தர்ச்சியும்
இரண்டறக் கூடிட லாமன மே!வினையி ரண்டுமற்றே.

(எ-து) மனமே-மனதே! இரண்டும் இரண்டும்-நாலும், இரண்டோடு இரண்டு-நாலு, கண்ணோன்-ஆக எட்டுக் கண்களையுடைய பிரம்மதேவனும், அரியும்-விண்டுவும், இரண்டு தொழில் செய்து-இரு வேலைகளைச் செய்து, இரண்டு உரு ஆகியும்-ஈருருவாகியும், இரண்டும் எட்டான்-இரண்டுக்கும் எட்டாதவன்றன், இரண்டு அடி தன்னையும்-திருவடிகளிரண்டையும், இரண்டொன்று காலமும்-மூன்று வேளையும், நேர்ந்து அர்ச்சியும்-(உள்ளன்புடனே) வேண்டிப் பூசைசெய்யும், (அப்படிச் செய்தால்) வினை இரண்டும் அற்று-இரு வினையினின்றும் நீங்கி, நாம் இரண்டு அற-இரண்டல்லாமல், கூடிடலாம்-ஒன்றாக வயிக்கியமாகலாம் எ-று.

(வி ரை) நான்முகனாதலால் எட்டுக்கண்களையுடையவனென வந்தது. இரண்டு தொழிலாவன:—பறந்து தேடுந் தொழிலொன்று, ஆழ்ந்து தேடுந் தொழிலொன்று ஆகவிரண்டு. இரண்டுருவாவன:—அன்ன வுருவொன்று, பன்றியுருவொன்று ஆகவிரண்டு. இரண்டுமெட்டானெனில் அடிமுடி யிரண்டுக்கு மெட்டாதவனெனப் பொருள்கொள்க. ஆண்டானென்றும், அடிமையென்றும் இல்லாமலிருக்கும் அத்துவித யின்பத்தையே யிரண்டறக்கூடிடலாமென்றபடி. வினையிரண்டாவன:—நல்வினை, தீவினை, விசேட யிலக்கணம்.—மனமே!-மரியாதைக்கழைத்த பெயர் எதனாலறியலாமெனின் அர்ச்சியும் என்ற வினைக்குறிப்பால். (2)

மூன்று முயன்று நமைப்பிற வாழியின் மூழ்த்திடநாம்
மூன்றை முயன்றன் முறைமையன் றேமுத்தி யுண்டுகேண்டான்
மூன்று முடையா னடியை முயன்றி*-த- மகிதம்பெற்றான்
மூன்று முயலா மனமே! பிறவாழி மூழ்க்குமின்றே.

(ஏ-து) மனமே-மனதே! மூன்றும் முயன்று-மும்மலங்களும் முயற்சிகொண்டு, நமை-நம்மை, பிறவாழியில்-பிறவிக்கடலில், மூழ்த்திட-முழுகும்படிச் செய்ய, நாம்-நாம், மூன்றை-மூவா

சையை, முயன்றல்-பிரயத்தனப்படல், முறைமையன்று ஏ-முறைமையல்லவே, கண்டால்-யோசித்துப் பார்த்தால், முத்தியுண்டு-மோக்ஷம் (எவ்வாற்றானும்) உண்டு. ஆகலான். மூன்றும் உடையான் அடியை-மூன்று கண்களையுடையான் திருவடிகளை, முயன்று பற்றிக்கொண்டு இதம் மகிதம பெற்றால்-உள்ளக் களிப்பு கொண்டால், மூன்றும் முயலா-மும்மலங்களும் பற்றா, பிறவாழி மூழ்க்கும் இன்றே-பிறவிக்கடலிலே மூழ்குவதும் இல்லை. (எ-று)

(வி-ரை) மூன்றும் என்பது:—ஆணவம், மாயை, காமியமாம். முயன்று என்பதற்குப் பற்றியெனப்பொருள்கோடலீண்டு பிறவாழியை. 'பிறவிப் பெருங்கட'லென்றார் நாயனார், மூன்றையென்பது மண், பெண், பொன் ஆசைகளாம். இனி மூன்றும் என்பது சோம சூரியாக்கினியாய முக்கண்களாம்.

(இ-ம்) நமை-நம்மையென்பதன் இடைக்குறை.

(பி-ம்) இதமகித மற்றாலென்றுங் காணப்படுகிறது. மூன்றடியில் தகரத்துக் கோரை யின்மையெனக் கொண்டு கலித்துறையை நடைபெற்றுவரப் பொருத்திக்கொள்க. (3)

நாலா விதத்திலு மாராயி லின்பநன் முத்திநெஞ்சே!
நாலாய யோனி தனிலே பிறந்திறந் தேகநன்றோ
நாலாலு நலேழி னாலுமா லாலுநன் நான்முகத்தோ
நாலேயுங் காணாத நாதனை நாடி(நன்) னெறியினில்லே.

(எ-து) நெஞ்சே-நெஞ்சமே! நாலாவிதத்திலும்-நால்வகையாலும், ஆராயில்-ஆய்ந்து பார்க்கையில், நன்முத்தி-நல்லமோக்ஷமே, இன்பம்-சுகம் (அப்படியிருக்க) நால் ஆய-நால்வகையாய யோனிதனிலே-யோனிகளிலே, பிறந்து இறந்து-பிறந்தும் இறந்தும், ஏக-போக, நன்றோ-நல்லதோ? நாலாலும்-நாலு வேதங்களாலும் நால் எழினாலும்-இருபத்தெட்டா கமங்களாலும், மால்ஆலும்-விண்டுவாலும், நன்னால் முகத்தோன் ஆலும்-நாலுதிக்கு முகங்களையுடைய பிரம்ம தேவனாலும், (மற்றியாவராலும்) காணாத-காணமுடியாத, நாதனை-பரமசிவனை, நாடி-நாடி, நன்னெறியில்நில்லே-நல்வழியிலே நிற்பாய் (எ-று.)

(வி-ரை) நாலுபேர் பேச்சேகேள், நாலுதுட்டு சம்பாதி. என்ற பழமொழிப்படியே மீண்டும் நாலாவிதமென்றார். இது வழக்கச்சொல், நாலாய யோனியாவன:—அண்டசம், சுவேதசம் உற்பீசம், சராயுசம், இவற்றை முறையே-முட்டையிற் பிறப்பன, வேர்வையிற் பிறப்பன, விதையிற் பிறப்பன, பையிற் பிறப்பன, எனக் கொள்க. * நாலு வேதங்களாவன:—இருக்கு, தைத்திரியம், சாமம், அதர்வணம்,

ஆகமங்கள் இருபத்தெட்டாவன:—1. காமிகம், 2. யோகஜம், முதலிய.

* நாலாய யோனிதனிலே பிறந்திறந்தேக னன்றோ, வென்றமையான், சுரராய், நரராய், விலங்காய், பக்ஷியாய், தாபரமாய், ஊர்வனவாய், நீர் வாழ்வனவாய் எழுவகைத் தோற்றமாய் எண்பத்து நான்கிலட்ச யோனி பேதங்களாகப் பிறந்திறந் துழலலேனென விஸ்தரித்துப் பொருள்கோடலுமுண்டு.

(இ-ம்) நாலொடுமு, நாலேழினும் என்பனவற்றிற்கு முறையே, வேதங்களும், ஆகமங்களும் வருவித்துரைக்கப்பட்டது. மால்-பண்பால் வந்த பெயர். நான்முகத்தோன்-எண்ணால் வந்த பெயர். நாலாவதடியில் ஓசைமேல் நாலென நின்றதன்றி, பொருள்மேல் ஆலினைத்தா னின்றது. (4)

அஞ்சினு மாகிய மெய்விட வாதைசெய் யந்தகர்க்கங்
கஞ்சிட வேதுக்கு நாமன மே!யருள் வீடுறலாம்
அஞ்சுக ரத்தார்க்கு மாறு முகத்தார்க்கு மப்பனை
அஞ்சு முகத்தனை யசையாம வுன்னற மாய்ந்துசெய்யே.

(எ-து) மனமே-மனதே! அஞ்சினும ஆகிய-ஐம்பூதங்களாலாகிய மெய்விட-சரீரத்தை விட்டவுடனே, வாதை செய்-(சீவாத்துமாக்களை) நரகவாதனை செய்யப்படாநின்ற, அந்தகர்க்கு - எமதருமர்க்கு, அஞ்சிட எதுக்கு நாம்-நாம் ஏன் பயப்படல், அருள் வீடு உறலாம். ஞானவீட்டைப் பெற்றிருக்கலாம். (அதெப்படியென்னில்) அஞ்சு கரத்தார்க்கும் ஐங்கரக் கணபதிக்கும். ஆறு முகத்தார்க்கும் ஆறுமுக முருகருக்கும், அப்பன் ஆன-தந்தை

யான, அஞ்சு முகத்தனை-ஐம்முகமுடைய பரமசிவனை, அசையாமல்-மறவாமல், உன் அறம்-நினைக்கும்படியான தருமத்து, ஆய்ந்து-ஆராய்ந்து, செய் ஏ-செய் (எ-று)

(வி-ரை) ஐம்பூதங்களாவன:—1. பிருதுவி, 2. அப்பு, 3. தேயு, 4. வாயு, 5. ஆகாசம் ஆ 5 நரக வாதைகளாவன:— 1. தமப்பிரபை, 2. இமப்பிரபை, 3. தூமப்பிரபை, 4. வாலுகப்பிரபை, 5. சாகரப்பிரபை, 6. இரத்தப்பிரபை, 7. அழற்பிரபை ஆ 7. அவையாவன:—இருள், குளிர், புகை, மணல், துயிலாமை, இரத்தம், தீ.

ஈச்சுரன் ஐம்முகமாவன:—1. ஈசானம், 2. தற்புருடம், 3. அகோரம், 4. வாமம், 5 சத்தியோசாதம். இவற்றுள் ஈசானம்-அனைத்துமாகுதல், தற்புருடம்-காத்தல், அகோரம், அழித்தல், வாமம்-விளக்கல், சத்தியோசாதம்-தோற்றுவித்தல்.

உன் அறம் என்றால், சிவதருமோத்திரம் முதலாய நூல்களிலே சொல்லப்பட்ட முப்பானிரண்டறங்களுமாம். ஆய்ந்து என்றமையால் பொருளுள்ள பகல் வேடதாரிகளுக்கு கொடுக்கற்க வென்றபடியாம். (5)

ஆறினிற் பாதி மலத்தாற் பிறப்புற் றழிந்திடவேன்
ஆறினி லொன்றேகி நின்றக் கரத்தோ னடிக்கன்புசெய்
ஆறினை நீங்கிநில் லஞ்சினை நீக்குதிரி யாசையறூஉ
ஆறும் பிறவிப் பிணிமன மேயென்சொ லையமின்றே.

(எ-து) மனமே-மனமே! ஆறினில் பாதி மலத்தால்-(ஆறினிற்பாதி மூன்று) மும்மலத்தால், பிறப்பு உற்று அழிந்திடல் என்-பிறந்து பிறந்தழிந்து போதலேதுக்கு? ஆறில் ஒன்று ஏக நின்ற அக்கரத்தோன்-(ஆறில் ஒன்று ஏக, நின்ற ஐந்து) பஞ்சாக்கரமே திருமேனியானவருடைய, அடிக்கு-திருவடிகட்கு, அன்பு செய்-பத்தி பண்ணிக்கொண்டு வா, ஆறினை நீங்கி நில்-ஆறு வித விகாரங்களையும் நீங்கி நில், அஞ்சினை நீக்கு-பஞ்சேந்திரியங்களையும் (அடக்கு) போக்கு, திரி ஆசை அறு-மூவாசையும் ஒழி. (இப்படித் திடப்பட்டால், ஆறும் பிறவிப்பிணி-பிறவி

நோயுமறிவிடும், என்சொல்-என்னுடைய வார்த்தைக்கு, ஐயம் இன்று-சந்தேகமில்லை (எ-று.)

(வி-ரை) பஞ்சாக்கரத்துடன் தூல பஞ்சாக்கரம், சூக்கும பஞ்சாக்கரம், காரண பஞ்சாக்கரம் மகாகாரண பஞ்சாக்கரம் முதலிய பலவிதமுள. இவை குரு முகத்தானறிக.

ஆறு விகாரமாவன:—1. காமம், 2. குரோதம், 3. லோபம் 4. மோகம், 5. மதம், 6. மாச்சரியம் ஆக 6

பஞ்சேந்திரியங்களாவன:—1. சோத்திரம், 2. தொக்கு, 3 சட்சு, 4. சிங்குவை. 5. ஆக்கிராணம் ஆக 5.

(இ-ம்) ஆறும் எதிர்கால வினைமுற்று. (6)

ஏழினி லேயொன்ற தேகேக வேகுமெய் யிளமைசெல்வம்
ஏழினிலோன் றேகிட வினிதென்ப ரேழைய ரினிமுத்திதான்
ஏழினி லொன்றின் னடியா ரிறைமரு கன்றுதையை
ஏழினி லொன்றினைச் சூடியை யேற்றிடு யென்றநெஞ்சே.

(எ-து) என்றன் நெஞ்சே-என்னுடைய மனமே, ஏழு இன் இல்-ஏழு வாரங்களுள், ஒன்று அது-ஒன்றாகிய ஞாயிறுனது, ஏக ஏக-போகப்போக, மெய்-தேகமும், இளமை-வாலிபமும், செல்வம்-சம்பத்தும், ஏகும்-போகும். ஏழையா-அறிவிலார், ஏழு இல் ஒன்றாகிட-ஏழு வாரங்களுள் ஒன்றாகிய (ஞாயிறு) பொழுது போக, இனிது என்பர்-நல்லதென்பார்கள். இனி முத்திதான்-இப்பால் வீடு எவ்வாறெனறால், ஏழு இன் இல் ஒன்று இன்-ஏழு வாரங்களுளொன்றாகிய வியாழனென்னும் பிரகஸ்பதியின், அடியார-சீடர்களான தேவர்களுக்கு, இறை-அரசனாகிய தேவேந்திரன்றன், மருகன்-மருமகனான சுப்பிரமணியருடைய தாதையை-தந்தையான பரமசிவனை, ஏழ் இனிஇல்-ஏழு வாரங்களுள், ஒன்று இன் ஐ-ஒன்றாகிய திங்களை, சூடியை-அணிந்தவனை, ஏற்றிடு-போற்றிப் புகழ்ந்து கொண்டாடு. (எ-று)

நாழிகை சுடு-செல்ல ஒரு நாளும், நாள் நடு-செல்ல ஒருமாதமும், மாதம ம்ப -செல்ல ஒரு வருஷமும, ஆக நிகழ்தற்கு நாளே காரணமாகலான், அந்நாள் செல்லச்செல்ல ஆயுளும் கழியு

மென்பதாம். அங்ஙனம் கழியவே தேகம் ஆற்றங்கரையண்டையின் மரத்தைப்போல் விழுந்துவிடும். ஆற்று நீராலே பிடிகரையாகக் கரைந்து கரைந்து போவதுபோல நாட் செல்லச்செல்ல வார்த்திபம் வருகையினாலே வாலிபம போய்விடும். மத்தியான காலத்தில் வெய்யற் காய்கிற திட்டாணியந்தானே கானலெனக் காட்டாது, நீரெனக்காட்டி, பொழுது சாய்ந்ததும் மேற்படி கானற் காணாமற் போவதுபோல, பண்ணின புண்ணியம் வந்து நேர்பட்ட காலத்திலே உலகுக்கெல்லாம் எண்ணிக்கைப் பெறுவதாகச்செல்வம் பெற்றிருந்து புண்ணியம் பண்ணுநாள் வந்தவுடனே, தானே கானலைக் காணாது போனதுபோல, செல்வமும போய்விடும். இவ்வாறு இம்மூன்றும் போது போகப்போக அசத்தாகப் போதலினால் வீணே பொழுதுபோக்கல் பொல்லாங்கென்பது இரண்டாமடியினுதாரம். வறுமையாற் பீடிக்கப் பட்டவர்கள். இற்றைப்பொழுது போகட்டும் நாளை பார்த்துக்கொள்ளலாமென்பதனால் இனிதென்பரென்றார். (7)

எட்டினி லொன்றென வாழ்ந்தாலு மென்னவிவ் வாழ்நிலையோ
எட்டினி லொன்றெனு சாலங்கண் டாயுட லிதைநம்புமோ
எட்டினி லொன்றின் மகனிறைக் கெட்டா விறையை யுன்னி
எட்டினி லொன்றென் வயறென்ற பேருக் கிடின்முத்தியே.

(எ-று) எட்டு இன் இல்-அட்ட திக்கில், ஒன்று என-ஒரு பாலகனை இந்திரனென்ன, வாழ்ந்தால் உம்-(போகமாக) வாழினும், என்ன-என்ன பிரயோஜனம்? வாழ் (வு) நிலையோ-இந்த வாழ்வு (ஒருவரிடத்திலேயே) நிற்குமோ? நில்லாது. 'அதெதனாலென்றால்' எட்டினில் ஒன்று எனும்-அட்டதிக்குப் பாலகரில் ஒருவனை, சாலம்-இந்திரசாலத்தைப்போல, உடல் கண்டாய்-தேக (வநித்திய)த்தைக் கண்டாய். இதை நம்புமோ-இவ்விஷயத்தை உலகம் நம்புமோ? (நம்பாததனால்) எட்டினில்-அட்ட திக்குப் பாலகருள், ஒன்றின்-ஒருவனை வாயுவின், மகன்-புத்திரனாகிய ஆஞ்சனேயனுடைய, இறைக்கு-இராம மூர்த்தியாகிய விஷ்ணுவுக்கு, எட்டாத பிறைஐ-அளவிட்டுக் காணற்கரிய பரம சிவனை உன்னி-நினைத்து, என்வயிறு-என்னுடைய வயிறு, எட்டினில் ஒன்று-அட்டதிக்கு[illegible]கருள் ஒருவனை (அக்கி) என்ற

பேருக்கு (நெருப்பு நிகராம்) பசியென்றவாகளுக்கு, இட-அன்ன மிட, முத்தி-வீடுறும் (எ-று) (ஏ-அசை)

தேகம் நிலையாததாகவே செல்வமும் நிலையாதென்பது தேற்றம். (8)

ஒன்பதி லேழற நின்றதி லுற்பவ மாகியென்றும்
ஒன்பது பிறவுள துண்டமுஞ் சுற்றி யுழன்றிடவேன்
ஒன்பதி லேழற நின்ற தொழிக்க வுணாவறிந்தால்
ஒன்பது மோரங்க மாணுடு டொன்ற வுணர்வுமுண்டே

(எ-து) ஒன்பது இல்-ஒன்பதில் பத்தில், ஏழு அற-ஏழு நீங்க, நின்றதில்-நின்ற இரண்டாகிற நலவினை தீவினைகளில், உற்பவம் ஆகி-பிறந்து, ஒன்பது பிறவுள-நவத்துவாரங்களையுடைய, துண்டமும் சுற்றி-தேகத்தைக் கட்டிக்கொண்டு, உழன்று இடல் ஏன்-உழல்வதேதுக்கு, ஒன்பதில் ஏழு அற-ஒன்பதில் ஏழு நீங்க, நின்றது-நின்ற இரு வினையையும், ஒழிக்க-நீக்கிக்கொள்ள, உணர்வறிந்தால்-அறிவறிந்தால், ஒன்பதும் ஓர அங்கம் ஆணுன் ஒடு-நவந்தரு பேதத் திருமேனியுடைய பரம்பொருளோடு, ஒன்ற-ஏகமாகப் பொருந்தத்தக்க, உணர்வும்-அறிவும், உண்டே-உண்டாம்.

(எ-று)

உருவம்.—4. பிரம்மா, விஷ்ணு, ருத்திரன், மகேஸ்வரன்.
அருவுருவம் 1. சதாசிவன்.

அருவம்.—சிவம், சத்தி, நாதம், விந்து. 'உருவமொரு நாலாகி' (சித்தியார்) (9)

பத்து மிருந்து பிறந்தாலு மென்னவிப் பார்தனிலே
பத்துந்தோண் ணூற்றினிற் சாவதென் றேவெம் பாவிநெஞ்சே
பத்தும்பத் தும்பத்தும் பதிவாக வாழ்சடைப் பரமன்றன்னைப்
பத்துக்கு ளேழற்ற கண்ணுனை யுன்முத்தி பாலிக்குமே.

(எ-து) வெம் பாவி நெஞ்சே-மிக்கவாய பாவத்தைச் செய்த மனமே, இபார்தன் இல் ஏ-இந்த வுலகின்கண்ணே, பத்தும் இருந்து-பத்துமாதமுந் தாய்வயிற்றிலிருந்து, பிறந்தாலும் என்ன-பிறந்தாற்றானென்ன? பத்தும் தொண்ணூற்றினில்-நூறில், சாவது

என்றே-இறப்பது எதுக்கு, (ஆகையினால்) பத்தும் பத்தும் பத்தும்-முப்பது, நாள்கொண்டது ஒருமாதம் மாதமாவது திங்கள் ஆகவே சந்திரன், பதிவாகவாழ்-பதிந்துவாழும், சடைபரமன் தன்னை, சடாபாரத்தையுடைய பரமசிவனை, பத்துக்கு உள் எழு அற்ற கண்ணனை-(பதநில் எழுபோக நின்றமூன்று) ஆகவே, முக்கண்ணனை, உன்-நியானி, முத்தி-வீடு, பாலிக்கும்-கிடைக்கும் (திருவருள) கூட்டும (எ-று)

பட்டினத்தடிகள், 'பத்தும் புகுந்து பிறந்து' 'ஐயிரண்டு திங்களாய் யங்கமெலாம் நொந்து' என்பதைககாண்க. (10)

பதினொன்றி லெட்டற்ற வாசையி னற்பய னில்லைநெஞ்சே!
பதினொன்றி லஞ்சிலாச் சூடிதன் பாதத்திற் பத்தியுண்டாய்
பதினொன்றி லஞ்சற் றெழுத்தைப் பகலிர வாய்ச்செபித்தாற்
பதினொன்றி லாறற்ற பாதகம் போய்முத்தி பாலிக்குமே

(எ-து) நெஞ்சே-மனமே ! பதின ஒன்றும எட்டு அற்ற ஆசை இன்னால-(பதினொறிலெட்டுபோக) மூன்று ஆசையினால், பயன்இல்லை-உபயோகமில்லை. ஆகையினால, பதின்ஒன்று இல அஞ்சு இலா-(பதினொறிலஞ் சில்லாதது) ஆறு. ஆகவே நதியை சூடி தன்-தரித்தவனுடைய, பாதத்தில் திருவடியில் பத்தி உண்டாய் அன்புண்டாய், பதின் ஒன்றில அஞ்சு அறறு-பதினொன்றில ஐந்து நீங்கினது ஆறு, எழுத்து-எழுத்துகளை, பகல் இரவு ஆய்-பகலுமிரவுமாய், செபித்தால்-உச்சரித்தால, பதின்ஒன்று இல் ஆறு அற-கக-லே கூ போனால நீங்கு ஐந்து, பாதகம் உம-பாதகங்களும, போய்-நீங்கி, முத்தி-வீடு, பாலிக்கும-உண்டாகும் (எ-று)

எண்டு ஆறெழுத்தென்றது பிரணவமாகிற ஓங்கார முதலியனவாம். ஜெபித்த லெவ்வாறெனின், மூலாதாரத்தில நகாரமும, சுவாதிஷ்டானத்தில் மகாரமும, மணிபூரகத்தில் சிகாரமும், விசுத்தியில் வகாரமும், அனாகதத்தில் யகாரமும, ஆக்கினையில் பிரணவமும் இருப்பதாகத் தியானித்தலாம். இனி பிரணவாக்ஷரம சிவமுன் வராது ஆனால் நமமுன் வரும. உதாரணம், ஆந்திர பாஷாவாரமப மந்தரமாய (ఓనమ:శివాయ) (ஓநமசிவாய) என பதே.

பஞ்சமா பாதகங்களாவன:—மாதாவதை, பிதாவதை, குருவதை, சிசுவதை, பசுவதை யிவையே. (11)

பனிரண்டி லொன்றின்மேற் பற்றிய காதலைப் பாவிநெஞ்சே!
பனிரண்டி லொன்றேறிப் பாதத்தில் வைத்திடப் பாரமன்றே
பனிரண்டி லொன்றும் பணிவாழ் நரகுறப் பற்றிலெமன்
பனிரண்டி லொன்று பறிவீழ்தல் போலப் பதைத்தனன்றே

(எ-து) பாவிநெஞ்சே-பாவங்களைச் செய்த நெஞ்சமே, பனிரண்டில்-பனிரண்டி ராசிகளுள், ஒன்று இன்மேல்-ஒன்றாகிய கன்னிமேல், பற்றி இய காதல் ஐ-வைத்த ஆசையை, பனிரண்டில்-பனிரண்டு ராசியில், ஒன்று-ஒன்றாகிய யிடபத்தின்மீது, ஏறி-ஏறுகின்ற பரமசிவனுடைய, பாதத்தில்-திருவடிகளில், வைத்திட-மனம் வைத்திட, பாரம அல்ல ஏ-சுமையல்லவே. பனிரண்டுஇல் ஒன்றும்-பனிரண்டி ராசிகளு ளொன்றாகிய (விருச்சிகம்) தேளும், பணி-பாம்பும், வாழ்-வாழ்கின்ற, நரகுஉற-நரகமடைய, எமன்-நமன், பற்றில்-(நம்மைப்) பிடிக்கவந்தால், பனிரண்டுஇல் ஒன்று-பனிரண்டி ராசிகளுள் ஒன்றாகிய மீன், பறிவீழ்தல்போல்-பறியில் வீழ்ந்தாற்போல, பதைத்தல்-துடிதுடித்தல், நன்றே-நல்லதோ? (எ-று)

(தனிப்பாடற்றிரட்டு) மங்கையர்கள் யோனிமிசை வைத்திருக்கு மசைதனைப் பங்குசெய்து நூற்றிலொரு பங்கெடுத்து கெங்கைமதி-வேணியரன் பாதாரவிந்தத்தில் வைத்தக்காலென்ற சிலேடைப் பாவாற் கண்டுணர்க. (12)

பதிமூன்று மென்று பகருமறை யென்பர் பார்க்கினெஞ்சே!
பதிமூன்று மூன்றுடன் மூன்றும் பணைத்தங்க மாய்ப்பலவாய்ப்
பதிமூன்றை யும்விட்ட பசுவுக் கதுவது வாயிருக்கும்
பதிமூன்றின் மீதான பதமீவ தாமென்று பாவியுமே.

(எ-து) நெஞ்சே-மனதே! பதி-கடவுள், மூன்றும் என்று-மூன்றென்று, மறை பகரும் என்பர்-வேதங்கூறு மென்பார்கள். பார்க்கின்-நாம் ஆய்ந்து பார்க்கின், பதி-கடவுள், மூன்று மூன்றுடன் மூன்றும்-(மும்மூன்று) ஒன்பதுருவும், பணைத்து அங்க

மாய்-ஏகாங்கமாயும், பலஆய்-(இன்னும்) பலவுருவமாயும், பதி-பதிந்த, ஐ உ மூன்றும்-மும்மலங்களையும், விட்ட-விட்டு நீங்கி நின்ற, பசுவுக்கு-ஆன்மாக்களுக்கு, அது அது ஆய் இருக்கும் பதி-அது வேதாகவுமிருக்கு முதல்வன், மூன்றின்-முப்பதவிகட்கும்,மீதுஆன-மேலான, பதம்-சாயுச்சியத்தை, ஈவதுஆம் என்று-(பக்குவான்மாக்களுக்கு) கொடுப்பதாமென்று, பாவியுமே-நினைவாய், (எ-று.)

பதி மூன்றுவன:—பிரம்மா, விஷ்ணு, உருத்திரன்.

(இ-ம்) பதிமூன்று-பதின்மூன்று எனபதின் இடைகுறைப் போலி. ன்-சாரியையாகவுங் கொளளலாம். (13)

பதிநாற் சிரமுகத் தோனு மரியும் பனிந்திரனும்
பதினாலிற் பாதி முனிவரு முப்பத்து நாலுடனே
பதினாலு மாயிர விருடி முப்பத்து முக்கோடிசுரர்
பதினாலு மோரா பதியைநா முன்னேன்ன பாக்கியமே.

(எ-து) பதி-பதிந்த, நால் சிரம்முகம அத்து ஒன் உம்-நான்முகனாகிய பிரமனும, அரியும-விண்டுவும், பன் இந்திரனும்-சொல்லும்படியான தேவேந்திரனும், பதினால இல் பாதி முனிவரும்-(௰௪ இல் பாதி ௭) சப்தமுனிவர்களும், முப்பத்து நால் உடனே பதினாலும் ஆயிரம்-(௲ உம் ௪௲ உம் ௪௰௮) நாற்பத்தெண்ணாயிர மகரிஷிகளும், முப்பத்து முக்கோடி தேவர்களும், பதி-பதிக்கப்பட்ட, நாலும்-நாலு வேதங்களும், ஓராத அறியாத, பதியை-முதல்வனாகிய பரமசிவத்தை, உன்ன-எண்ண, என்ன பாககியம்-யாதுபுண்ணியம், (செய்தோமமனமே) (எ-று) (14)

பதினஞ்சு போன்ற முகத்தா ளுலகைப் பயிலிறைவிப்
பதினஞ்சை யுண்ட பராபர வத்துவைப் பற்றிநெஞ்சே!
பதினஞ்ச தாப்பாற்று பாழாசை தன்னை யிப்படியிருந்தால்
பதினஞ்சு கண்ணுட னேநல் லயிக்கிய பாவமுண்டே.

(எ-து) நெஞ்சே-மனமே! பதின் அஞ்சுபோன்ற-(பதினஞ்சாம் நாளாகிய) பூரணசந்திரனைப்போன்ற-முகத்தாள்-திருமுகமுடையவள், உலகை (எல்லா) உலகங்களையும், பயில் இறைவி

பதி-பயின்ற பராசத்தியினுடைய தலைவனுகிய, நஞ்சு ஐ-உண்ட பராபரவத்து ஐ-விஷயத்தையுண்ட நீலகண்டத்தை, பற்றி-துணை கொண்டு, பாழ் ஆசை தன்னை-பாழான ஆசைகளை, பதி நஞ்சு அது ஆய்-பதிந்த நஞ்சுக்குச் சமானமென, பாற்று-ஓட்டு, இப படி இருந்தால். இவ்வாறு திடப்பட்டிருந்தால், பதின் அஞ்சு கண்உடன் ஏ-பதினைந்து கண்களுடைய சதாசிவத்துடனே, ஐக் கிய பாவம் உண்டு ஏ-(பெறும் பேறுகிய) ஒற்றுமையு முண்டாம். (எ-று)

பதினைங்கண் எவ்வாறெனில்:—ஐம்முகச் சிவமாகலான் (ஐம் மூன்று பதினைந்து. (15)

பதினுறிற் பாதி மதியைநற் றும்பையைப் பைங்கோன்றையைப்
பதினுறிற் பத்திலா னின்றன சூடும் பரமன்றன்னைப்
பதினு றுபசார மாய்ப்பூசை பண்ணிடிற் பத்தியுண்டாய்ப்
பதினுறுக் கப்பாலுக் கப்பாற் குருபதம் பாலிக்குமே.

(எ-து) பதின் ஆறு இல் பாதிமதி ஐ-(16-இல் பாதி 8. ஆகவே எட்டாம்பிறை) அர்த்த சந்திரனையும், நல்தும்பை-நல்ல தும்பைப்பூவையும், பைம் கொன்றை-பசியகொன்றை மலரை யும், பதின்ஆறு இல்பத்து இல்ஆ நின்றன-(16-இல் பத்துபோக நீக்கு 6) ஆறுகிய கெங்கையையும், சூடும் பரமன் தன்னை-(சடா பாரததில்) தரிக்கும் பரமசிவனை, பதின் ஆறு உபசாரம் ஆய் சோடச வுபசாரங்களுடனே, பத்தி உண்டாய் பூசை பண்ணிடில்- பத்தியோடு பூசைசெய்தால், பதினுறுக்கு-(பதினுருவதாகநின்ற) விசுத்திக்கு, அப்பால்-மேலாகநின்ற, அப்பாலுக்கு-ஆக்ஞைக்கு, அப்பால்-அப்பாலான, குருபதம்-குருபாதமாகிய பரமபதம், பலிக்கும்-சித்திக்கும். (எ-று.) (16)

சோடச வுபசாரமாவன அகராதியிற்காண்க:—

பதினேழி னிற்பதின் மூன்றற வேதம் பயிற்றிலென்னும்
பதினேழி னிற்பதி னெலற்ற வாசையிற் பட்டழென்றுற்
பதினேழி லஞ்சகல் பாணியன் றதை பதம்பெறலாம்
பதினேழி னிற்பதி னெலற்ற வாசைப் படாமலுன்னே.

(எ-து) பதின் எழினிற் பதினால் அற்ற ஆசை இல்-(௰௭-இல் ௰௪ போக நீக்கு ௩)மூவாசையினால், பட்டு உழன்று-ஆல்-அகப்பட்டுக்கொண்டு திரிந்தால், பதின் எழ் இல்-பதின் மூன்று அற வேதம்-(௰௭ இல் ௰௩ போக, நீக்கு ௪) நான்கு வேதங்களையும், பயிறறில் என் ஆம்-கற்றல்தானென்ன? பதின் எழின் பதினால் அற்ற ஆசையை படாமல் (௰௭ இல் ௰௪ அற்றது ௩) மூவாசையிலுஞ் சிந்தையைச் செலுத்தாது, உன்னே-நினைவாயாக. பதினேழில் அஞ்சு அகல் பாணியன்-(௰௭ இல் ௫ அற்றது ௧௨) பன்னிரு கைகளுடைய தாதை-தகப்பனார்தம், பதம சீரடிகளிரண்டையும், பெறலாம்-அடையலாம் (எ-று.) (17)

பதினேட்டிற் பாதி படுத்தும் பிறப்பினிற் பட்டே மன்கைப்
பதினேட்டி னிற்பதின் மூன்றரை யேகரைப் புண்ணிடவேன்
பதினேட்டி னிற்பதி னஞ்சதி லாக்குணம் பதைப்படைக்கில்
பதினேட்டி னிற்பதி னேழி லருள்வெளிப் பட்டிடுமே.

(எ-து) பதின் எட்டில் பாதி-(௰௮ இல் பாதி௯) நவக்கிரகங்கள் ஆலும், படுத்தும்-வாதைப்படுத்தும, எமன்கை-எமன்கைகளி(ன்), பதின் எட்டினில் பதின்மூன்று அரை ஏக-அரைப்பு உண்ணிட ஏன் (௰௮ இல் ௰௩½, போக ௪½)னால் அரைசெக்கினால் அரைப்புண்ணிட எதுக்கு? பதின்எட்டு இன், இல் பதின் அஞ்சு அது இலா குண பதைப்பு-(௰௮ இல் ௰௫ போக நீக்கு ௩) முக்குணப பதைப்பையும், அடைக்கில்-அடக்கினால், பதின் எட்டு இன் இல் பது இன் எழு இல்- அருள்-(௰௮ இல் ௰௭ போனால் நின்றது ௧) ஓரருளாகிய, ஓர்ஞானம்-வெளிபபட்டு இடும, வெளிப்படும். (எ-று.)

நாலரையெனவ நதனை 'எமன்'கைபோடு இடையில் யகரஇ சேர்த்து எமன்கையினால் எனக்கொண்டு, நின்ற அரையைசெக்கு முன் கூட்டி அரைக்குஞ்செக்கு எனபபொருள் கொள்க.

முக்குணமாவன:—தாமசம், இராஜசம், சாத்வீகம். (18)

பத்தோன்ப திற்பதி னொன்றேக வாழ்ந்துறம் பண்ணறியா
பத்தோன்ப திற்பத் தரைபோக நின்றதைப் பற்றல்விடும்
பத்தோன் பதிலொரு எட்டரை போனத்தைப் பார்சிவனாய்
பத்தோன்ப திற்பதினொன்றே கியசித்தி பாலிக்குமே.

(எ-து) பத்து ஒன்பது இல் பதின்ஒன்று ஏகவாழ்ந்து-(௰௯ இல் ௰௧ ஏக நின்றது ௮) அஷ்ட ஐஸ்வரியங்களோடு கூடிவாழ்ந்து(ம்), அறம்-தர்மத்தை, பண்ண அறியா-செய்யாத, பத்து ஒன்பது இல்பத்து அரைபோகின்றது ஐ-(௰௯ இல் ௰ஐ ஏக நீக்கு அஐ) எட்டரை, பற்றல்விடும்-தொடர்ந்து சிநேகித்தல் விட்டுவிடும். பத்து ஒன்பது இல் ஒ நவெட்டும் அரைபோன அத்தை-(௰௯ இல் அஐ யேகின்றது ௰ஐ)சிவ-பத்தரை சிவனைப் பார்-பரமசிவனைப்பார், பத்து ஒன்பது இல் பது இன் ஒன்றாகிய சித்தி-(௰௯ இல் ௰௧ போக நின்றது ௮)அட்டமாசித்திகளும் பாலிக்கும் - கிடைக்கும் (எ-று)

எட்டர் என்பது மூடர் இரண்டனுருபு சேர எட்டரையா யினவாறு காண்க. பத்தர் என்பது அடியார் இரண்டனுருபு கொள்ள பத்தரை எனவே சிவபத்தரையெனக் குறித்தபடி. (19)

இருபது நான்மா காணத் தினிதிட மென்று நெஞ்சே!
யிருபதி னிற்பாதி யிந்திரி யங்கணீ யன்றியியங்கா
இருபது கான முகத்துக் கிசைபூசை யியற்றிறையல்
இருபது மாவுற் றிருக்கமெய்ஞ் ஞான மிசைந்திடுமே.

(எ-து) நெஞ்சே-மனமே இருபது நால்மாகாணம் அத்து-(௨௰ நாலும்மா ௪) அந்தக்கரணங்கள் நாலிலும், இனி-இனிமேல், நீத்திடம் என்று-இடமானவனென்று, இருபது இல்பாதி இந்திரியங்கள்-(௨௰இல் பாதி ௰) தசேந்திரியங்களும், நீ-அன்றி இயங்கு ஆ-நீயல்லாமல் இயங்கமாட்டாது. இருபதுகால்முகத்துக்கு-(௨௰ வ-ரு)பரமசிவனுடைய ஐம்முகங்களுக்கும், இசை பூசை-ஒத்த பூசை, இயற்று இறையல்-செய்தாயாகில், இருபது மாஉற்றிருக்கும் தக்க மெய் ஞானம்-(௨௰-ப-க) பரமசிவத்துடனே ஒன்றுபட்டிருக்க மெய்ஞ்ஞான மிசைந்திடும். (எ-று.)

ஞானேந்திரியம் ஐந்து, கர்மேந்திரியம் ஐந்து, இவையே தசேந்திரியமாம். (20)

இருபத்தி லொன்றினி லீரோன்ப தற்றுசை யீனமென்றே
இருபத்தி லொன்றுட னேழு மியம்பு மிவாசையற்றால்
இருபத்தி லொன்றினி லீரோன் பதிவுலகத் திரோமிருப்போம்
இருபத்தி லொன்றினி லிருபதிற் சூலி யிருப்பிடத்தே

(எ-று) இருபத்து ஒன்று இன் இல் ஈரொன்பது அற்று ஆசை அற்று-(உயிசா இல் (உ-சு)-யஅ போனால் நின்றது ந) மூவாசையும், ஈனம் என்று-ஈனமாயிருக்குமென்று, இருபத்து ஒன்று உடன் ஏழும் இயம்பும் (உயிகஉம் எஉம் உயிஅ) இருபத்தெட்டாகமங்களுஞ் சொல்லும், இ-ஆசை அற்றால்-இம்மூவாசையும் அற்றிருந்தால், இருபத்து ஒன்று இன் இல் ஈரொன்பது இல் உலகத்து-(உயிக இல் யிஅ போக-ரு) மூவுலகத்திலும் இரோம் நாம் வசிக்கமாட்டோம். (மற்றெங்கனில்) இருபத்து ஒன்றுஇன் இல் இருபது இல் சூலி-(உயிக இல் உயி போகநின்றது க) ஒரு சூலாயுதத்தையுடைய பரமசிவன், இருப்பு இடத்தே-இருக்குமிடத்திலே, இருப்போம் குடியிருப்போம் (எ-று) (21)

இருபத் திரண்டி லிருபத்தோன் றில்லையா ணவமறியா
இருபத் திரண்டி லிருபதிற் காமிய மின்பதுன்பம்
இருபத் திரண்டினி லீரோன்ப தில்லது மாயையுரு
இருபத் திரண்டோ டிருமூன் றியம்பு மலமிதுவே.

(எ-து) இருபத்து இரண்டினில் இருபத்து ஒன்று இல்லை ஆணவம், (உயிஉ இல் உயிக போக நின்றது க) ஆணவமொன்றே அறியா ஆன்மாக்கட்கு அறியாமை. இருபத்து இரண்டினில் இருபதுஇல் காமியம்-(உயிஉ இல் உயிபோக நின்றது உ) இருவிதகாமியங்களும், இன்பம் துன்பம்-(ஆன்மாக்கட்கு) சுகதுக்கங்களாம். இருபத்து இரண்டினில் ஈரொன்பது இல்லது மாயை-(உயிஉ இல் (உXசு) யஅ இல்லாதது ச) (தனு, கரண, புவன, போகங்கள்) நாலும் மாயையின் உருவாம். இருபத்து இரண்டு உடன் இரு மூன்று இயம்பும்-(உயிஉ உம் (உ-X-ந) சாஉம்-உயிஅ) இருபத்தெட்டாகமங்களுஞ் சொல்லும், மலம்-திரிமலங்கள், இதுவே-இவையே (எ-று.) (22)

இருபத்து மூன்றினி லீரோன்ப தில்லை சாதாக்கியமெய்
இருபத்து மூன்றினி லீரோன்ப தில்லா தியல்முகமாய்
இருபத்து மூன்றினி லீருறி லோனறுமில் லாதுகரம்
இருபத்து மூன்றினி லீரோன்ப தற்றிறை யிற்சிவமே.

(எ-று) இருபத்து மூன்று இன் இல் ஈரொன்பது இல்லை சாதாக்கியம் ஏ-(உகூல் (உ X கூ)மிஅ இல்லையானல்நு) பஞ்ச சாதாக்கியமாய், இருபத்து மூன்று இன் இல் ஈரொன்பது இல்லாது இயல்முகம் ஆய்-ஐந்திருமுகங்களுடன், இருபத்துமூன்று இன் இல் இரு ஆறு உம் ஒன்று உம் இல் ஆது கரம்-(உமிகூல் (உ.X கூ-மிஉ-ம் க-ம்) மிகூ இல்லாததுமி ) தசக்கரங்களும், இருபத்து மூன்று இன் இல் இரு ஒன்பது அற்று இறை இல் சிவம் ஏ-(உமிஉ-ல் (உமிகூ) மிஅ போக-நு)பஞ்ச கர்த்தாக்களிலே சதாசிவம் இவ்வடைவாயிருக்கும் (எ-று.)

சாதாக்கியம் 5:—அவையாவன. சிவசாதாக்கியம் அமூர்த்த சாதாக்கியம், மூர்த்தி சாதாக்கியம், கன்மசாதாக்கியம் கத்ரு சாதாக்கியம், இனையவாம்.

இவ்வைந்து சாதாக்கியங்களுள் சிவசாதாக்கியம் பரம் பொருளுருவாயிருக்கும்.

அமூர்த்த சாதாக்கியம் அழற்பிழம் புருவாயிருக்கும்.

மூர்த்திசாதாக்கியம் ஒருமுகம் முக்கண்ணும், இருகையும், இருகாலுமாய்ப் படிகநிறமாயிருக்கும்.

கத்துருசாதாக்கியம்: நாலுமுகமும் எட்டுகையும் பனிரண்டு கண்களுமாய் மகேஸ்வர வடிவமாயிருக்கும்.

கன்மசாதாக்கியம்: இலிங்கமும் பீடமுமாய்ப் பிரபஞ்சமெங்கும் பிண்டீகரித்துக்கொண்டிருக்கும்.

இனி, சிவம் அமூர்த்தியிலே கூடும். மூர்த்தி கத்துருவிலே கூடும். கத்துரு கன்மத்திலே கூடும். இப்படி யொன்றிலேயொன்று கூடியொரு திருமேனியாம்.

இப்பால் ஒரு தீபத்திற் பலதீபம் உண்டாயதுபோல சதாசிவத்தில் மகேசுரனும், மகேசுரனில் உருத்திரனும். உருத்திரனில் விண்டுவும், விண்டுவில் பிரம்மாவும் ஆகச் சகளீகரிக்கும். (சிட்டானுபூதியிற் காண்க.

இருபத்து நாலினி னீயுமொருவ னெனவிருந்தே
இருபத்து நாலின் பயனையெல் லாமெனக் கேயளித்தா
இருபத்து நாலின் பயனினிப் போது மெனக்குநெஞ்சே!
இருபத்து நாலினுக் கப்பாலுக் கப்பாலா யிருக்கவுன்னே.

(எ-து) நெஞ்சே- மனமே! இருபத்துநாலில்-இருபத்துநாலு தத்துவங்களில், நீயும் ஒருவன் என இருந்து எ-நீயுமொரு தத்துவமாக இருந்துகொண்டு, (எல்லாத்தத்துவங்களைப் போலவுஞ் சும்மாயிராமல்] இருபத்துநாலு இன்பயன் ஐஎல்லாம்-இருபத்து நான்கு தத்துவத்து முண்டாகிய விஷயப் பயனைத்தையும், எனக்கு ஏ அளித்தாய் எனக்குத்தானே யனுபவிக்கத்தக்க தாகத்தந்தாய், ஆதலால் இனி எனக்கு-இனிமேலெனக்கு, இருபத்து நால் இன் பயன்போது-இருபத்து நான்கு தத்துவத்தும் அனுபவித்த பலன் போதும். இருபத்து நாலுக்கு அப்பாலுக்கு அப்பால்-இருபத்துநான்கு தத்துவங்கட்கும மேற்பட்ட வித்தியாதத்துவமும் கடந்த சிவத்துவத்தில், இருக்க-நாம் பிறவாதிருக்க, உன் ஏ-நினைவாய் (எ-று.) (24)

ஆன்மதத்துவம் 24.

இருபத்தி யஞ்சினி லீரைந்துபோனதை யிராகுண்ணல்போல்
இருபத்தி யஞ்சினி லிருபத்தோன் றில்லாப் பிறப்புணவேன்
இருபத்தி யஞ்சுட னஞ்சினைச் சூடியை யேற்றுநெஞ்சே!
இருபத்தி யஞ்செனு மவதாரத் தோனோ டிருக்கவுன்னே

(எ-து) நெஞ்சே-மனமே, இருபத்து அஞ்சினில் இரு ஐந்து போனதை- (உயி௫-ல் (யX௫) யபோனால்) நின்றது யிருபதினைந்தானாட் பூரணசந்திரனை, இராகு உண்ணல் போல்-செம்பாம்பு உண்பதுபோல, இருபத்து அஞ்சினில் இருபத்து ஒன்று இல்லா பிறப்பு-(உயி௫-ல் உபயோக-ச) நால்வகைப் பிறப்பை உண்ணல்என் உண்டுவருதல் என்? இருபத்து அஞ்சுடன் அஞ்சினை சூடியை ஏற்று (உயி௫-ம் ௫-ம் ௲ய) ௲ யநாள் கொண்டது ஒரு திங்கள்) திங்களணிந்தவரைப் புகழ்ந்து போற்றுவாயாகில், இருபத்து அஞ்சு எனும் அவதாரத்தோன் ஓடு இருக்கவுண்டு-இருபத்தைந்து அவதாரமாகிய பரமேஸ்வரனுடனே ஐக்கியமாயிருக்க வுண்டாம் (எ-று.)

பிறப்புண்ணலேன் என்றதனால் அணிமாதியெண் வகைப்பிற விபிலும் பிறந்து மாளவேதுக்கு என்றபடியும்

இருபத்தைந்திரு அவதாரங்களாவன:—

'சந்திரனணிந்ததும், உமைத்துடையிருந்ததும், சாலமான் விடையானதும் அசுரர்திரி புரதகனமும், அலந்திடு சலந்தரன் சிரந்தனை யிடந்தும் ஆணையுரிதக்கன் வதனமும், அந்தவிரி பாகமும் அர்த்தனாரீசுரமும் அர்ச்சுனன் பாசுபதமும், ஆங்காரன் வரிமுதடு தேடுசண்டேசுரன் அருளாலகாலமிட்டம், விந்தைமால் சக்கரம் விநாயகன் கனிபெறு வேலருப தேசநடனம், வீரபத்மாசன தெக்ஷண மூர்த்தமும்ப விரிஞ்சனரி கேடுமுதலே. யென்பதனாற் காண்க. (25)

இருபத்தி யாறி லிருபத்தோன் றில்லேகீழ் மேலியம்ப
இருபத்தி யாறி லிருபத்தோன் றில்லே யினிமற்றியால்
இருபத்தி யாறி லிருபத் தோன்றிற்கேவல சகலசுத்தம்
இருபத்தி யாறி லிருநால தற்ற லவத்தை யிதே.

(ள-து) இருபத்து ஆறில் இருபத்து ஒன்று இல்லேகீழ் - (உயகூ-ல்-உயகஎக நீக்கு-டு) கீழாலவத்தையைந்தும், மேல் இயம்ப-மேலால வத்தையைக் கூற-இருபத்து ஆறில் இருபத்து ஒன்றில்லே-ஐந்தும். இனி மற்று ஆல்-இனி யிதுவன்றியும், இருபத்து ஆறில் இருபத்து மூன்றுஇல் அவத்தைகளும்- (உகூ-ல் உயஙு இல்லாதது ங) மூவத்தையும், கூடி இருபத்து அறில் இரு நால் அது அற்ற அவத்தை- (உயகூ-ல் (உX அ) அற்றது யஅ) ஆன் மாபடுகிற பதினெண் அவத்தைகளும், இது ஏ-இதுவே (எ-று)

மேலாலவத்தை.

கீழாலவத்தை.

தனிமூலவத்தை.—கேவலம், சகலம், சுத்தம். (26)

இருபத்தி யேழ்னி லொன்றில்லே யேனட யினியனேன்ன
இருபத்தி யேழினி லொன்றின்ன டியையுன் னேன்றுரையே
இருபத்தி யேழினி லொன்று கிலும்வை யின்றேலேமனார்
இருபத்தி யேழினி லொன்றி லியம்பு மினிநம்மையே.

(எ-து) நெஞ்சே-மனமே! இருபத்து எழினில்-இருபத்தேழு நட்சத்திரங்களுள் ஒன்று இல்லையேல்-ஒன்றாகிய அத்தம் என்னும் செல்வம் இல்லையாகில், உனியன் என்ன நட-இனிமையுடையான் எனனும்படி, இருபத்து எழினில்- இருபத்தேழு நட்சத்திரங்களுள் ஒன்றின்-ஒன்றாகிய (மூலம்) மூலகாரணத்தின், அடியைதிருவடிகளை, உன்-நினை, என் உறையே-என்னுடைய சொல்லை, இருபத்து எழினில் ஒன்றாக இருபத்து எழுநட்சத்திரங்களுள் ஒன்று (கேட்டை) கேள்வியாக, வை-மனதில் வைப்பாய். இன்றேல்-இல்லாவிட்டால். எமனார் எமதருமர், இருபத்து எழினில் ஒன்றில்-இருபத்தேழில் ஒன்று (சதயம்) சதைபபதில் இயம்பும்-சொல்லுவன் இனி நம்மை-இனிமீது நம்மை. (ப-ரு.)

இல்லையேல் என்று கூறினமையால் இருந்தாலும் எனப்பெறப்பட்டது. (27)

இருபத்தி யெட்டினி மூன்றில்ல தேன்பாமா யாவதிகள்
இறிபத்தி யெட்டினில் வேறில்லை யென்பர்வே தாக்திகடவுன்
இருபத்தி யெட்டெ னெட்ஞ்சித் தாநதி யியம்பிடுவோன்
இருபத்தி யெட்டெ ஞற்பத்தெட் டும்பொதுத் தத்துவகே

(எ-து) மாயாவாதிகள்-மாயையே பிரம்மமென வாதிப்போர் இருபத்து எட்டினில மூன்று இல்லது என்பர் (உம்-அ-ல் ௩. இல்லாலாதது உபநி) இருபத்தைந்து தத்துவங்கள்தான் என்று சொல்லுபவர் வேதாந்திகள-அகம பிரமமமாயுடையவர்கள், இருபத்து எட்டினில் வேறு இல்லையென்பர-இருபத்தெட்டு தத்துவங்களையன்றி வேறொதுமில்லை என்பார்கள். சித்தாந்தி-சைவ சித்தாந்திகள் இருபத்து எட்டுடன் எட்டும் இயம்பிடுவான்-(உம்-அ-ம் அம் ௩-யிசு) முப்பத்தாறு தத்துவங்களையும் சொல்லுவன். இருபத்து எட்டுடன் நால்பத்தெட்டும்- (உம்-அ-ம் சம்-அ-ம் கூ-பிசு) தொண்ணூற்றாறும், பொது தத்துவம்- (அனைவர்க்கும்) பொதுவான தத்துவம (எ-று) (28)

இருபத்தி யொன்பது மேழுஞற் றத்துவ மீதுயிரோ
இருபத்தி யொன்பது மேழுமறி யாதிது சேடங்காண்
இருபத்தி யொன்பது மேழு மறிந்ததுதா னெவ்வுயிரோ
இருபத்தி யொன்பது மேழு மறிந்தார்க் கருளுயிரே.

(எ-று) இருபத்து ஒன்பதும் ஏழும் நல்தத்துவம்-(உ௰௯-ம்-௩௰௬) சித்தாந்திகள்) கூறும், முப்பத்தாறு தத்துவங்களை நல்லது (ஆனால்) ஈதுஉயிரோ-(இத்தத்துவங்களுள் ஒன்றும்உயிரல்ல அதனால், இதுஉயிரா, இருபத்து ஒன்பதும் ஏழும் அறியாது-முப்பத்தாறு தத்துவங்களையும் தானறியாமை சேடங் காணும் இருபத்து ஒன்பதும் ஏழும் அறிந்ததுதான்-எ உயிரா-முப்பத்தாறு தத்துவங்களையும் அறிந்தவெவ்வுயிரோ,(அவ்வுயிர் இருபத்து ஒன்பதும் ஏழும் அறிந்தார்க்கு முப்பத்தாறு தத்துவங்களையும் அறிந்தவர்க்கு, அருள்உயிர்-அருளுயிராயிருக்கும் (எ-று.)

௩௰௬ தத்துவங்களாவன:—

| | | | |
|---|---|---|---|
| ஸ்ரோத்திராதி | ௫ | சுத்தவித்தையாதி | ௫ |
| மனமாதி | ௪ | சத்தமாதி | ௫ |
| காலமாதி | ௭ | வாக்காதி | ௫ |
| வசனாதி | ௫ | ஆகமொத்தம். | ௩௰௬. |

(29)

முப்பதிற்பாதி முகமாதர் மீதினின் மோகமெல்லாம்
முப்பது வாகு மொழியினெஞ் சேமோக மற்றுநீத்த
முப்பதிற் பாதி தன்மையின் பாத முயல்பிறவி
முப்பதுந் தீருமனமே நன் முத்தி மூலமிதே.

(எ-று) நெஞ்சே! மனமே, மொழியின்-சொன்னால், முப்பது இல் பாதி முகமாதர் மோகம் எல்லாம்-(௩௰-ல் பாதி ௰௫) பூரண சந்திரனைப்போன்ற முகமுடைய மாதர்களுடைய காதல் அனைத்தும், முப்பது ஆடும்-மூப்பாடும், ஆதலால், மோகம் அற்று-மேற்படி. காதலை நீக்கி நித்தம்-தினமும், முப்பது இல் பாதி தன்மையன் பாதம்-(௩௰-ல் பாதி ௰௫) பதினைந்து தன்மைகளையுடைய பரமேஸ்வரன் பாதங்களை, (முயல்-தியானிப்பது) முயற்சிசெய். இன்னணமிருந்தால், பிறவி முப்பதுந்தீரும்-முப்பது பிறவிகளுந் தீரும். (ஆதலால்) மனமே-நெஞ்சே, நல் முத்திக்கு-மெஞ்ஞான வீட்டிற்கு இதே மூலம்-இதுவே மூல காரணம். (எ-று)

௰௫ தன்மைகளாவன:—மனம், புத்தி, சித்தம், அகங்காரம், உள்ளம். அகாரம், உகாரம், மகாரம், விந்து நாதம், பிரம்மா, விஷ்ணு, உருத்திரன், மகேச்வரன், சதாசிவன், இனையவாம். (30)

முப்பத் தோரு தத்துவமு யன்மாயை சூக்கும் மோய்தத் வுடல்
முப்பத்தி யோன்றினில் மூவேஎன்பதில் லதுதூலமேய்யாம்
முப்பத்தோரு தத்துவ மோழியுமாக்கு மாயை மோகமேய்யாம்
முப்பத்தி யோன்றினின் முப்பதில் லான்செய்தமாயைகண்டே

(எ-து.) முப்பத்து ஒருதத்துவம்-முப்பத்தோரு தத்துவங்களும், முயல்-(ஆன்மாவைப் பற்றி) பிரவேசிக்கும், மாயை-அசுத்தமாயைக்கு, சூக்குமம் ஒரத உடல்-சூக்கும தேகமாயிருக்கும். முப்பது ஒன்றினில் மூன்று ஒன்பது இல்லது தூலமெய் ஆம்-(௩௰௧-ல்) (௩ X ௯-) (௨௰௭ இல்லாதது ௪) (தநு கரண புவன போக மாகிய) நாலுந் தூலதேகமா யிருக்கும், முப்பத்து ஒரு தத்துவம்-முப்பத்தோரு தத்துவங்களும், மொழியும்-சொல்லப்படாநின்ற மாமாயை-சுத்தமாயைக்கு, மோக மெய் ஆம்-ஆசையாகிய தேகமாம். முப்பத்து ஒன்றினில் முப்பது இல்லான்-௩௰௧-ல் ௩௰ இல்லாதது-௧) ஒருவனே யாகிய பரமசிவன், செய்த மாயை-உண்டாக்கிய மாயை, இரண்டே-இரண்டுதான். (எ-று.)

முப்பத்தோரு தத்துவங்களாவன —

| | | | |
|---|---|---|---|
| சுரோத்திராதி | 5 | வசனாதி | 5 |
| சத்தமாதி | 5 | மனமாதி | 4 |
| வாக்கு | 5 | காலமாதி | 7 |
| | | | (31) |

முப்பத்திரண்டு முழக்குட லுந்திக்கு முப்போழுதும்
முப்பத்திரண்டு பிடி சோறருந்தியும் முந்துமிருகம்
முப்பத்திரண்டா னுபனிடத மோதிய மூலந்தன்னை
முப்பத்திரண்டுற்ற வீணையிற் பாடிட முத்தியுண்டே.

(எ-து) முப்பத்து இரண்டு முழம் குடல் உந்திக்கு-முப்பத்திரண்டு முழமுள்ள குடல் சேர்ந்த வயிற்றிற்கு, முப்பொழுதும்-மூன்றுவேளையும் முப்பத்து இரண்டு பிடி சோறு அருந்தியும்-முப்பத்திரண்டு பிடி சாதஞ் சாப்பிட்டும் முப்பத்து இரண்டு ஆண் உபநிடதம் ஓதிய மூலம் தன்னை-*(ஸ்ரீருத்ரமாதி) முப்பத்திரண்டு உபநிடதங்களாலுஞ் சொல்லப்பட்ட மூலகாரண(மான

பரமசிவ)த்தை, முப்பத்திரண்டு உற்ற, வீணையில் பாடிட-யாழ் முதலாகிய முப்பத்திரண்டு வீணையினாலும் ஒரு மனதாய்ப்பாட, முத்தி உண்டே-மோட்சம உண்டாகும்-(எ-று.) ஏ-அசை.

* முப்பத்திரண்டு உபநிடதங்களையும் (தொகை) அகராதியிற் காண்க.

அவனவன் கையால் அவனவன் உடலெப்படி எண்சாணுடம்புக்குட் படுமோ அதுபோலவே அவனவன் முழத்திலே ௩௰௨ முழக்கூடலும், அவனவன் பிடியிலே ௩௰௨ பிடி யன்னமுமாகக் கொள்ளத் தக்கது. வயிற்றினுள் ளிருக்குங் குடலளவும, உண்ணுமுணாவளவும் இந்நூலி லிப்பாட்டிற் கூறியதை மிக வியக்கத் தக்கது. இவ்வற்புதமான விஷயத்தைத் தற்கால ஆங்கில வைத்தியர்களுங் கண்டிலர்கள். எத்தகைய தேகதத்துவசாத்திரங்களிலும், சொல்லியிரா வென்பது திண்ணம்.

இனி உண்ணும் உணவு, ௩௰௨ முழக்குடலுக்கு ஒரு பிடி சாதம் எனத் தெரியவந்தது. (32)

முப்பத்து மூன்றினின் மூவா றிலாதது தன்மையதாம்
முப்பத்து மூன்றினின் முப்பது போனது முன்னிலையாம்
முப்பத்து மூன்றினின் முப்பத் திரண்டில் லதேற்கை
முப்பத்து மூன்றினின் முப்பதில் லாதகண் முப்பத்திறப்பே.

(இ-ள்.) முப்பத்து மூன்றினில் மூ ஆறு இல்லாதது தன்மை அது ஆம்-(௩௰௩-ல்(௩×௬) ௰௮ இல்லாதது ௧௫) பதினைந்து வகையா சிவனிருப்பது தன்மை ஆகும், முப்பத்து மூன்றினில் முப்பது போனது முன்னிலை ஆம்-(௩௰௩-ல்-௩௰ போக ௩) (அவன்-அவள் அது எனும்) மூன்றும முன்னிலை யாகும். முப்பத்து மூன்றினில் முப்பத்து இரண்டு இல்லது ஏ படர்க்கை-௩௰௩-ல் ௩௰௨-இல்லாதது-௧) ஒன்றுபட்டிருப்பதுவே படர்க்கையாகும. முப்பத்து மூன்றினில் முப்பது இல்லாத கண்-(௩௰௩-ல் ௩௰ இல்லாதது ௩) முக்கண்களை யுடைய பரமசிவத்தின் திற்கிற நிலை யிப்படியாம் (எ-று)

தன்மைநிலை பதினைந் தெவ்வாறெனில்:—மனம், புத்தி, சித்தம், அகங்காரம், உள்ளம், ஆ ௫.

இவை யைந்தையுஞ் செலுத்துவதும் அக்ஷரங்கள்.—அகாரம, உகாரம, மகாரம், விந்து, நாதம் ஆகிய ரு.

இவைகட்டு அதிதேவதை—பிரம்மா, விஷ்ணு, ருத்திரன, மகேஸ்வரன், சதாசிவன் ஆகிய ரு.

அவனவனது வென, வவைவமூன்றுவெகி.

ஒன்றுபட வெவ்வாறெனின்.—உடலும் உயிர்போலவும, சந்தமும அத்தமும போலவும், பூவும் மணமும் போலவுமாம. (33)

முப்பத்து நாலினின் முப்பதி லாதது மூவிரண்டும்
முப்பத்து நாலினின் மூவெட்டி லாதது முன்னுன்டுதான்
முப்பத்து நாலினின் மூவாறிலாதது மோதி லிரண்டும்
முப்பத்து நாலினின் முப்பதின் வேத மொழியாதாம்.

(எ-து) முப்பத்து நாலினில் முப்பது இல்லாததும்-(௩௰௪-ல் ௩௰ இல்லாதது ௪) நாற்கோணமுடைய மூலாதாரமும், மூஇரண்டும-(௩×௨-௬, ஆறுகோணமுடைய சுவாதிஷ்டானமும முப்பத்துநாலினில் மூஎட்டு இல்லாததும்-(௩×௮ ல் (௩௰௪-ல் (௩×௮) ௨௰௪ இல்லாதது ௰) பத்து கோணமுடைய மணிபூரகமும், மூன்று நான்கும் (௩×௪-௰௨) பனிரண்டு கோணமுடைய அநாகதமும், முப்பத்து நாலினில் மூஆறு இல்லாததும் ௩௰௪-ல் (௩×௬) ௰௮ இல்லாதது ௰௬) பதினாறு கோணமுடைய விசுத்தியும், இருகோணமுடைய ஆக்கினையும், முப்பத்து நாலில் முப்பதுஇல்வேதம், (௩௰௪-ல் ௩௰ இல்லாதது ௪) நான்குவேதங்களுமொழி-சொல்லப்படாநின்ற, ஆதாரம்-ஆதாரங்களாம் (எ-று.) ஆதாரயோக நிராதாரயோக திருவுந்தி

உண்மைவிளக்கம்.

ஆறுதாரத்தலக்கு நிலையும விநாயகரவல்.

(34)

ஒன்

ண்டும

அசு

| | இடம். | இதழ் | எழுத்து | வசிப்பவர் |
|---|---|---|---|---|
| 1. மூலாதாரத்திற்கு | சலத்துவாரத்துக்கும் மலத்துவாரத்துக்கும் மத்தியில் (குண்டலி) | ௪ | ௪ | வல்லபையும் விநாயகரும |
| 2. சுவாதிஷ்டானம் | மூலாதாரத்துக்கும இருவிரல் மேல் | ௬ | ௬ | சரஸ்வதியும் பிரமமாவும் |
| 3. மணிபூரகம | தொப்புள் | ௰ | ௰ | இலக்குமியும் விண்டுவும் |
| 4. அநாகதம | மார்பிதயம் | ௰௨ | ௰௨ | உருத்திரனும் |
| 5. விசுத்தி. | அநாகதத்துக்கு ௰௨ விரற்கடைக்குமேல் | ௰௬ | ௰௬ | மஹேசனும் |
| ௬. ஆக்ஞை. தம், அக | நெற்றிநடு | ௨ | ௨ | சதாசிவமும் |

முப்பத்தி யஞ்சுற் றல்சாக் கிரஞ்சொற்பன மொண்கருவி
முப்பத்தி யஞ்சினின் மும்மூன்று மொன்றில்லைமூன்றே சுத்முதி
முப்பத்தி யஞ்சினின் முப்பத்து மூன்றில்லதேதுரியம்
முப்பத்தி யஞ்சினின் முப்பத்து நாலேக தீதமுன்னே.

(எ-து.) முப்பத்து அஞ்சு உற்றல் சாக்கிரம்-முப்பத்தைந்து கருவிகளுங்கூடி நின்ற அவதரமே சாக்கிரம், ஒண்கருவி முப்பத்து அஞ்சினில் மும்மூன்றும் ஒன்று இல்லை சொற்பனம் (௩௰௫-ல்(௩ X ௩ )=[௯-ம் ௧-ம்] ௰ இல்லையாகில் ௨௰௫) முப்பத்தைந்து கருவிகளில் இருபத்தைந்து கருவிகள் கூடிய அவதரமே சொற்பனம், மூன்றே சுழுத்தி-கருவிமூன் றுங்கூடி நின்ற அவசரமே சுழுத்தி, முப்பத்து அஞ்சினில் முப்பத்துமூன்று இல்லதே துரியம்-(௩௰௫-ல் ௩௰௩ இல்லாதது ௨) (கருவி காரணாதிகள்)-இரண்டும்-கூடி நின்ற-அவசரமே துரியம், முப்பத்தி அஞ்சினில் முப்பத்து நால் ஏக அதீதம்-(௩௰௫-ல் ௩௰௪ ஏக-௧) ஒன்றாகிய பிராண வாயு மாத்திரம் (துரியததில்) கூடி நின்ற அவசரமே துரியாதீதம். உன்-நினை (மனமே) (எ-று.)

ஞானேந்திரியங்கள் ௫-ம், தன்மாத்திரைகள் ௫-ம், கன்மேந்திரியங்கள் ௫-ம், வசனாதிகள் ௫-ம், அந்தக்கரணங்கள் வாயுக்கள் ௰-ம், மூலப்பிரகிருதி ௧-ம் ஆக ௩௫.

இனி ஆன்மாவும், மூலப்பிரகிருதியும், புருவ மத்தியில் இருப்பதே சாக்கிரம்.

சாக்கிரதையா யிருத்தலினாலே சாக்கிரம் என்ற பேராயிற்று.

ஞானேந்திரியம் 5-ம், கன்மேந்திரியம் 5-ம், நிற்க மற்ற 25-ம் கூடி கண்டத்தானத்தில் நின்ற விடமே சொற்பனம்.

மூலப்பிரகிருதி யாமென்னில்:—ஆன்மாவுக்கு மந்திரிபோன்றது. எங்ஙன மெனில்: ஆன்மாவுக்கு அறியுந்தன்மை யிருந்தும் நடக்குந்தன்மை யின்மையாலும், மூலப்பிரகிருதிக்கு நடக்குந்தன்மை யிருந்தும் அறியுந் தன்மை யின்மையாலும், குருடன் முதுகில் முடவன் ஏறிக்கொண்டு குருடன் காலைக்கொண்டும் முடவன் கண்ணைக் கொண்டும் திரிவதுபோல ஆன்மா அசு நடாததுமாம்.

(ஆன்மா கண்டத்தானம் வந்தவுடனே யிந்திரியம் அவ்விடத்தி லில்லாதபடியினாலே வியாத்தி குலைந்து அவத்தைப் பொருந்தி) கண்ட கனவைப் பிறருக்குச் சொல்லுகையினாலேயே சொற்பனம் என்றபேர்.

சித்தம்-௧, பிராணவாயு-௧, மூலப்பிரகிருதி-௧, ஆயமூன் கருவிகளுடனே ஆன்மா இருதய ஸ்தானம் நின்றதே சுழுத்தி.

உள்ளே புயிர்ப்பாயிருத்தலினால் சுழுத்தி யென்றபேர்.

கருவி கரணாதிகள் உம் இருதயத் தானத்தில் நிற்க, பிராணவாயுவும், மூலப்பிரகிருதியும் நாபித்தானத்தில் ஆன்மாவுடன்கூடி நின்றதே துரியம்.

ஆன்மா நாபித்தானம் வந்தவுடனே சித்தம் அங்கில்லாதபடியினாலே சிந்தனை யற்று விசுவாச மெத்தவுண்டாகையினாலே துரிய மென்றபேர்.

துரியத்திலே பிராணவாயு வொன்று நிற்க, மூலப் பிரகிருதி யொன்றுடனே ஆன்மா மூலாதாரத்திலே வந்திருக்கிற அவதரம் துரியாதீதமாம்.

மூலாதார மென்னும் அந்தப்புரத்திலே பிராணவாயு இல்லாதபடியினாலும், உச்வாசம் நிச்வாசம் அடங்கி கருவிகரணாதிகளென்னும் பற்றெல்லாம் அற்று ஆன்மாதானே தானாக மகோன்மத்தா யிருந்து தன்னுடைய பரிசனங்களையுந் தானறியாமல் அதீதப்பட் டிருக்கையினாலே துரியாதீத மென்றும் பேராச்சுது.

(35)

முப்பத்தி யாறினின் முப்பத்தஞ் சில்யா மொழியன்னைதான்
முப்பத்தி யாறினின் முப்பத்தஞ் சில்லாளையவன் மூவரையெழுப்ப
முப்பத்தி யாறினின் முப்பத்து மூன்றற்ற சேயிலொன்று
முப்பத்தி யாறினின் முப்பத்தஞ் சின்மல மோடெழுத்தே.

(எ-து.) முப்பத்து ஆறினில் முப்பத்தஞ்சு இல்லாமொழி அன்னைதான்-(௩௰௬-ல் ௩௰௫ இல்லாதது ௧)-(பஞ்சசத்திகளுள்-ஒருவளாகிய கிரியா சத்தி, யென்னுந்தாய், முப்பத்து ஆறினில் முப்பது அஞ்சு இல்லாளை அவள் மூவரை எழுப்ப-தனக் கொரு மருமகளையும் எழுப்ப, முப்பத்து ஆறினில் முப்பத்து மூன்று அற்ற சேயில் ஒன்று-(௩௰௬-ல் ௩௰௩ அற்றது ௩) காலம்,

நியதி, கலை யென்னும் முப்பிள்ளைகளுள், கலையென்ற பிள்ளை யொருவன், முப்பத்து ஆறினில், முப்பத்து அஞ்சில் மலமோடு எழுத்தே-(௩௰௬-ல் ௩௰௫ இல்லாதது) ஒன்றாகிய ஆணவ மலத்தை யெழுப்பிவிட்டது. (எ-று.)

அன்னை, கிரியாசத்தி, மருமகள். காலம், நியதி, கலை-
மூன்றுபிள்ளைகள். ஆணவம் 1.

ஆன்மா எப்போதும் இச்சா ஞானக்கிரியா சொரூபனுகையாலே, மூலாதார மென்னும் அந்தப் புறத்தைவிட்டு, மூலப்பிரகுருதி யென்னும் மந்திரியுடனே கூடி, நாபித்தானத்துக்கு வர, ஆண்டிருக்கிறப் பிராணவாயு வென்னும் காவற்காரன் வந்து காண, அக்காவற்காரனையும் கூட்டிக்கொண்டு, இருதயத் தானத்துக்குவர, அவ்விட னிருந்த சித்த மென்னும் மன்னவன்வந்து காண, அவனையுங் கூட்டிக்கொண்டு கண்டஸ்தானத்துக் கேக, ஆண்டிருந்த மனம் புத்தி அகங்கார மென்கிற அதிகாரிகள் மூவரும் வசனாதிகளென்னுந் தூதுவருடன் வர, அவர்களையுங் கூட்டிக்கொண்டு மொத்தம் முப்பத்தைந்து பேராக லலாட மென்னும் நேத்திர ஸ்தானத்திலே வந்திரங்கினார்கள். வந்திரங்கி நடுநாயகமாய் ஆன்மா அரசியற்றியபடியாம். (36)

முப்பத்தி யேழினில் முப்பத்தா றில்லா மலத்தாரையுயோ::
முப்பத்தி யேழினில் முப்பத்தஞ் சில்லா மலமுடையோர்
முப்பத்தி யேழினின் முப்பத்தி நாலில்லா மலமுமுள்ளோர்
முப்பத்தி யேழினின் முப்பத்தி நாலில்லா வுயிர்வர்க்கமே.

(எ-று.) முப்பத்து ஏழினில் முப்பத்துஆறு இல்லா மலத்தாரையும்-(௩௰௭-ல் ௩௰௬ இல்லாதது க) ஆணவமென்னும் ஒரு மல முடையவரும, முப்பத்து ஏழினில் முப்பத்து அஞ்சு இல்லா மலம் உடையோர்-பத்து ஏழினில் முப்பத்-௩௰௭-ல் ௩௰௫ இல்லாதது உ) ஆணவம்மாயை யென்னும் இருமலமுடையவர்களும், முப்பத்து ஏழினில் முபபத்து நால் இல்லா மலமும் உள்ளோர்-(௩௰௭-ல் ௩௰௪ போக ௩) ஆணவ மாயை காமிய மென்னும் மும்மல முடையவர்களும், முப்பத்து ஏழினின் முப்பத்து நால் இல்லா வுயிர்வர்க்கமே-(எ-று.) உயிர்வருக்கம ௩-ம் அகராதியிற் காண்ப.

ஆணவமலம் ஒன்றே யுடையார் விஞ்ஞான கலராம்.

ஆணவமலமுங் காமியமலமு முடையார் பிரளயாகலராம். மும்மலமு முடையார் சகலராம்.

1. ஆணவமாவது எதென்னில்:—மும்மலத்துள் முதன்மை யுடையது. ஆன்மாவுக்கு அறியாமையை யுண்டாக்குவது. மற்றிருமலங்களைப்போல ஒரு காலத்திற் பற்றியும், மற்றொரு காலத்தில் விடுவதும் அன்று. எக்காலமும் ஆன்மாவைப் பொருந்தியே யிருக்கும்.

2. ஆணவம் ஆன்மாவைப் பொருந்தியிருந்து செய்யுஞ் செயலேதென்னில்:—முற் பிறவியில் தானடைந்த சரீரமும், தன்னுடைய ஊர், பேர், உற்றார், பெற்றார், புத்திரர் மித்திரர், செய்வினை, வறுமை, வாழ்வு முதலியனவும், இப்பிறவியில் அறியாது. அன்றியும், தான் பூர்வம் அனுபவித்த சொர்க்க நரகங்களையும் இன்னதென் றறியாது. எடுத்த சரீரம் அழிந்ததும் வருஞ்சரீரம் இன்னதென் றறியாது. முதலாவது தன்னைத் தானே யறியாது. இப்படியாக ஆணவம் ஆன்மாவை மறைக்குமென வறிக.

ஆணவம் ஆன்மாவை மறைப்ப தெவ்வாறெனில்:—

பிறவிக் குருட்டிலே பிரபஞ்ச மெல்லாம் மறைத்தாற் போலவும், சமுத்திர சலத்தில் உப்பு கலந்து, இரத்தந் தோன்றாமல் மறைத்தாற்போலவும், செம்பிலே களிம்புநின்று பிரகாசந்தோன்றாமல் மறைத்தாற்போலவும், வீட்டிலே இருள் நின்று பதார்த்தங்க ளெல்லாந் தெரியாமல் மறைத்தாற்போலவும், அரிசியிலே தவிடு நின்று வெண்மை தோற்றாமல் மறைத்தாற் போலவும், விறகிலே நெருப்பு நின்று உஷ்ணந் தோன்றாமல் மறைத்தாற் போலவும், மற்ற போலவுமாம்.

இப்படியாய ஆணவம் ஆன்மாவை விட்டு நீங்குகிற காலமும் முறைமையும் எவ்வாறெனில்:—

பண்ணிய, புண்ணிய பாவ மிரண்டும் தராசு நிறையாய் சமமான காலத்தில் ஆன்மாவுக்கு சிவபத்தியும், குருபத்தியும் உண்டாக ஜனன மரண பயமுண்டாகும். அஃதுண்டாகவே ஆணவமலமானது ஆன்மாவைச் சிறிது விட்டு நீங்கும். அன்னணம் நீங்கவே சத்திநி பாதமுண்டாகும்.

*சத்தினிபாதமாவது ஏதென்னில்:—*

*பிரபஞ்சத்தின்மேல் வெறுப்புண்டாகி, வீட்டின்மேல் விருப்புண்டாதலாம். இஃதுண்டாகவே சிவனுடைய காருண்யமே குருதிருமேனியாய்க் கொண்டுவரும். அக்குரு மூலமாய் அனாதியாய் ஆன்மாவைப் பொருந்தியிருந்த ஆணவமலம் நீங்கும்.*

ஆணவம் ஆன்மாவை விட்டு எவ்வாறு நீங்குமென்னில் —

*பிறவிக் குருடானது தெய்வீகத்தால் நீங்கி முன்காணாததெல்லாம் கண்டாற்போலவும், சந்திர ராத்திரியும், மேகமுகந்தவுடனே கழன்று சொரூபப்பிரகாசமேவிட்ட சொரூபம்போலவும் வீட்டிருள் திருவிளக்கேற்ற நீங்கி பதார்த்தங்களெல்லாங் காண்பித்தாற்போலவும், அரிசியிற் றவிடு கழுவிய உடனே நீங்கி வெண்மை தந்தாற்போலவும், விறகினை நெருப்பு, கடையக்கடைய உஷ்ணம் பிரகாசிக்குமாறு போலவும், பிறவாறுபோலவும், குருவின் சேவையாலும், பார்வையாலும், உபதேசத்தினாலும் மேற்கண்ட மூலமலம் ஆன்மாவைவிட்டு நீங்கிப்போம்.*

காமியமாவது ஏதென்னில் —*ஆன்மாக்கள் செய்யப்பட்டுநின்ற புண்ணியபாவமாம்.*

காமிய மெவ்வாறுண்டாவதேனின் — *மனோவாக்குக் காயங்களாலாம்.*

மனத்தாற் பாவ புண்ணிய முண்டாவ தெப்படி யெனின் — *பரதார மோகம், பரதிரவியக் காதல், நன்றிமறத்தல், கேடுநினைத்தல் முதலிய பாவங்களும், அறநினைத்தல், நன்மைகோரல் முதலிய புண்ணியங்களுமாம்.*

வாக்கினாற் பாவ புண்ணியம் உண்டாவ தெப்படி யெனில்:— *பொய்கூறல், பயனில கூறல், பிறன் கேடுரைத்தல், முதலிய பாவங்களும், மெய்கூறல், பயனுடைய கூறல், ப[illegible] உரைத்தல் முதலிய புண்ணியங்களுமாம்.*

காயத்தினால் பாவ புண்ணியமுண்டாவ தெப்படியெனில்:— *அடித்தல், உதைத்தல், திருடல், முதலிய பாவங்களும், சுமைபிரக்கல், முதலிய புண்ணியங்களுமாம்*

இன்னணம் மனோவாக்குக் காயங்களாற் செய்யப்பட்ட கர்மம் ஆன்மாக்களுக்குப் புண்ணிய மிகுதியாய்ப் பாவஞ்சிறிதானாலும் பாவத்தைப் புண்ணிய மழிக்கமாட்டாது. பாவம் மிகுதியாய்ப் புண்ணியஞ் சிறிதானாலும், புண்ணியத்தைப் பாவமழிக்கமாட்டாது. ஆனபடியினாலே புண்ணியத்தைப் புண்ணியமாகவும், பாவத்தைப் பாவமாகவும் அநுபவிக்கவேண்டும்.

கன்மங்கள் ஆன்மாக்களிடத்திலே பிரகாசிக்கு முறைமையெப்படியெனில்:—ஆயுளும யோகமும் ஏறக்குறையவாதலும், அச்சுமாறிப் பிறத்தலுமாம். இனி, எடுத்தவுடலை நாசமாக்குகிறதும், இனி மேலெடுக்கு முடம்புக்கு உற்பத்தியாவதும், சுகதுக்கமா யிருக்கிறதும் இககவ்மாதா மென்னவறிய.

கன்மத்தின மூவகையே தென்னில்.—சஞ்சிதம், பிராரத்துவம் ஆகாமியம். இவற்றுள்:

சஞ்சிதமாவது:—ஆன்மா வொரு ஜென்மத்திலே தான் செய்த கன்மத்தை யச்சென்மத்திலேயே யநுபவியாமல், சென்மங்கடோறுஞ் சேஷமாக்கிக் கொள்ளலேயாம.

பிராரத்துவமாவது:—ஆன்மா தானெடுத்த சரீரங்கடோறும் அநுபவிக்காநின்ற சுகதுக்கங்களாம்.

ஆகாமியமாவது:—சென்மங்கடோறும் ஏறிவருகிற புண்ணிய பாவமாம்.

முற்கூறியபடியே எடுத்த செனனங்கடோறும் அநுபவிக்காநின்ற சேடமெல்லாம் அநுதுவா வென்னுங் களஞ்சியத்தில் கட்டுப்பட் டிருக்கையினாலே ஆன்மாவுக்கு சஞ்சிதம் ஆஸ்தியாம்.

செனனங்கடோறுஞ் சுகதுக்கங்களை யநுபவித்து, புண்ணிய பாவங்களைப் போக்கிக் கொள்கையினாலே ஆன்மாவுக்கு பிராரத்துவம் செலவாம்.

சுகதுக்கங்களை யநுபவித்துக்கொண்டே புண்ணிய பாவத்தையுந் தேடிக்கொள்ளுகிறதினால் ஆன்மாவுக்கு ஆகாமியந் தேட்டமாம்.

இத்திரிவிதமாய கர்மம் எவ்வாறு நீங்குமெனில்: ஒருவன் நெடுநாளாய்த் தேடிவைத்த பண்டபார்த்தங்களை யெல்லாம், ஒரு

காலத்தில் மாற்றானொருவன் கட்டெரித்தாற்போல, ஆன்மா அனேக காலமாய் அத்துவாவிலே பத்திரப்படுத்திய சஞ்சிதத்தை யெல்லாம், ஞானாசாரியன் கலாசோதனை பண்ணி, அருட்பார்வை பார்த்தவுடனே சஞ்சித கன்மந் தானே யெரிந்து போய்விடும்.

இனி, பிராரத்துவம் ஆனாலும் நீங்காது. எப்படி யென்னில் குலாலனானவன் பாண்டத்தைப் பண்ணி யெடுத்துக்கொண்டாலும், திகிரிவிசையுள்ள மட்டுஞ் சுழல்வது போலவும், அம்பில் விட்ட பாணம் விசையுள்ள மட்டும் போய் விழுமன்றி நடுவே விழாது போலவும், பாண்டமுள்ளமட்டும் பெருங்காய மணம் போகாது போலவும், சரீரமுள்ளமட்டுக்கும் பிராரத்துவம் ஆன்மாவை விட்டகலா.

இப்பால்: அக்கினித் தம்பனமுள்ள பேருக்கு, நெருப்பு சுடாது போலவும், அமிழ்தப் பிரயோகமுள்ளவர்க்கு விட மேறாது போலவும், எவரென்ன செய்தாலுஞ் சொன்னாலும் எல்லாஞ் சிவன் செயலென்று கண்டிருப்பவர்க்கு ஆகாமிய மேறாது.

மாயை யாவதேதென்னில்:—தனு கரண புவன போகமாய நான்குப் பிரகாரமா யிருக்கும். வித்தானது தன்னிடத்திலே அங்குராதிகளை வைத்தடக்கிக்கொண்டிருத்தல்போல மாயையும் தனுவாதியவற்றை யடக்கிநிற்கும்.

இனி மா என்பதினாலேயே ஆன்மாக்கள் கன்மத்துக்கீடாக சுகதுக்கங்களை யனுபவிப்பதற்கு நிலை நிற்பதாம். யை என்பதினாலேயே ஆன்மாக்கள் ஒடுங்குகிறகாலத்தில் பிரபஞ்சத்தை யெல்லாந் தன்னுள் ஒடுக்கிக்கொள்வதாம்.

இங்ஙனம் மாயையே ஆன்மாக்களை நிலை நிறுத்தவும், ஒடுக்கவுமாக முதல்வன் ஏதுக்கெனில், மண்ணிருந்துங் குலாலன் இல்லாது கடாதிகள் ஆகாவாறு போலவும், குலாலன் இருந்தும் மண்ணில்லாது கடாதிகள் ஆகாவாறு போலவும், சிவனிருந்து மாயை யில்லாமற்போனாலும, மாயையிருந்து சிவனில்லாமற் போனாலும், உலகம் உண்டாகவேமாட்டாது.

இங்கனஞ் சிருட்டித்த லெவ்வாறெனின்:—சிவன் சத்தியைத் திகிரியாகவும், மாயையை மண்ணாகவும், தான்குலாலனாகவு மிருந்து வேண்டியதை சிருட்டிப்பன்.

முப்பத்தி யெட்டின் முப்பத்தே ழில்லார்க்கோத் துள்ளிருந்தும்
முப்பத்தி யெட்டின் முப்பத்தாறி லாக்கு முன்தோன்றிநின்றும்
முப்பத்தி யெட்டின் முப்பத்தஞ் சிலாக்கு நன்மொழி குருவாய
முப்பத்தி யெட்டின் முப்பதது முன்றில்லா முகனளிப்பே.

(எ-து) முப்பத்து எட்டில் முப்பத்து ஏழு இலாக்கு-(கூ-ம் அ-ல் ா ம போக க) ஒருமலமுடைய விஞ்ஞான கலருக்கு) ஒத்துள் இருந்தும், தன்மையில் லற ருளியும், முப்பத்து எட்டில் முப்பத்து ஆறு இல்லாதகு-(கூ-ம் அ-ல் ந ம போக உ) இருமலமுடைய பிரளயாகலருக்கு, முன்தோன்றி நின்றும்-முன்னில்லாத [illegible], முப்பத்து எட்டில் முப்பத்து அஞ்சு இலார்க்கு (கூ [illegible]-ல் ட ம ரு போக ந) மும்மலமுடைய சகலருக்கு, நல்மொழி குருவாய நற்சொல்லையுடைய ஞானசாரியனாகப் படாக்கையிலும், முப்பத்து எட்டில் முப்பத்து மூன்று இல்லா முகன்-(ந ம-அ-ல் கூ-ம ந போக ரு) ஐமமுகமுடைய சதாசிவனுடைய, அனுப்பு-காந்தவயம (எ-று) (38)

முப்பத்தி யொன்பதில் முவஞ்சில் லாததான்ம தத்துவம்
முப்பத்தி யொன்பதில் முப்பத்தி ரண்டில்வித் தியாதத்துவம்
முப்பத்தி யொன்பதில் முப்பத்து நாலிற சிவதத்துவம்
முப்பத்தி யொன்பதில் மூன்றற சித்தாந்தி மொழித்தத்துவம்.

(எ-து) முப்பத்து ஒன்பதில் மூவஞ்சு இல்லாதது ஆன்ம தத்துவம்-(ந மசு-ல (ந அ ரு) ம ரு போக உ மச) இருபத்து நான்கு ஆன்மதத்துவம், முப்பத்து ஒன்பதில் முப்பத்திரண்டில வித்தியா தத்துவம்-(ந மகூ-ல கூ-மஉ போக எ) வித்தியாதத்துவம ஏழு, முப்பத்து ஒன்பதில் முப்பத்து நாலில் சிவதத்துவம (கூ-மகூ-ரு கூ-மச-போக ரு) சிவதத்துவம ஐந்தாம. முப்பத்து ஒன்பதில மூன்று இல (கூ-மகூ-ல கூ-இல லாதது கூ-மகூ) முப்பத்தாறும், சித்தாந்தி மாழித்தத்துவம-சைவ சித்தாந்தி சொல்லும தத்துவங்களாம (எ-று) (39)

நாற்பதில் நாலொன்ப தில்லாத வேதம் நவில்வதெல்லாம்
நாற்பத்து மாவரை நத்தாமல ஞாத னடினம்பெனும்
நாற்பதும் நாலஞ்சும் நாழியு நாடிட நாதனடி
நாற்பது மாவினை யேதும் பிறப்பு நமக்கில்லையே.

(இ-ள்.) நாற்பதில் நால் ஒன்பது இல்லாத வேதம்-சயில் (சஎ + சூ) நடுவில் இல்லாதது ச) நாலுவேதங்கள், நவில்வது யல்லாம்-சொல்வதெல்லாம், நாற்பத்தெட்டாம அரை நக்ஷத்திரமல்-(சயில்-ய உ. சயி-அரைமாசம், ஆகவே உ. ம் க-ம்-ந )சஷ்ணத்திரிய முன்னை யும் விரும்பாமல். நாதன் அடி நம்பு எனும்-பரமசிவனுடைய திருவடிகளையே நம்பியிரு என்று சொல்லுவர். ஆகலால், நாற்பதும் நால் அஞ்சாம நாழியும-(சய-ம (ச X ரு) உய-ம கூய) அறுபது நாழியும், நாதன் அடி நாடி-பரமேஸ்வரனுடைய திருவடிகளைப் பூசிக்க, நாற்பத்தெட்டாம வினையே தம்-(ரய-யக) இருவினைகளும் போய்விடும். நமக்கு பிறப்பு இல்லை-(மனமே) நமக்குச் சென்னமும் இல்லையாம்-எ-று. (40)

நாற்பத்தி யோன்றினி னூற்பதிற் றீங்கைநா டாமலென்றும்
நாற்பத்தி யொன்றினி னூற்பதில் நாதனை நாடருள்சேர்
நாற்பத்தி யோன்றினி னூற்பதில் லாமனீ நாதனுடன்
நாற்பத்தி யோன்றினி னூற்பதி னூனென தென்னைவிடேன்.

(இ-ள்.) நாற்பத்தி யொன்றினில் நாற்பது இல் தீங்கை-(சயக-ல் சய இல்லாதது க) ஒருவர்க்குஞ் செய்திமையை, என்றும் நாடாமல்-ஒருநாளும் நாடாமல், நாற்பத்து ஒன்றினில் நாற்பது இல் நாதனை-ஒரு பெருங் கடவுளை, நாடி-நாடித் துதி, (துதித்து) அருள்சேர்-திருவருளுடன் கலந்துகொள், (கலந்து) நாற்பது ஒன்றினில் நாற்பது இல்லாமல் நாதனுடன் ஒன்றாய் நீ பரமசிவனுடன், நாற்பத்து ஒன்றினில் நாற்பதில்-ஒற்றுமையாகி, நான் எனது என்னை விடேன்-நான் என்னும் அகங்காரமும், எனதென்னும் மமகாரமும் விட்டுவிடேன் எ-று. (41)

நாற்பத் திரண்டி னுலேழு மிரண்டில்லை நயந்திருந்தால்
நாற்பத் திரண்டி னுலஞ்சா றில்லை நடக்கோடினுல்
நாற்பத் திரண்டி னுன்மூன்றிற் றூங்கினுற் பது புணர்ந்தால்
நாற்பத் திரண்டட னுலஞ் சிரண்டுடன் மூச்செழுமே.

(இ-ள்.) நயந்து இருந்தால்-(சமாதியிலே) சுகமாயிருந்தால், நாற்பத்து இரண்டினில் நால் எழும் இரண்டும் இல்லை (சயஉ-ல் (ச-எ-உ)ஆ-ம் உ-ம்) நவ இல்லையால் (ய) பனிரண்டங்குலம் பிரமாணமும், நடக்கு-நடந்தால், நாற்பத்து இரண்டில் நால்

அஞ்சு ஆறு இல்லை-(சயிஉ-ல் (ச—ரு-உயி-ம் கூ-ம்) உயிகூ போனால் யிகூ) பதினாறு அங்குலப் பிரமாணமும், ஓடினால்-பாறினால், நாற்பத்து இரண்டினில் நால் மூன்று இல்-(சயிஉ-ல் (ச—ங) யிஉ போனால் ஙயி) முப்பதங்குலப் பிரமாணமும், தூங்கில் - தூங்கினால், நாற்பதும்-நாற்பதங்குலப் பிரமாணமும், புணர்ந்தால்-புணர்ச்சிசெய்தால், நாற்பத்து இரண்டுடன் நால் அஞ்சு இரண்டு-(சயிஉ-ம் (ச-ரு) உயி-ம்-கூயிஉ-ம் உ-ம் கூயிச) அறுபத்துநால் அங்குலப் பிரமாணமும, எழும் மூச்சு-மூச்சு எழுந்துலவும். எ-று. (42)

நாற்பத்து மூன்றினி னற்பதில் வேலைக்கு நாமுளராய்
நாற்பத்து மூன்றினி னற்பதி லோர்வழி நடையெனவேன்
நாற்பத்து மூன்றினி னற்பதி னன்மை நடந்துவந்தால்
நாற்பத்து மூன்றினி னற்பதில் கண்ணனூர் நாம்புகுமே

(எ-து.) நாற்பத்து மூன்றினில் நாற்பது இல் வேலைக்கு-சயிங-ல் சயி போக ங) மும்மூர்த்திகளுடைய முத்தொழிற்கும, நாம உளராய்-நாம் ஏற்பட்டு, நாற்பத்து மூன்றினில் நாற்பது இல் ஓர் வழி-மூவுலகத்தில ஒருவழியிலும், நடையெனஏன்-சுழல்வதேதுக்கு? நாற்பதது மூன்றினில் நாற்பது இல் நன்மை-மனோவாக்குக் காயங்களாலாம் நல்வினைக்கே, நடந்துவந்தால்-ஒழுகினால், நாற்பத்து மூன்றினில நாற்பது இல் கண்ணன் ஊர்-முக்கண்களையுடைய பரமசிவன் வாழுங் கைலாசத்திற்கு, நாம் புகுமே-மணமே நாம் புடுவோமே. எ-று. (43)

நாற்பத்து நாலினி னற்பதில் லாமுக னதியுரு
நாற்பத்து நாலினி னற்பதில் லாச்சிவ மாகியுரு
நாற்பத்து நாலினி னற்பத்து மூன்றில் லுடையஞ்சிவன்
நாற்பத்து நாலினி னலேழு மேழிலா நாதன்மெய்யே.

(எ-து.) நாதன்மெய்-முதல்வன் சரீரமானது நாற்பத்து நாலினில் நாற்பது இல்லா முகன் ஆதி-(சயிச-ல் சயி போக ச) நான்முகன் முதலான நால்வர்கள், உ-ரு-உருவாகவும், நாற்பத்து நாலினில் நாற்பது இல்லா சிவம்-சிவம் முதலான நால்வர்கள், அரு ஆகி-அருவாகவும், நாற்பத்து நால் இல் நாற்பத்துமூன்று இல் நல் உபயம் சிவம் - (சயிச-ல் சயிங போக க) ஒரு சதாசிவ அரு

வுருவும், நாற்பத்து நாலினில் நால்ஏழ் இலா இறை-(சயிச-ல் (ச-எ) உயிஅ-ம் எ-ம் கூயிரு போக கூ) நவந்தரு பேதமும் ஒரு திருமேனியா யிருக்கும். (எ-று.) (44)

1. உருவம்-4-பிரம்மா, விஷ்ணு, ருத்திரன், மகேசன்.
2. அருவம்-4-சிவம், சத்தி, நாதம், விந்து.
3. அருவுருவம்-1-சதாசிவம்.

நாற்பத்தி யஞ்சினி னுற்பதி னுஞ்நீ தீவினைக்கு
நாற்பத்தி யஞ்சினி னுற்பதில் லாமுகன் றன்னையுன்னுய்
நாற்பத்தி யஞ்சினி னுற்பதில் லாப்புல நாட்டமறுய்
நாற்பத்தி யஞ்சினி னுற்பதில் லாதிரண் டாநரகே.

(எ-து) தீவினைக்கு நீ-பாவத்திற்கு நீ நாளும்-எந்நாளிலும் நாற்பத்து அஞ்சினில் நாற்பது இல்-(சயிரு-ல் சயி போனுல் ரு) அஞ்சுகிறதுமில்லை, நாற்பத்து அஞ்சினில் நாற்பது இல்லாமுகன் தன்னை உன்னுய்-ஐம்முகங்களையுடைய பரமசிவனையும் நினையாய், நாற்பத்து அஞ்சினில் நாற்பது இல்லொபுலன் நாட்டம் அறுய்-பஞ்சேந்திரியங்களையும் அடக்காய். (ஆகையினுல் உனக்கு) நாற்பத்து அஞ்சினில் நாற்பது இல் ஆதும்-ஐந்தும், இரண்டும்-(ரு-ம் உ-ம்-எ) எழு, நரகு-எழாம் நரகாம் (எ-று) (45)

நாற்பத்தி யாறினி னுற்பதில் லாக்கனி நடவெவர்க்கும்
நாற்பத்தி யாறினி னுற்பதில் லாமுக னூர்தாதையே
நாற்பத்தி யாறினி னுற்பதிற் சூடியை நம்புநன்றுய்
நாற்பத்தி யாறினி னுற்பதிற் காணும் பிறவிப்புணே.

(எ-து) நாற்பத்து ஆறினில் நாற்பது இல்லா கனி நட எவர்க்கும்-(சசா-ல் சயி போக சா) ஆறுதலையாக யாவரிடத்தும் நடந்துகொள், நாற்பத்து ஆறினில் நாற்பது இல்லா முகனூர் தாதையை-ஆறு முகங்களையுடைய கந்தசுவாமிக்குத் தந்தையை, நாற்பத்து ஆறினில் நாற்பதில் சூடியை-ஆறுகிய கங்கையையணிந்த பரமசிவனை, நன்றுய் நம்பு-நன்றாக நம்பியிரு. (இன்னணமிருந்தால்) பிறவி புண்-பிறப்பென்னும் புண்ணுனது, நாற்பத்து ஆறினில் நாற்பதில் காணும்-ஆறும்-எ-று. (46)

நாற்பத்தி யேழினி லஞ்சி லொன்றில்லை யாயினுமென்
நாற்பத்தி யேழினி னாற்பதி லேகி யெலும் புறினுமென்
நாற்பத்தி யேழொன்று நான்மூன்றிற் பாதி யணிவரன்பர்
நாற்பத்தி யேழினி னாற்பத் திரண்டிலா நடக்கையின்றே.

(இ-ள்) நாற்பத்து ஏழினில் நால் அஞ்சு இல்-(சயஎ-ல் (சXரு) உய இல்லையாகில் (உ0) இருபதுதேக தத்துவங்களுள், ஒன்று-ஒன்றாகிய அந்தம (செல்வம்,) இல்லை ஆயினும் என்-இல்லாது போனால்தான் என்ன? நாற்பத்தேழினில் நாற்பது இல்லாதது (சயஎ-ல் சய போனது) சத்ததாதுக்கள் ஏழும், ஏகி-நீங்கி, எலும்பு உறினும் என் எலும்பாகிலும் என்ன? நாற்பத்து ஏழொன்றும் நால் மூன்றில பாதி யணிவரன்பர்-(சய எ-ம் க-ம் சயஅ. சயஅ ம சXரு =உய ம் சாய. இதில் பாதி சுஉ) முப்பது நாளாகிய திங்களையணியும் சம்பு பாத மடியார்கள், நாற்பத்து ஏழினில் நாற்பத்து இரண்டு இலா நடக்கை இன்றே-(சயஎ-ல் சயஉ போக ரு) தேகாதி பிரபஞ்சங்களுடனே கூடியிருந்தும் தாம் கூடாமல் இருப்பார். (எ-று.) (47)

சத்த தாதுக்களாவன—நரம்பு, தசை, தோல், எலும்பு, நிணம, மூளை, சுக்குலம.

நாற்பத்தி யெட்டினிற் பாதிக்குள் மீதுற்ற நாளென்னைநீ
நாற்பத்தி யெட்டினிற் பாதிக்குள் ளாக நடக்கச்செய்தாய்
நாற்பத்தி யெட்டே ணொன்மூன்றி லொன்றுநீ நல்லவனே
நாற்பத்தி யெட்டரைக் காலாவ தெங்ஙனம் பிறவிப்புணே.

(எ-து) நாற்பத்து எட்டினில் பாதிக்குள் மீது உற்ற நாள் (சயஅ-ல பாதி உச) இருபத்திநாலு தத்துவத்திற்கும் மேலாக இருக்கின்ற நாளில், என்னை நீ-நீ யென்னை, நாற்பத்து எட்டினில் பாதிக்கு உள்ளாக நடக்க செய்தாய்-இருபத்துநாலு தத்துவங்களுக்கும உள்ளாக்குகின்றாய் (ஆகலான், நாற்பத்து எட்டுடன் நால மூன்றில் ஒன்று நீ-சயஅ-ம் (சXரு) யஉ-ம் சாய) அறுபது வருஷங்களிலே யொன்றான விரோதியாகும் நீ, நல்லவனே-அல்லாமல் நற்குணமுடையவனோ? நாற்பத்து எட்டுஅரை கால் ஆவது எங்ஙனம் பிறவி புண் ஏ-(சயஅXஅரைக்கால் சு) பிறவிப்புண் ஆறுவது எங்ஙனம் (எ-று) (48)

நாற்பத்தி யோன்பதி ளுற்பத் தஞ்சிலா நவில்பிறப்பாய்
நாற்பத்தி யோன்பதி ளுற்பத் திரண்டிலா நற்றோற்றமாய்
நாற்பத்தி யோன்பது நாலெட்டு மூன்றுட ளுமெடுத்தோம்
நாற்பத்தி யோன்பதி ளுற்பத்தி யேழிலா வினைசெய்ததே.

(இ-ள்.) நாற்பத்து ஒன்பதில் நாற்பத்து அஞ்சு இலா நவில் பிறப்பாய்-(௪௰௯-ல் ௪௰௫ போக ௪) நால்வகைப் பிறப்பாகி, நாற்பத்து ஒன்பதில் நாற்பத்து இரண்டிலா நல் தோற்றம் ஆய்-(௪௰௯-ல் ௪௰௨ போக ௭) எழுவகைத் தோற்றமாகி, நாற்பத்து ஒன்பதும் நால் எட்டும் மூன்றுடல் நாம் எடுத்தோம்-(௪௰௯-ம் (௪ X ௮) ௩௰௨-ம் ௩-ம் ௮௰௪) எண்பத்து நான்கிலட்ச உடல் தேகங்களை யெடுத்தோம். (எனெனில்) நாற்பத்து ஒன்பதில் நாற்பத்து ஏழிலா வினை நாம் செய்தது எ-(௪௰௯-ல் ௪௰௭ போக ௨) நாம் செய்த இருவினையாலாம். (எ-று.) (49)

ஐம்ப திரண்டா யுளாய்சேரு மாயு ளாண்டாண்டுதான்
ஐம்பதி லையேழு மூன்றிலாத் திங்களா மத்திங்கடான்
ஐம்பதி லிருபதி ளுடாமன் ளுடா மதியமதோ
ஐம்பது மையிரண்டு நாழியற் பாயுளுக் காசையென்னே.

(இ-ள்.) ஐம்பது இரண்டு ஆயுள் (௫௰ × ௨-௱) ஆயுள் நூறு, சேரும் ஆயுள் ஆண்டு வயது வருடங்களாலாம், ஆண்டுதான்-வருடங்கள், ஐம்பதில் ஐ ஏழ் மூன்று இலா திங்கள் ஆம்-(௫௰-ல் (௫ × ௭) ௩௰௫-ம் ௩-ம் ௩௰௮ போக ௰௨) பனிரண்டு மாதங்களாலாம். அத்திங்கள்தான்-அந்த மாதமும், ஐம்பதில் இருபது இல் நாள்தான் (௫௰-ல ௨௰ போக ௩௰) முப்பது நாள்களாலாம். அந்நாள்தாம்-அந்நாட்களும், அதிகம் அதோ-அதிகமானதோ. (அல்ல அல்ல) ஐம்பதும் ஐ இரண்டு நாழி (௫௰-ம் (௫ × ௨) ௰-ம் அறுபது நாழியாலாம். (ஆகையினால்) அற்ப ஆயுளுக்கு ஆசை என்னே-சொற்ப வயதுக்கு என்ன ஆசை யிருக்கிறது. (50)

ஐம்பத்தி யோன்றினி லையே ழுகன்றிடிற் சூக்குமமாம்
ஐம்பத்தி யோன்றினி லைம்மூன்று மொன்றில்லை தூலமெய்யாம்
ஐம்பத்தி யோன்றுற்ற தங்கம் பரைதனக் கப்பரைதான்
ஐம்பத்தி யோன்றினி லைம்பதில் நாதனுக் கங்கனெஞ்சே!

(எ-து.) நெஞ்சே-மனமே! ஐம்பத்து ஒன்றினில் ஐந்து ஏழு ஆகின்ற இடில் சூக்குமம் ஆம்-(௫௰௧-ல் (௫-௭) ௩௰௫ போனால் ௰௬) பதினாறெழுத்து மாத்திரிகை என்று போய் பராசத்திக்கு சூக்கும தேகமாம், ஐம்பத்து ஒன்றினில் ஐந்து மூன்றும் ஒன்று இல்லை தூலம் மெய் ஆம்-(௫௰௧-ல் (௫×௩) ௰௫-ம் ௧-ம் ௰௬ போனால் (௩௰௫) முப்பத்தைந்து எழுத்தும் பராசத்திக்குத் தூல தேகமாம். பரைதனக்கு அங்கம் ஐம்பத்து ஒன்று உற்றது-பராசத்திக்கு ௫௧-எழுத்துங் காரணமாம. இங்ஙனம ஐம்பத்தோரெழுத்து கூட்ட ஒரு திருமேனியாகக்கொண்ட பராசத்திதானே, ஐம்பத்து ஒன்றினில் ஐம்பது இல் நாதனுக்கு அங்கம் - (௫௰௧-ல் ௫௰ போனால் நின்றது ஒன்று) ஒரு பொருளாக யிருக்கப்படா நின்ற பரத்துக்குத் திருமேனியாம். (எ-று.)

பராசத்தியாவது:—பரத்திலே ஆயிரத்தொரு கூறங்கம் பராசத்தி, பராசக்தியிலே ஆயிரத்தொரு கூறு அங்கம் ஆதிசத்தி. ஆதிசத்தியிலே ஆயிரத்தொரு கூறு அங்கம் இச்சாசத்தி. இச்சாசத்தியில் ஆயிரத்தொரு கூறு அங்கம் கிரியாசத்தி. கிரியாசத்தி குடிலையில் பத்தனையில் ஒருகூறு என்னில்: பதினாயிரத்தி லொரு கூறு குடிலையும், அக்குடிலையிலே குண்டலியும், அக்குண்டலியிலே விந்துவும், விந்துவிலே மனோன்மணியும், மனோன்மணியிலே மஹேஸ்வரியும், மஹேஸ்வரியிலே ருத்திரியும், (உருத்திரியாகிய) உமையிலே இலக்குமியும், இலக்குமியிடத்திலே சரஸ்வதியும் ஆக சத்தி பேதங்கள் ஏற்படும்.

முற்கூறிய பராசத்தி சூரியனிடத்திலே கிரணமிருந்து உலகத்தையெல்லாம் விளங்கச் செய்வதுபோல, பரத்தினிடமாய்ப் பராசத்தி யிருந்து எவ்வெக் கிருத்தியங்களையும் நடத்துமென்றறிக. (51)

ஐம்பத் திரண்டினி லைம்பதில் லாவினை யணுவை யொண்ணு,
ஐம்பத் திரண்டினி லைம்பதில் லாவினை யதுசடமாம்
ஐம்பத் திரண்டினி லைம்பதில் வினைதனை யணுவுமொண்ணு
ஐம்பத் திரண்டினி லைம்பதில் லாத தரனணைப்பே.

(எ-து.) ஐம்பத்து இரண்டினில் ஐம்பது இல்லா வினை அணுவை ஒண்ணு-(௫௰௨-ல் ௫௰ இல்லாதது ௨) இருவினைகளும் (அ

னுவாகிய) ஆன்மாவைப் பொருந்தாது ஏனெனில் ஐம்பத்து இரண்டினில் ஐம்பது இல்லா வினை அது சடம் ஆம் - இருவினையுஞ் சடமாகும், ஐம்பத்து இரண்டினில் ஐம்பது இல் வினைதனை அணுவும் ஒண்ணு-இருவினைகளை ஆன்மாவும் பொருந்தாது. ஐம்பத்து இரண்டினில் ஐம்பது இல்லாத அது அரன் அணைப்பு-இருவினையையும் சிவபெருமானே கூட்டுவன்-எ-று.

"இருவினைப் பாசக் கயிற்றின் வழி யாட்டுவிப்பான் இறை" யென்பதனாற் காண்க.

வினையிரண்டும் ஆன்மாவைப் பொருந்தாது. ஏனெனில் சடம். இனி ஆன்மாவும் வினையைப்பொருந்தாது. ஏனெனில் தானே யறியுந்தன்மை யில்லை. இங்ஙனமேல், கூடு முறைமை எப்படியெனில், ஒருவன் காந்தத்தையும் ஊசியையுஞ் சேர்த்தது போல, பரமேஸ்வரன் கர்மத்தையும் ஆன்மாவையுங் கூட்டுவன்.

ஒண்ணு-ஒன்று யென்றதன் திரிபு. (52)

ஐம்பத்து மூன்றினி லைம்பதில் லாசையருட் டொழின்மெய்
ஐம்பத்து மூன்றினி லைம்பதில் கண்ணனு மணுவுமொன்றேல்
ஐம்பத்து மூன்றினி லைம்பதில் லாத்தொழிற் கரனுரியன்
ஐம்பத்து மூன்றினி லைம்பதில்லார்தொழிற் கணுவுளதே.

(எ-து.) ஐம்பத்து மூன்றினில் ஐம்பது இல் ஆசை அருள் தொழில் மெய்-(மெய்-உடல் மெய் போக உடல்) இச்சா ஞானக் கிரியா இம்மூன்றும் ஒரே திருமேனியாக வுண்டாயிருத்தலால், ஐம்பத்து மூன்றினில் ஐம்பது இல் கண்ணனும்-முக்கண்ணனாகிய முதல்வனும், அணுவும்-ஆன்மாவும், ஒன்றேல்-ஒன்றாகில், ஐம்பத்து மூன்றினில் ஐம்பது இல்லா தொழிற்கு அரன் உரியன்-(சிருட்டி, திதி, சம்மாரம் ஆகிய) முத்தொழிற்கும் சிவபெருமானே உரியவன் ஆகலான், ஐம்பத்து மூன்றினில் ஐம்பது இல்லார் தொழிற்கு அணு வுளதே - முத்தொழிலினும் ஆன்மா கட்டுபட்டதே-எ-று.

சீவனுஞ் சிவனும் ஒன்றென்பாரைப்பார்த்துச் சொன்னது. ஒன்றென்ப தெவ்வாறெனின்.

சிவேச்சை—சர்வான்மாக்களையும் இரட்சிப்பதாம்.

சிவஞானம்.—சர்வான்மாக்களுஞ் செய்யுங் கன்மத்தினை யறிதலாம்.

சிவகிரியை—சர்வான்மாக்களுஞ் செய்த கன்மத்துக்கீடாக சுகதுக்கங்களைத் தரலாம். (இனி)

சீவேச்சை—பண்ட பதார்த்தம் வேண்டுதல்.

சீவஞானம்—பண்ட பதார்த்தங்களைப் பகுத்தறிதல்.

சீவகிரியை—பண்ட பதார்த்தங்களை ஆர்ச்சிக்கப்பண்ணுந் தொழில்

இவற்றில் சிவனுஞ் சீவனும் ஒன்றேயும் ஆனாற் கிருசிகளுமென்பது சொல்லாமல் விளங்கும்

சிவனாரை முதன்மையாகக்கொள்ளுதல்போல சீவனுக்குமுண்டு பண்ணினில், ஆன்மா தானென்று நினைத்தலே சிருஷ்டி, நினைத்ததைச் சிந்தித்தலே திதி சிந்தியாமை சங்காரம் செய்தலே சம்பூரணம். (53)

ஐம்பத்து நாலினி லைம்பத் திரண்டி லருவினைபோம்
ஐம்பத்து நாலினி லைம்பத்து மூன்றற்ற தாணவம்போம்
ஐம்பத்து நாலினி லைம்பதிற் சத்தினி பாதமதால்
ஐம்பத்து நாலினி லைம்பதில் லாப்பத மாகுமன்றே

(இ-ள்) ஐம்பத்து நாலினில் ஐம்பத்து இரண்டு இல் அருவினை போம் (ருயச-ல் ருய உ போனால் உ) இருவினை யொப்பிலே- ஐம்பத்து நாலினில் ஐம்பத்து மூன்று அற்றது ஆணவம் போம் (ருயச-ல் ருயங போனால் க) ஆணவமல மொன்றும் போய்விடும். அப்போது ஐம்பத்து நாலினில் ஐம்பதுஇல் சத்தினிபாதம்- (ருயச-ல் ருய இல்லாதது ச) நாலானசத்தினி பாதம் பிறக்கும், அதால்-அதனால், ஐம்பத்து நாலினில் ஐம்பது இல்லா பதம் ஆகும் அன்றே-நாலாம்பதமாகிய சாயுச்சியம் கிடைக்கும் (இ-ள்) (54)

இருவினை யொப்பு மலபரி பாகமாய் சத்தினி பாதங் கிடைத்ததும் சாயுச்சிய பதவி கிடைக்கும் என்றபடியாம்.

ஐம்பத்தி யைந்தினி லைம்பதிற் சத்த மறியுஞ்செவி
ஐம்பத்தி யைந்தினி லைம்பதிற் பரிசமுற் றறிவதுதோல்
ஐம்பத்தி யைந்தினி லைம்பதில் ரூபங்கண் ணறுசுவைநா
ஐம்பத்தி யைந்தினி லைம்பத்து மூன்றி லறிநாசியே.

(எ-து.) ஐம்பத்து ஐந்தினில் ஐம்பது இல் சத்தம் அறிவது மெய்-(நிமிநி-ல் நிமி இல்லாதது நி) ஐஞ்சத்த பேதங்களையும் காது அறியும், ஐம்பத்து ஐந்தினில் ஐம்பது இல் பரிசம் அறிவது தோல்-ஐம்பரிச பேதங்களையும் தோல் அறியும், ஐம்பத்து ஐந்தினில் ஐம்பது இல் ரூபம் கண்-ஐந்நிற பேதங்களைக் கண்(ணும்) [அறியும்] அறுசுவை நா-ஆறுவித சுவைகளை நாக்கு-ம், [அறியும்] ஐம்பத்து ஐந்தினில் ஐம்பத்து மூன் றுஇல் நாசி-(நிமிநி-ல நிமிந- போக உ) இருகந்தத்தை மூக்கும், [அறியும்] அறி-அறியும் (எ-று.)

ஐஞ்சத்த பேதங்களாவன:—தோல்கருவி, துளைக்கருவி, கஞ்சக்கருவி, நரம்புக்கருவி, மிடற்றுக்கருவி (இவைகளின் ஓசைகளாம்.)

ஐம்பரிச பேதங்களாவன:—மெதுவு, கடினம், சீதளம், உஷ்ணம், சிற்பரிசம்.

ஐந்நிற பேதங்களாவன —சிகப்பு, கருப்பு, வெளுப்பு, மஞ்சள், பச்சை.

அறுசுவையாவன:—கார்த்தல், கூர்த்தல், கைத்தல், புளித்தல், துவர்த்தல், தித்தித்தல்.

கந்தம் இரண்டாவன.—சுகந்தம், துர்க்கந்தம். (55)

ஐம்பத்தி யாறுட னுலாக வோன்றுத் தாள்வயிற்றில்
ஐம்பத்தி யாறினி லைம்பத்தோன் றின்று ளரும்பளவாய்
ஐம்பத்தி யாறினி லையெட்டு மோன்றேக மலக்குமிழ்
ஐம்பத்தி யாறினி லையஞ்சு மோன்றி லறைகணக்கே.

(இ - ள்.) ஐம்பத்து ஆறு உடன் நால் ஆக ஒன்று-(௫௰௬-ம் ௪-ம் ௬௰) அறுபது வருடங்களுள் ஒன்றாகிய சுக்குலம், ஆத்தாள் வயிற்றில்-தாய்க் கருப்பத்தில், ஐம்பத்து ஆறினில் ஐம்பத்து ஒன்று இல் நாள்-(௫௰௬-ல் ௫௰௧ இல்லாதது ௫) ஐந்தாம் நாள், அரும்பு அளவு ஆய் - புன்னை யரும்பளவாகியிருக்கும், ஐம்பத்து ஆறினில் ஐந்து எட்டும் ஒன்று ஏக-(௫௰௬-ல் ௫X௮ ௪௰, ௪௰-ம் ௧-ம் ௪௰௧ போனால் நீக்கு ௰௫) பதினைந்தாம் நாளையிலே நீர்க்குமிழியாம், ஐம்பத்து ஆறினில் ஐந்து எட்டும் ஒன்று இல் கணக்கு அறை-(௫௰௬-ல் (௫X௫ ௨௰௫ ௨௰௫-ம் ௧-ம்) ௨௬ போக நீக்கு ௩௰) முப்பது நாட்களாகிய மாதக்கணக்கைச் சொல்வதாம். (எ - று.)

(பனியிலோர்பாதி சிறுதுளிமாது பண்டியில்வந்து புகுந்து திரண்டு) என்று வருமதற்குள் காண்க. (56)

ஐம்பத்தி யேழினி லைம்பத்தி யாறகல் குக்குடண்டம்
ஐம்பத்தி யேழினி லைம்பத்தி யஞ்சின்மார்பு தோடலையாம்
ஐம்பத்தி யேழினி லைம்பத்தி னாலில் நரம்பமையும்
ஐம்பத்தி யேழினி லைம்பத்தி மூன்றிலத் தங்கழலே.

(இ-து) ஐம்பத்து ஏழினில் ஐம்பத்து ஆறு அகல குக்குடு அண்டம் (௫௰௭-ல் ௫௰௬ போனால்-௧) முதல் மாதத்திலே கோழிமுட்டை யளவாகும், ஐம்பத்து ஏழினில் ஐம்பத்து அஞ்சு இல் - (௫௰௭ - ல் ௫௰௫ போனால் ௨) இரண்டா மாதத்திலே அது-அம்முட்டையாகிய பிண்டமானது, மார்பு தோள் தலை ஆய் மார்புந் தோளுந் தலையுமாயாகும், ஐம்பத்து ஏழினில் ஐம்பத்து நால் இல்-(௫௰௭-ல் ௫௰௪ போனால் ௩) மூன்றாம் மாதத்திலே, நரம்பு அமையும்-நரம்புண்டாகும், ஐம்பத்து ஏழினில் ஐம்பத்து மூன்று இல்-(௫௰௭-ல் ௫௰௩ இல்லாதது ௪) நாலா மாதத்திலே, அத்தம் கழல்-கையுங் காலும் உண்டாகும். (எ-று)
(57)

ஐம்பத்தி யெட்டினி லைம்பத்து மூன்றி லவயவங்கள்
ஐம்பத்தி யெட்டினி லைம்பத் திரண்டிலா தாமையுரு
ஐம்பத்தி யெட்டினி லைம்பத்தி யொன்றக லத்திகெட்டி
ஐம்பத்தி யெட்டினி லைம்பதி லாக்கை யுறத்திடுமே.

(எ-து) ஐம்பத்து எட்டினில் ஐம்பத்து மூன்று இல்-(௫௰௮-ல் ௫௰௩ போக ௫) ஐந்தா மாதத்திலே, அவயவங்கள் அவயவங்களெல்லாம் உண்டாகும், ஐம்பத்து எட்டினில் ஐம் பத்து இரண்டு இலது-(௫௰௮-ல் ௫௰௨ போக ௬) ஆறு மாதத் திலே, ஆமை உரு-ஆமையைப்போன்ற வுருவாகும், ஐம்பத்து எட்டினில் ஐம்பத்து ஒன்று அகல்-(௫௰௮-ல் ௫௰௧ அகல ௭) ஏழா மாதத்திலே, அத்திகெட்டி-என்புகளெல்லாங் கெட்டிப் பட்டு உரோமமுந் தரிக்கும், ஐம்பத்து எட்டில் ஐம்பது இல் (௫௰௮-ல் ௫௰ இல்லாதது ௮) எட்டா மாதத்திலே, ஆக்கை உறுத்து இடும்-உடம்பு திடமாம் (எ-று) (58)

ஐம்பத்தி யொன்பதி லைம்பதி லருளுற்ற தரனைத்தொழும்
ஐம்பத்தி யொன்பதி லைம்பெட்டு மொன்பதி லாம்பிறப்பும்
ஐம்பத்தி யொன்பதி லைம்பத்தி யெழில தாண்பெண்பெறல்
ஐம்பத்தி யொன்பதி லைம்பத்தி நாலேக வொன்றிலன்றே.

(ய-து.) ஐம்பத்து ஒன்பதில் ஐம்பது இல (௫௰௯-ல் ௫௰ போக ௯) ஒன்பதாம மாதத்திலே, அது அறிவுருவானது (சீவ சம்பந்தத்தால்) அருள் உற்று ஞானமடைந்து, அரனை - பரம சிவனை, அது தொழும் அரனைத் துதித்துக்கொண்டிருக்கும், ஐம் பத்து ஒன்பதில் ஐந்து எட்டும் ஒன்பது இல-(௫௰௯-ல (௫ × ௮ ௪௰, ௯௰-ம் ௯-ம்)=௫௰௯ போக ௰) பத்தாமாதத்திலே, பிறப்பு ஆம்-பிறக்கும், ஐம்பத்து ஒன்பதில் ஐம்பத்து ஏழ் இலது-(௫௰௯-ல் ௫௰௭ இலது ௨) (௨ நிகருங்கால்) இருவகையான ஆண் பெண் பெறல்-ஆண் பெண் பிறக்கும், ஐம்பத்து ஒன்பதில் ஐம்ப த்து நால் ஏக - (௫௰௯-ல் ௫௰௪ ஏக ௫) பஞ்சபூதங்களில், ஒன் றில்-ஒருபூதத்தால்-எ-று.

(அன்றே-அசை.)

சிறுவிதை பெருமரமாவதுபோல் சிறுநாளிற் பெரியவுடலா கின்றது. இனி உருவி லொருவரேத்திருப்ப, ஆண் பெண்ணை யிரட்டைப் பிறத்தல் எவ்வாறெனில்:—புணர்ச்சிகாலத்திலே மாதருக்கு அபானவாயு மேல்நோக்கி எதிர்ந்து நடந்தால், விழுந்த விந்து இரண்டாய் இரட்டைப்பிள்ளை பிறக்கும்.

புணர்ச்சிகாலத்தில் பிராணவாயு வலமாய் ஓடினால் ஆணாம். இடமாய் ஓடினால் பெண்ணாம். நெடிதாயோடினால் உயர்ச்சியாம். குறைந்தோடினால் குட்டையாம், வளைந்தோடினால் முடமாம், உள்வளைவாயோடினால் கூனாம், வாயு விலங்கியோடினால் (விந்தொரு புரையில் விழுந்து பெறும்போது வயிற்றிற் பிள்ளையும் மரித்துத் தாயுங் கூட மரிக்கும்படியான) அபாயம்.

இப்பால்:—புருஷனுக்கு உஷ்ணம் அதிகமானால் மனைவி மலடியாவள், யோனி மலர்ச் சாய்ந்திருந்தாலும், வாய்வு மிகுந்திருந்தாலும், புழுக்கள் மிகுந்திருந்தாலும், அக்கினி மிகுந்திருந்தாலும் மலட்டுக்குறியாம்.

புணர்ச்சிகாலத்திலே தாய் வயிறறில் மலமிருந்தால் பிள்ளை மந்தமாம், சலமிருந்தால் ஊமையாம், மலமுஞ் சலமு மிருந்தால் அந்தகனாம்.

இப்பால்:—புணர்ச்சிகாலத்திலே தகப்பனுக்கு எந்த பூதத்திலே வாயு நடந்ததோ அந்த பூதத்தின நிறமாம் பிள்ளைக்கும். அன்றியும் புணர்ச்சிகாலத்திலே தகப்பனுக்கு எந்த குணம் இருக்கின்றதோ அந்த குணமே பிள்ளைக்குமுண்டாம். (59)

அறுபதி லொன்றி லறுபதி லொன்றுற் றதுவங்கமாய்
அறுபதி லொன்றினை யிட்டுண் டழித லறத்துயர்காண்
அறுபதி லொன்றி னடிதொழு முத்தி யடைந்திடலாம்
அறுபதி லொன்றெனக் காண்மனமே! யாசை யாவையுமே.

(எ-று) மனமே-நெஞ்சமே! அறுபதில் ஒன்றில்- (அருபது வருடத்தில் ஒரு வருடம் மன்மத) மன்மதாவத்தையில், அறுபதில் ஒன்று உற்று-(அறுபதில் ஒரு வருடம் சுக்குலம்) சுக்குலம் (தாய் வயிற்றுப்) பொருந்தி, அது-அவ்விந்துவானது, அங்கமாய்-தேகமாய், அறுபதில் ஒன்றினை இட்டு-(அறுபதில் ஒரு வருடம் வெகு தான்ய) மிக்க தான்யம் பக்குவஞ்செய்து, உண்டு அழிதல் - தின்றொழித்தல், அறத்துயர் காண் - அறத்துன்பமாம் பார் ஆகலான்-அறுபதில் ஒன்றின் அடிதொழு-(அறுபதில் ஒரு வருடம் ஈஸ்வர) ஈச்சுரனுடைய திருவடிகளைப் பணிவாய். முத்தி அடைந்திடல் ஆம் மோக்ஷத்தைப் பெறலாம், ஆசை யாவையும்

ஏ-எல்லா ஆசைகளும், அறுபதில் ஒன்றுமென காண்-(அறுபதில் ஒரு வருடம் விஷமா) விஷமெனப் பார்ப்பாய் (எ-று)

பரமேஸ்வரனுடைய ஆக்கினையினாலே ஆன்மா பிராண வாயுவையே வாகனமாகவும், மனதையே கண்ணாகவுங் கொள்ளும், சுக்குலமானது சுரோணிதத்தின் சிரசிலே போய்த் தங்கியிருக்கும். அப்போது அட்ட தாதுக்களும் விளையும்.

அட்ட தாதுக்கள் எவையென்னில்:—இரத்தம், உதிரம், இறைச்சி, நிணம், எலும்பு, மூளை, சுக்கிலம், பெலன் இவ்வெட்டு தாதுக்களுங் கூடினது தனுவாம். இவ்வெட்டு தாதுக்களுங்கூடி சரீரமான முறைமை யெப்படியெனில்: அசனம் பண்ணின அன்னமும் நீரும் மலமூத்திரமாய்ப் போம். நின்ற ரசம் மூன்று நாளையிலே உதிரமாம், அவ்வுதிரத்திலே தோலு மயிரும் பிறக்கும். உதிரம் மூன்று நாளையிலே யிறைச்சியாம். அவ்விறைச்சியிலே சிலேத்துமம் பிறக்கும். இறைச்சி மூன்று நாளையிலே நிணமாம். அந்நிணத்திற் பித்தம் பிறக்கும், நிணம் மூன்று நாளையிலே யெலும்பாம், அவ்வெலும்பிற கைவிரல் நகமாதி பிறக்கும். எலும்பு மூன்று நாளையிலே மூளையாம். அம்மூளையிற் காதிற் குறும்பியுங் கண்ணீர்ப் பீளையும் பிறக்கும். மூளை மூன்று நாளையிலே சுக்கிலமாம். அச்சுக்கிலத்திற் சேத்துமம் பிறக்கும். சுக்கிலம் மூன்று நாளையிலே பெலனாம், அப்பெலத்தில் சுவாச நிசுவாசம் பிறக்கும். இப்படி தாதுக்களாலே தனுவெடுத்து தாயினுடைய கெர்ப்பவாசத்திற் பிள்ளையிருக்கும்.

இனி வருத்த மெப்படி யெனில்:—அந்தகாரமான கெர்ப்பத்தில் மலமூத்திரத்துடன் கிருமிகள் நாலாபக்கமுமுழல, நடுக்குடலில் நிமிரவும் படுக்கவுமின்றி பசியினும் நோபினும் படாதபாடு பட்டுத் தொழுத கையுடன் (சிசு) இருப்பதேயாம்.

ஆசை வெறுப்ப தெவ்வா றெனின்:—நானிலமெலாம் ஆண்டாலும் நாழியரிசிக்கு மேலில்லை.

ஏழடுக்கு மெத்தையேனும் எண்சாணுடம்பளவுதான் இடம் எனத்தெளிக. (60)

அறுபத்தி யொன்றும் பதினொன்று மாயிர மாநாடிகால்
அறுபத்தி யொன்றினி லைம்பத்தொன் றொழி யகல்நாடியும்
அறுபத்தி யொன்றினி லையெட்டு மேழு மகல்வாயுவும்
அறுபத்தி யொன்றினி லைம்பத்தி யேழரையு ரோமமுண்டே.

(ப-ரு.) அறுபத்து ஒன்றும் பதினொன்றும் ஆயிரம் ஆம் நாடி கால்-(௬௰௧-ம் ௰௧-ம் ௭௰௨) எழுபத்தீராயிரம் நாடிகளும் எழுபத்தீராயிரம் வாயுக்களுமாம். இவற்றுள் முக்கியமானதும் பிறவும்) அறுபத்து ஒன்றினில் ஐம்பத்து ஒன்று ஒழி அகல்நாடியும்-(௬௰௧-ல் ௫௰௧ ஒழிய ௰) தசநாடிகளும், அறுபத்து ஒன்றினில் ஐந்து எட்டும் ஏழும் அகல்வாயுவும்-(௬௰௧-ல் (௫×௮=௪௰, ௪௰-ம் ௭-ம்) ௪௰௭ போக ௰௪) பதினாலு வாயுக்களும், அறுபத்து ஒன்றினில் ஐம்பத்து ஏழு அரையும் அகல உரோமம்-(௬௰௧-ல் ௫௰௭½ போக ௩½) மூன்றரைக்கோடி உரோமத் துவாரங்களும், உண்டே-இருக்கிறதே. (ப-ரு.)

எழுபத்தீராயிரம் நாடிகளினும் பிரதானமான தசநாடிகளின் பேரும் இடமும் செயலும் ஏதென்றால்:—

1. சுழிமுனை.—இது காலெலும்பும் சிரெலும்பும் கூடிக் கலந்தவிடத்திலே பிறந்து, குய்யத்துக்கும் குதத்துக்கும் மையமாகிய மூலாதாரத்தைத் தொட்டு ஆதாரம் ஆறையும் மண்டலமூன்றையும் ஊடுருவிக் கபாலத்தை முட்டி நிற்கும்.

2. 3. இடைகலை—இரண்டுங் கத்திரிக்கோலைப்போல மாறி வில்லுக்கு நாணிபிட்டாற்போல் குதிரைமுகமாய் மூக்கை பற்றியிருக்கும்.

4. காந்தாரி—இது நாபித்தானத்திலே தோன்றி யெழு நாடியாகப் பிரிந்து பரிசையுருவங்கொண்டு, கண்டத்திலும் நாசியிலும் பற்றியிருக்கும்.

5, 6. அத்தி, சிகுவை:—இவை யிரண்டும் பத்தாகப் பிரிந்து இடது கண்ணிலும் வலது கண்ணிலும் பற்றியிருக்கும்.

7, 8. அலம்புடை, புருடராகன்:—இவை யிரண்டும் நூறு நாடியாகப் பிரிந்து, வலது காதிலும் இடது காதிலும் பற்றியிருக்கும்.

9. குரு:—நாபித்தானத்திலே தோன்றி உபத்தத்தைப் பற்றியிருக்குமென் றறிக.

10. சங்கினி.—சதுர்த்தச வாயுக்களின் பேரும் இடமுஞ், செயலும் யாதெனில்.—

1. பிராணவாயு:—இது லலாடமத்தியிற் றோன்றி சித்திர நாடியிலே யிழிந்து, மூலாதாரத்தில் ஓம் என் றுதித்து, நாபிசாக்கரத்தில் அங்கென்று முட்டி, சங்கென்று இடைபிங்கலையிலே யோடி கபாலத்தைச் சுத்தி, நாசியிற் பனிரண்டுவிரற் பிரமாணம் புறப்பட்டு, நாலுவிரற் பிரமாணங் கழிந்து, எட்டுவிரற் பிரமாண முள்ளடங்கி தானின்ற விடத்திலே போய் நிற்கும். இப்படி ஒருநாழிகைக்கு ௩௱௬௰-சுவாசம் புறப்பட்டு இரவு பகல் ௬௰-நாழிகைக்கு ௨௰௧௲௬௱-சுவாச மியங்கி இதிலே எ௲௨௱-சுவாசம் பாய்ந்துபோய் ௰௪௲௪௱-சுவாசம் உட்புகுமென் றறிய.

அபான வாயு:—உதாரத்தையுங் குதங் குய்யத்தையும் பற்றிநின்று மலமூத்திராதிகளைக் கழிப்பிக்கும்.

வியான வாயு:—தோலிலே நின்று பரிசத்தை யறிவிக்குங் கைகால்களைச் சேட்டை செய்வித்தும் அன்னசாரத்தை எ௰௨௲ நாடிகளிலும் கலப்பிக்கும்.

உதான வாயு:—கண்டத்திலே நின்று உதாரக்கினியை யெழுப்பி, உண்ட அன்னசாரத்தினாலே சரீரத்தை வளர்ப்பிக்கும்

சமான வாயு:—கந்தரக் குழியின் சந்திடை நின்று எல்லாவற்றையுஞ் சமன் செய்துகொண்டிருக்கும்.

நாகவாயு:—நீட்டலும், முடக்கலுங், கிளக்கலுமாம்.

கூர்மவாயு:—முகமலர்ச்சியும், கண்ணிமையும், மயிர்ச்சிலிர்ப்புமுண்டாக்குவதாம்.

கிருகரவாயு:—சொட்டாவி யுண்டாக்கியும், தும்புவித்தும், உடம்பை நெறித்திடவுஞ் செய்யும்.

தேவதத்தவாயு —ஓடிவித்தும், உலாவித்தும், யுத்தம்பண்ணிவித்தும், வசனிக்கவுஞ் செய்யும்.

தனஞ்சேயவாயு.—உடம்பைவிட்டுசீவன் போனாலும், தான் உடம்பைவிட்டுப் பிரியாமல் நின்று, உடம்பை வீங்கவைத்தும், விரியச்செய்தும் கூடநாளிருந்து கபாலத்தைப் பிளந்து ஓடிவிடும்.

வயிரவ வாயு.—காலெலும்பு உடற்கதிரெலும்பு கூடின விடத்திலே நின்று, உடம்புக்குப் பெலனுண்டாக்கி வைத்தும், வாதமும், சளியும், இருமலு முண்டாக்கிய அவயவங்களை யெல்லாம் செவ்விதாக நிறுத்தும்.

அந்தரியாமி வாயு,—புருடனுக்கு வாகனமாகி நின்று பிராணவாயுவைத் தோற்றுவிக்கும்.

பிரவஞ்சக வாயு—மூலாதாரத்திலே தோன்றி பிராணவத்துக்கு இருப்பிடமாக இருக்கும்.

வயிரவ வாயுவும் முக்கிய வாயுவும் —உடம்பென்னுந் தேருக்கு அச்சாக இருக்கும்.

இனி அந்தரியாமியும் பிரவஞ்சனும் கடையாணியாக விருக்கும்.

அச்சுங் கடையாணியுங் கழன்றால் தேருங் கழன்று வீழ்வதுபோல இவ்வாயுக்கள் கழன்றால் சரீரமுங் குலையும். (61)

அறுபத் திருபத் திருநூற்றி யெண்ப தனைத்துஞ்சந்து
அறுபத் திருபதி னூற்றிரு பத்தே யகன்றிறைச்சி
அறுபத் திரண்டினி லாறஞ் சகன்ற முழக்குடலாம்
அறுபத் திரண்டினி லைம்பத்தி யொன்பா கல்பிணியே.

(எ-து,) அறுபத்து இருபத்து இருநூற்று எண்பது சந்து அனைத்துமே (௩௰ × ௨ = ௬௰௨, ௬௱௨௰-ம ௨௱௮௰-ம் ௬௱)· (சிரத்திரர்கள்) சந்துகள் கொள்ளப்பிரமும், அறுபத்து இருபது இல் - அறுநூற்றிருபதில், நூற்று இருபது அகன்று - நூற்றிருபது போனால் நீக்குகிற,) ஐந்நூறு பலங்களும், இறைச்சி-மாம்சம், அறுபத்து இரண்டினில் ஆறு அன்று அகன்ற முழக்குடலும-(௬௰௨-ல் (௩௰ நி) ௬௰ அகல ௩௰௨) முப்பத்திரண்டு முழக்குடலும், அறுபத்து இரண்டினில் ஐம்பத்தொன்பான் அகல் பிணியே (௬௰௨-ல் ௫௰௯ அகல ௩) அறிகிரோமாம். (எ-று.)

முப்பிணியாவன.—வாத பித்த சிலேட்டுமம்.

வாதத்துக் குற்பத்தி யாதெனில்.—வாயு.

பித்தத்துக் குற்பத்தி யாதெனில்.—அக்கினி.

சேத்துமத்துக் குற்பத்தி யாதெனில்.—அப்பு.

தச வாயுக்களும் நாடியிலே மருவாமல் ஒழுகை வாதமாம்.

தசவாயுக்களும் ஆதாரத்தை மாற்றி மிகவுந் தஞ்சரித்து இருதயகமலத்திலே ஏறினால் பித்தமாம்.

தசவாயுக்களும் அக்கினியுடனே கலவாமல் கலங்கியோடினால் சேத்துமமாம். (62)

அறுபத்து மூன்றுட னேழு மணைந்திடும் பேரத்தியும்
அறுபத்து மூன்றினி லைம்பத்தஞ் சிற்சா ணுயரமேயும்
அறுபத்து மூன்றினி லைம்பத்தி யொன்ப தகல்பருமன்
அறுபத்து மூன்றினி லைம்பத்து நாலற்ற வாயிலுண்டே.

(இ-ள்.) அறுபத்து மூன்றுடன் ஏழும் அணைந்து இடும் பேர் அத்தியும்-(௬௰௩-ம ௭-ம் ௭௰) எழுபது பெரிய எலும்புகளும், அறுபத்து மூன்றினில் ஐம்பத்து அகல இல் சாண் உய

ரம் மெய் ஈடம்-(௬௰௩-ல் ௫௰௯ இல்லாதது ௪) வஞ்சாணுயா முள்ள உடம்பும், அறுபத்துமூன்றினில் ஐம்பத்து ஒன்பது அகல் பருமன்-(௬௰௩-ல் ௫௰௯ அகல ௪) நாற்சாண் பருமனும், அறுபத்துமூன்றினில் ஐம்பத்து நால் அற்ற வாயில் (௬௰௩-ல் ௫௰௪ அற்றது ௯) நவத்துவாரங்களும், உண்டு - இருக்கின்றனவாம். (எ-று.) (63)

அறுபத்து நாலி லறுபதில் லந்தக் கரணங்களும்
அறுபத்து நாலி லறுபதில் லாதறை வாக்குகளும்
அறுபத்து நாலி லறுபத்தொன் றில்லாக் குணங்களன்றி
அறுபத்து நாலி லறுபத்தொன் றேகழிந் தோடனையே.

(எ-து.) அறுபத்துநாலில் அறுபது இல் அந்தக்கரணங்களும்-(௬௰௪-ல் ௬௰ இல்லாதது ௪ - அந்தக்கரணங்கள் நாலும், அறுபத்து நாலில் அறுபது இல்லாது அறை வாக்குகள் உம்-வாக்குகள் நாலும், அறுபத்து நாலில் அறுபத்து ஒன்று இல்லா குணங்கள் அன்றி - (௬௰௪-ல் ௬௰௧ இல்லாதது ௩) முக்குணங்களே யல்லாமல், அறுபத்து நாலினில் அறுபத்து ஒன்று கழிந்து ஓடு அனையே-(௬௰௪-ல் ௬௰௧ போக ௩) மூவித வக்கணைகளாம். (64)

அந்தக்கரணங்கள் நாலின் சேதியும் ஏதென்னில்:—

1. ஆன்மா வேண்டிய பொருளைத்தான் முந்திப்போய்க் குரங்குபோலப் பற்றிக்கொண்டு கொள்ளிவட்டம்போலச் சுழன்று திரிவதே மனமாம்.

2. மனம் பற்றின காரியத்தைப் பித்தனைப்போல சங்கற்ப விகற்பமாக நிச்சயிப்பதே புத்தியாம்.

3. புத்தி நிச்சயித்ததை யானையைப்போல் மதம் பிடித்திருப்பதே அகங்காரமாம்.

4. ஆங்கார மெழுந்ததை பாம்புவிஷத்தை நெஞ்சிலே வைத்திருப்பதுபோலச் சிந்தித்துக்கொண்டிருப்பதே சித்தமாம்.

வாக்குகள் நாலின் சேதியுமேதென்னில் —

1. மூலாதாரத்திலிருந்து பிரணவத்திலே ஒரு நாதமாக வெழுந்து நாபியளவு திரண்டு விந்துவட்டத்திலே தானே தோன்றி நிற்பது சூக்குமையாம்.

2. விந்துவாகிய வட்டத்துள்ளே யொன்றைச் சொல்லப் படாநின்ற சொற்பொருளுக் கேதுவாகிய வொவ்வொன்றான அட்சரங்களினுடைய வுருவங்கள் தோன்றுகிற முறைமைதன்னை, அடவிலே கூட்டி மயில்முட்டைக்குள் சலத்தில் பஞ்சவர்ணமுந் தோன்றி யுருத்தெரியாதே நின்றாற்போலடங்கி சித்தத்திலே ஒரு பொருளாய் உணர்வு மாத்திரமாய் நிற்பதே பைசந்தியாம்.

3. பிராணவாயுவிலே கூடி வருகிற அட்சரங்களைப் பொருந்தத் தக்கதாக வுருவங்களை யெல்லாம் ஒழுங்குபட நிறுத்தி, செவிக்குக் கொள்ளாமல், உள்ளே யறிவாய் மெதுத்தொனியாக நாபியிற் பிறப்பதே மத்திமையாம்

4 அப்பிராண வாயுவுடனேகூடி அட்சரங்களைப் பொருந்தி சூக்குமைமுதலான வாக்குகளுடனே உதான வாயுவையுங்கூடி, புத்தி தத்துவத்தை யுபாதான மாக்கிக்கொண்டு, கண்டம் இருதயம், என்பவற்றுடன் கூடி, அணையற்று, வாயுநகர்ந்து கூடி, உதடு, பல்லு, நாசி, மூக்கு என்னும் அட்டத்தானத்திலேயும் புறப்பட்டு வசனங்களைச் செவியின் பகுதிபெறக் கேட்கத்தக்கதாக நினைத்த பொருளைப் பிரகாசிப்பிக்கத் தக்கதாகச் சொல்லுதலே வைகரியாம்.

முக்குணங்களின் சேதியை, தொகை அகராதியிற் காண்க. எட்சணை மூன்றின் சேதியும் ஏதென்னில் —

1. பிறர்தனத்தைத் தாங்கி பிரட்சிக்குதலே அர்த்தவெட்சணையாம்.

2. புத்திரரால் வரும் பிணக்கை யொழிக்குதலே, புத்திரவெட்சணையாம்.

3. தன்னை யடைந்தார்க்குத் தானென்று கொள்ளையே லோகவெட்சணையாம்.

அறுபத்தி யஞ்சி லறுபதிற் கோசத்தி லாவிநின்ற
அறுபத்தி யஞ்சி லறுபதிற் பூதமெய் யாட்டறிந்து
அறுபத்தி யஞ்சி லறுபதிற் பூதமெய்ப் போக்ககன்று
அறுபத்தி யைந்தினி லைம்பத்தி யேழி லனைத்தேகுமே.

(இ-ள்) அறுபத்து ஐந்தில் அறுபது இல் கோசத்தில்-(௬௰௫-ல் ௬௰ இல்லாதது ௫) ஐங்கோசத்திலும், ஆவி நின்ற-சிவன் நின்றது, அறுபத்து ஐந்தில் அறுபது இல் பூதம் - ஐம்பூதத்தாலும், மெய் ஆட்டு அறிந்து - உடல் உண்டானது தெரிந்து, அறுபத்து அஞ்சில் அறுபதில் பூதம ஐம்பூதங்களினுடைய, மெய் போக்கு அகன்று-உண்மையான போக்குகள் எல்லாம் நீங்கி, அறுபத்து ஐந்தில் ஐம்பத்து ஏழில் அனைத்து ஏகுமே-பரிபட்ட காயமாய்ப் போம். (இ-று) (65)

ஐங்கோசங்களின் பெயரும் அவற்றின் குணங்களும்.

1. சாதுக்களினாலே பெருத்த உடம்பு முதல் அன்னசாரமாதலாலே அன்னமயகோசம்.

2. அன்னசாரத்தினாலே பிராணனுக்குப் பெலனுண்டாகையால் பிராணமயகோசம்.

3. பிராணத்தினாலே மனமுவந்து தோன்றுமாகையினாலே மனோமயகோசம்.

4. மனதின்கண்ணே விஞ்ஞானமாகிய நெறி தோன்றுமாகையினால், அது விஞ்ஞான மயகோசம்.

5. அந்த விஞ்ஞானத்தினாலே ஆனந்தந் தோன்றுமாதலால், அது ஆனந்தமயகோசம்.

பஞ்சகோசத்திலும் சீவனிருப்பதற்குத் திருஷ்டாந்தமே தென்னில் அன்னமில்லாவிட்டாலும், பிராணவாயுவில்லாவிட்டாலும், மனதில்லாவிட்டாலும், அறிவில்லாவிட்டாலும், சுகமில்லாவிட்டாலும், தேகத்திற் சீவனிராது.

ஆகையாற் பஞ்சகோசத்திலும் சீவன் ஆதாரமாயிருந்து, ஐம்பூதத்தினு லுண்டாவது சரீரம்.

இவ்வைம் பூதத்திலும் பிருதிவியாவதேதென்னில்— மயிர், தோல், என்பு, நரம்பு, தசையிவ்வைந்தாகிய மண்ணாம். இதுவுடம்பு உறுத்துத் தடித்திருக்கும்.

2. அப்புவாவ தேதென்னின் — நீர், உதிரம், சுக்கிலம், மூளை, கிணம், இவ்வைந்தாகிய தண்ணீராம். இதுவுடம்பு குளிர்ந்த பதஞ்செய்யும்.

தேயுவாவது—ஆகாரம், நித்திரை, பயம், மோகம், வெளிர்சம், இவ்வைந்தாகிய நெருப்பாம். இதுவுடம்பு பட்டொன்றுவிக்கும்.

வாயுவாவது—ஓடல், இருத்தல், படுத்தல், நடத்தல், கத்தல் இவ்வைந்தாகிய காற்று. இதுவுடம்பு சரிந்திரட்டும்.

ஆகாசமாவது—குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சரியம் இவ்வைந்தாகிய வெளி. இதுவுடம்பு நிற்பதாய் இடங்கொடுக்கும்.

இங்ஙனமாய பூததேகத்தைப் பிராரத்தத்தினால் நான் தொழிலையுமடையும் நடத்துகின்றவினை தீர்ந்தவுடனே யாதத்தைவிட்டு, புரியட்ட காயத்துடனே ஜீவன் போம்.

புரியட்டகாயமாவதேதென்னில்—சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம், மனம், புத்தி, அகங்காரம் இவ்வெட்டுமாம்.

புரியட்ட காயத்துடனே ஜீவன் போவ தெப்படியென்னில்: பாம்பு தோலை யுரித்துக்கொண்டு போனதுபோலவாம். சீவனப்படி போனபடியினாலே பூதகாயத்திலே புரியட்ட காயமில்லை. எப்படியென்னில்—காதிருந்துங் கேளா. கண்ணிருந்தும் பாரா. தோலிருந்தும் பரிசமறியா. நாக்கிருந்தும் சுவையறியா. மூக்கிருந்தும் முகரா. அன்றியும், நினைக்க மனமில்லை. நிச்சயிக்க அறிவில்லை முதலியன காண்க.

இதனால் ஆன்மாவுக்கு முத்தி வருமளவும், புரியட்ட காய முண்டாம் என்றபடியாம்.

அறுபத்தி யாறி லறுபதிற் சூடிலை யன்றிமண்ணோ
அறுபத்தி யாறி லறுபதிற் சமயமேன் றறைவதேன்னே
அறுபத்தி யாறி லறுபதி லந்தக ராலேகண்டோ
அறுபத்தி யாறி லறுபதி லாக வறைவதோப்போ.

(எ-து.) அறுபத்து ஆறில் அறுபது இல் குடியை அன்றி (௬௰௬-ல் ௬௰ போக ௬) ஆறாகிய கெங்கையை யணிந்தானை யல்லாமல், மண்ணோர் - உலகத் துள்ளவர்கள், அறுபத்து ஆறில் அறுபது இல் சமயம் அறைவது என்னோ - அறுவகைச் சமயங்களைக் கூறுவ தேனோ! அறுபத்து ஆறில் அறுபது இல் அந்தகர் ஆனை கண்டோர்-ஆனையைக் காணவந்த பிறவிக் குருடர்கள் அறுவர், அறுபத்து ஆறில் அறுபதில் ஆக அறைவது ஒப்போ- அறுவிதமாகச் சொல்வது சரியோ. (எ-று.) (66)

அறுவித சமயமாவன.—உலகாயுதன், மாயாவாதி, புத்தன், சமணன், மீமாம்சன், பாஞ்சராத்திரி.

யானையைப் பார்க்க விரும்பிய பிறவிக்குருடர்கள் அறுவர். யானையினிடஞ் சென்று ஒருவன் காதையும், ஒருவன் தும்பிக்கையையும், ஒருவன் காலையும், ஒருவன் வாலையும், ஒருவன் தந்தத்தையும், ஒருவன் உடம்பையும் ஆகக் கையினாற் றடவியமாத்திரமே யானையென்று, அறுவரும் அறுவிதமாகச் சொல்வது போலுமாம்.

அறுபத்தி யேழி லறுபதில் லாதுவித் தியாதத்துவம்
அறுபத்தி யேழி லறுபத்து நாலற்ற தாங்காலமும்
அறுபத்தி யேழி லறுபத் திரண்டிற் சிவதத்துவம்
அறுபத்தி யேழி லறுபத் திரண்டற்ற வத்தைமத்தியே.

(எ-து.) அறுபத்து ஏழில் அறுபது இல்லாது வித்தியாதத்துவம் - (௬௰௭-ல் ௬௰ போனது ௭) வித்தியாதத்துவம் ஏழாம், அறுபத்து ஏழில் அறுபத்து நால் அற்றது ஆம் காலம் உம- (௬௰௭-ல் ௬௰௪ செல்ல ௩) காலம் மூன்றும், அறுபத்து ஏழில் அறுபத்து இரண்டு இல் சிவதத்துவம்-(௬௰௭ - ல் ௬௰௨ இல்லாதது-௫) சிவதத்துவம் ஐந்தாம், அறுபத்து ஏழில் அறுபத்து இரண்டு அற்று அவத்தைமத்தியே - மத்தியாவத்தை யைந்தாம. (எ-று.) (67)

வித்தியாதத்துவம் ஏழாவன —காலம், நியதி, கலை, வித்தை இராகம், மாயை, புருடன். ஆன்மாவுக்கு வித்தையினாலே புசிகரண முண்டாக்குகையினாலே வித்தியாதத்துவமென்ற பெயரி

று. இந்த வித்தியாதத்துவத்திற்கு சுத்தாசுத்த தத்துவமென்னும் பெயர். ஏனெனில், அசுத்த மாயையினாலே தோற்றமாயிருக்கச்செய்தேயும் சுத்த மாயையினாலே பிரேரிக்கையாலெனக் கொள்க.

இவற்றின் செய்தி யேதென்னில்:—முற்கூறிய யேழினும் காலதத்துவம் மூன்றுவகையாம். அவையாவன:—செல்காலம், நிகழ்காலம், வருங்காலம்.

செல்காலமாவது:—ஆன்மாக்கள் நடக்கின்ற காலங்களிலே யிவனுடைய கர்மம் கட்டுண்ட வெல்லையிலே கொண்டுபோய் வைப்பதுவாம்.

நிகழ்காலமாவது:—அவ்வெல்லையிலே பண்ட பதார்த்தங்களைப் பலிக்கச்செய்வதுவாம்.

வருங்காலமாவது:—அப் பதார்த்தங்களை நோக்கிப் புதுமை செய்வதுவாம்.

இனி நியதியாவது:—அவ்விடத்திலே செய்த வினையளவு வருகிற பலனை யேற்றக்குறைச்சல் வாராதபடிக்கு, அவ்விடத்து வருகிற கன்மம் புசிக்குமிடத்து இராசனுடைய ஆக்கினையைப்போல கடவாதபடிக்கு யிவனை நிறுத்துவதுவாம்.

கலையாவது:—இவன் கன்மத்தைப் புசிப்பது காரணமாக ஆணவமலத்தால் மறைப்புண்டு கிடந்தவனை யம்மலத்தைச் சிறிது நீக்கி யிவனுக்குக் கிரியை யுண்டாக்குவதாம்:

வித்தையாவது:—கிரியை செய்யு மிடத்திலே புத்திக்கும் சீவனுக்கும் நடுவாக நின்று, அவ்விடத்திற் கிரியைக்கேற்ற அறிவுண்டாக்குவதாம்.

இராகமாவது:—இவன் கன்மம் அறிவாகச் செய்யுமிடத்திலே தான் பெற்ற பலனைச் சிறிதாக்கிப் பெறுததின்மேற் பிரியமுண்டாக்குவதுவாம்.

மாயையாவது:—தான் பெற்ற பதார்த்தத்தைத் தான் யோசிக்குமிடத்து, அந்த பதார்த்த மென்ன, தானென்ன இரண்டற

மயக்குவித்து, இதுவே யொழிந்து வேறில்லையென்று மோகத்தைப் பண்ணுவது.

புருடனாவது—ஆன்மா அவிகாரியா யிருப்பன். அவிகாரியான ஆன்மாவுக்கு விகாரத்தை யுண்டாக்கி இந்திரியங்களிலே நின்றாற்போலப் பஞ்சேந்திரியங்களோடும் கொள்ளிவட்டம்போலச் சுழன்று திரிந்து ஆன்மா புசிக்கின்ற சத்தாதி விஷயத்தைத் தானே புசித்தேனென்பதாம்.

சிவதத்துவம் ஐந்தாவன—சுத்த வித்தை, ஈசுரம், சாதாக்கியம், சத்தி, சிவம் இவை யிவற்றுக்கும் சுத்த தத்துவமென்றும், பிறக்காண்டமென்றும் பெயர். சுத்த தத்துவமென்றது சுத்த மாயையிலே தோன்றுதலினா லெனிய. பிறக்காண்டமென்றது.—வித்தியா தத்துவத்தைப் பிரேரிக்கையினாலாம்.

வித்தியா தத்துவத்தை சிவதத்துவம் பிரேரிப்ப தெப்படியெனில்—காலத்தையும், நியதியையும், கலையையும் சத்தி தத்துவஞ் செலுத்தும். வித்தையைச் சுத்தவித்தை செலுத்தும். இராகத்தை யீசுரஞ் செலுத்தும். மாயையைச் சிவதத்துவஞ் செலுத்தும். புருடனைச் சாதாக்கியஞ் செலுத்தும்.

இனி சுத்தவித்தையாவது—ஞான மேறிக் கிரியைக் குறைந்திருக்கும்.

ஈசுரமாவது—ஞானங் குறைந்து கிரியை யுயர்ந்திருக்கும்.

சாதாக்கியமாவது—ஞானமுங் கிரியையும் ஒத்திருக்கும்.

சத்தியாவது—கிரியையை நாடியிருப்பதாம்.

சிவமாவது—ஞானமா யிருப்பதாம்

மத்தியாலவத்தை யைந்தாவன.—சாக்கிரத்தில் அதீதம், சாக்கிரத்தில துரியம், சாக்கிரத்திற் சுழுத்தி, சாக்கிரத்திற் சொற்பனம், சாக்கிரத்திற் சாக்கிரம்.

சாக்கிரத்தி லதீதமாவது.—கருவிகரணாதிகளுடனே கூடி சாக்கிரஸ்தானத்தி லிருக்கச்செய்தே முன் னா மொருவனை யறிவோம் அவனைச் சிலநாள் கழிந்தபின்பு நம்முடைய பேரைச் சொல்லி

முன்வந்து நின்று, நம்மை யறிவீரோ வென்றான். அங்ஙனஞ் சொன்னவனை யறியமாட்டாமல் கருவிகரணாதிகளுடனே யெல்லா மிழந்தவிடமாம்.

சாக்கிரத்திற் றுரியமாவது:—மூலப்பிரகிருதியுடனே பிராண வாயுவாம்.

சாக்கிரத்திற் சுழுத்தியாவது:—பிரகிருதியும், பிராணவாயுவும் சத்தத்துடனே கூடி யவனைக் கண்டவிடம் நிகழ்கலாம்.

சாக்கிரத்திற் சொற்பனமாவது:—பிரகிருதியுந், தசவாயும், அணுதிகளும், சத்தாதிகளும், வசனாதிகளுமாக இருபத்தஞ்சு கருவி களுடனேயுங் கூடி யவனை யின்னானென்று அறிவதுவாம்.

சாக்கிரத்திற் சாக்கிரமாவது:—பிரகிருதியும், அந்தக்கரணங்க ளும், தெசவாயுக்களும், ஞானேந்திரியங்களும், கன்மேந்திரியங் களும், சத்தாதியும், வசனாதியும் ஆக ௩௰௫-கருவிகளுடனேகூடி ஊரும் பேரும் உறவும் சந்தேகமற வறிந்து கட்டிக்கொள்ள அவ ரெழுந்தவிடமாம்.

அறுபத்தி யெட்டி லறுபத்தேழி லாதுபிரே ருலவத்தை
அறுபத்தி யெட்டி லறுபத்து மூன்றற்ற தாகும்பையும்
அறுபத்தி யெட்டி லறுபதில் லாதுவி காரநேஞ்சே!
அறுபத்தி யெட்டி லறுபதில் லாதணுச் செயலுன்னுமே.

(எ-து.) நெஞ்சே-மனமே! அறுபத்து எட்டில் அறுபத்து ஏழு இலாது பிரேருலவத்தை-(௬௰அ-ல் ௬௰எ இல்லாதது - க) பிரேருலவத்தை யொன்றும், அறுபத்து எட்டில் அறுபத்து மூன்று அற்றது ஆகும் பையும் - (௬௰அ-ல் ௬௰௩ அற்றது ரு) பை டையந்தாம், அறுபத்து எட்டில் அறுபது இல்லாது விகாரம்- (௬௰அ-ல் ௬௰ இல்லாது அ) விகாரம் எட்டாம், அறுபத்து எட் டில் அறுபது இல்லாது அணுச்செயல்-ஆன்மதொழில் எட்டாம் என்று உன்னும்-என்றிவ்வாறாக நினையும். (எ-று.) (68)

பிரேருலவத்தையாவ தேதென்னில்—ஆன்மா நல்வினை யிர ண்டையுந் தத்துவத்துடனே பொருந்தியிருத்தலாம். அஃதெப் படியென்னில்: யாதா மொரு கருமத்தைக் காது ஆகாசத்தினிட நக் கேட்கும். கேட்டதை மனது நினைக்கும். நினைத்ததைப்

புத்தி நிச்சயிக்கும். நிச்சயித்ததை ஆங்காரந் திடமாயெழுப்பும். எழுப்பியதை சித்தம் சிந்திக்கும். சிந்தித்ததை காலம் கட்டுண்ட எல்லையில் கொண்டுவைக்கும். வைத்ததை நியதி நிறுத்தும். நிறுத்தியதைக் கலை அறிவிக்கும். அறிவித்ததை வித்தை செய்விக்கும். செய்வித்ததை யிராகம் (பெற்றதைச் சிறிதாக்கிப் பெறுத தின்மேற்) பிரியமுண்டாக்கும். உண்டாக்கிவைத்ததைப் புருடன் நானெனன் றபிமானிக்கும். அபிமானித்ததை மாயை மயக்குவிக்கும். மயக்கியதைப் பிரகிருதி யழுந்துவிக்கும். இவ்வாறாக பதினறு தத்துவத்தைக்கொண்டு ஒருவிஷயத்தை யான்மாவுக்கு கிரியாசத்தி போசிப்பிக்கிறது தம்பிரான் செயலென் றறியாதபடியினலேயன்றோ ஜனன மரண முண்டானது.

வை யைந்தும் அவற்றின் செயல்களும் என்னவென்றல்:—

1. அமரவாசயம்—இது ஆசாரக்கிடை.

2. பக்குவாசயமாவது:—இது யாகஞ்செய்யு மிடன்.

3. மலவாசயம்:—மலக்கிடை,

4 மூத்திர வாசயம்:—சலக்கிடை.

5. கெர்ப்பவாசயமாவது:—விந்துக்கிடை.

விகார மெட்டும் அவற்றின் செயல்களும்.

1. காமமாவது:—தன் தார மிருக்கப் பிறதாரம் நத்தல்.

2. குரோதமாவது.—கோபம்.

3. லோபமாவது:—பொய்ச்சார்வு கொள்ளலும், உலுத்தமும்.

4. மோகமாவது:—மனை மக்க ளாசை.

5. மதமாவது:—தனக் கெதிரில்லையென்னுங் கெர்வம்.

6. மாச்சரியமாவது:—உறவுபோல விருந்து, உள்வினை விளைத்தல்.

7. இடும்பையாவது:—தா னெழுக்கமில்லாம லிருந்து தானெருவர் கொளக் கொளல்.

8. அசூயையாவது:—ஒருவனை புரணி சொல்லுதல், தன் குற்றங் காணது பிறர் குற்றங் காண்டல்.

உயிர்ச்செய லெட்டாவன:—இச்சை, அறிவு, இயற்றல், வெறுப்பு, விருப்பு, மயக்கம், இன்பம், துன்பம்.

அறுபத்தோன் பத்தி லறுபத்தெட் டில்லாதா காசகுணம்
அறுபத்தோன் பத்தி லறுபத்தி யேழிலா தாம்வளிக்கும்
அறுபத்தோன் பத்தி லறுபத்தா றில்லாத வக்கினிக்குணம்
அறுபத்தோன் பத்தி லறுபத்தஞ் சில்லாப் புவனிக்கஞ்சே.

(எ-அ.) அறுபத்து ஒன்பதில் அறுபத்து எட்டு இலாது ஆகாச குணம்-(௬௰௯-ல் ௬௰௮ இல்லாதது ௧) ஆகாசத்துக்குச் (சத்த) மொன்றே குணம், அறுபத்து ஒன்பதில் அறுபத்து ஏழ் இலாது ஆம் வளிக்கும்-(௬௰௯-ல் ௬௰௭ இல்லது ௨) வாயுவுக்குச் (சத்த பரிசமாக) இரு குணங்களாம், அறுபத்து ஒன்பதில் அறுபத்து ஆறு இல்லாது அக்கினி குணம்-(௬௰௯ ல் ௬௰௬ இல்லாது ௩) தேயுவுக்கு (சத்த, பரிச, ரூபமாக) மூன்று குணங்களாம், அறுபத்து ஒன்பதில் அறுபத்து அஞ்சு இல் அப்பு-(௬௰௯-ல் ௬௰௫ இல்லாதது ௪) அப்புவுக்கு (சத்த, பரிச, ரூப, ரசமாக) நாற்குணங்களாம், புவனிக்கு அஞ்சு-பிருதிவிக்கு (சத்த, பரிச, ரூப, ரச, கெந்தமாகிய ஐந்துமாம், (எ-று.) (69)

எழுபது மும்மாவை யும்வணங் காயிய லறஞ்செய்யாய்
எழுபதி லிருபத்தோன் றில்லாத தோதில்லை யிறையடிமேல்
எழுபது மைக்கிணை யாகிய மாதர்மீ திச்சையுற்றால்
எழுபது மைக்கொத்த யிவ்வுடற் போய்விடி லென்செய்வதே.

(எ-து.) எழுபது மும்மாவையும் வணங்காய்-(௭௰ மும்மா௰௨) தம்பிரானுடைய பத்தர்களை வணங்கமாட்டாய், இயல் அறஞ்செய்யாய்-தகுதியான தருமங்களையுஞ் செய்யாய், எழுபது இல் இருபத்து ஒன்று இல்லாத தோதில்லை இறை அடிமேல்-(௭௰-ல் ௨௰௧ போக-௪௰௯) பரமசிவனுடைய பத்தியில்லை, எழுபது மைக்கு இணையாகிய மாதர்மீது இச்சை உற்றால் - எழுதப்பட்ட சித்திரத்திற் கொப்பாகிய மாதர்மீது ஆசை வைத்தால், எழுபது மைக்கு ஒத்த இவுடல் போய்விடில் என் செய்வதே-எழுதிய பதுமைக்குச் சமானமான இவ்வுட லிறந்துவிட்டால் என்ன செய்தல், (எ-று.) (70)

எழுபத்தி யொன்றி லெழுபதி லெண்ணமோ வெண்ணுதனீ
எழுபத்தி யொன்றி லெழுபதில் வாதையே யெண்ணியொன்றாய்
எழுபத்தி யொன்றி லெழுபதில் லாம லெமக்கருளாய்
எழுபத்தி யொன்றி லெழுபதிற் சாற்றவீ டேற்றமுண்டே.

*(எ-து.) எழுபத்து ஒன்றில் எழுபது இல் எண்ணம் ஓ நீ எண்ணுதல்-(எழக-ல் எ0 போக க) மனமே-நீ எண்ணும் எண்ணம் ஒன்றேயா? எழுபத்து ஒன்றில் எழுபது இல் வாதையே-வாதையொன்றிற் கிடனும், ஆகலான், எண்ணி ஒன்றாய்-ஒரே மனதாய் எண்ணினால், எழுபத்து ஒன்றில் எழுபது இல்லாமல்-அறியாமையை யுண்டாக்குகிற ஆணவமல மிலலாமல், எமக்கு அருளாய்-நமக்குக் காருண்யத்தோடு, எழுபத்து ஒன்றால் எழுபதில் சாற்று-ஒரேமனதா யிருநதால் சொல்லும்படியான, ஈடேற்றம் உண்டே-மேம்பா டுண்டாம. (எ-று.)* (71)

*வீடு ஏற்றம் என்றும் பிரித்துக் கொள்ளலாம்.*

எழுபத் திரண்டி லறுபத்தி யெட்டில் லதுகோணமண்
எழுபத் திரண்டி லறுபத்து நாலில்லா திந்திருநீர்
எழுபத் திரண்டி லறுபத்தி யொன்பதிற் றீவுருவம்
எழுபத் திரண்டி லறுபத்தி யாறிற்கால் வான்வட்டமே.

*(எ-து.) எழுபத்து இரண்டில் அறுபத்து எட்டு இல்லது கோணமண் - (எ௰உ-ல் சுஅ இல்லாதது ச) பிருதிவி நாற் கோண (சதுர) மா யிருக்கும், எழுபத்து இரண்டில் அறுபத்து நால் இல்லாது இந்து இரு நீர-(எ௰உ-ல் சு௰ச இல்லாதது அ) அப்பு எட்டாம் பிறையைபபோல் இரு கோணமா யிருக்கும், எழுபத்து இரண்டில் அறுபத்துஒன்பதுஇல் தீ உருவம்- (எ௰உ-ல் சு௰கூ போக ௩) தேயு முக்கோணமா யிருக்கும், எழுபத்து இரண்டில் அறுபத்து ஆறு இல் கால்- (எ௰உ-ல் சு௰சு இல்லாதது சு)வாயு அறுகோணமா யிருக்கும், வான் வட்டம் - ஆகாயம் வட்டமாயிருக்கும். (எ-று.)* (72)

எழுபத்து மூன்றி லெழுபதில் வயதுண் டிருக்குமெய்யோ
எழுபத்து மூன்றி லெழுபதில் வயதேதி லோமரணம்
எழுபத்து மூன்றி லெழுபதில் லாசையுற் றென்னபயன்
எழுபத்து மூன்றி லெழுபதிற் கண்ணனை யேத்திடையே.

(எ-து.) எழுபத்து மூன்றில் எழுபது இல் வயது உண்டு-(௭௰௩-ல் ௭௰ போக ௩) வயது மூவகைத்து, இருக்கும் மெய்யோ-இருப்பதுபோற் காட்டுஞ் சரீரமோ, எழுபத்து மூன்றில் எழுபது இல் வயது எதிலோ-மூப்பருவத் தெப்பருவத்தோ, மரணம்-சாதல், ஆகையால், எழுபத்துமூன்றில் எழுபதில் ஆசை உற்று என்னபயன்-மூவாசைகளையுறுவதால் என்னபயன்? எழுபத்து மூன்றில் எழுபது இல் கண்ணனை எத்து இடையே - முக்கண்ணுடைய பரமசிவனை இடையிடையே துதிசெய்வாய். (எ-று.) (73)

எத்து இடு ஐயே யெனப்பிரித்து மனனே, துதிசெய் யென்றும் பொருள்.

வயது மூன்றாவன:—இளமை, வாலிபம், மூப்பு.

எழுபத்து நாலி லெழுபத் திரண்டில் வினையொத்ததேல்
எழுபத்து நாலி லெழுபத்து மூன்றி லிருண்மலம்போம்
எழுபத்து நாலி லெழுபத்து மூன்றில் மலபாகமேல்
எழுபத்து நாலி லெழுபதிற் சத்தினி பாதமுண்டே.

(எ-து.) எழுபத்து நாலில் எழுபத்து இரண்டு இல் வினை ஒத்ததேல் - (௭௰௪-ல் ௭௰௨ போக ௨) இருவினை யொப்பாகில், எழுபத்து நாலில் எழுபத்து மூன்று இல் இருண் மலம் போம்-(௭௰௪-ல் ௭௰௩ போக ௧) ஆணவ மலம் ஒன்றும் போய்விடும், எழுபத்து நாலில் எழுபத்து மூன்று இல் மலபாகமேல் - ஆணவ மலம் போய் பாகமாகில், எழுபத்து நாலில் எழுபது இல் சத்தினி பாதம் உண்டே-(௭௰௪-ல் ௭௰ போக ௪) நால்வகைச் சத்தினி பாதமும் உண்டாம். (எ-று.) (74)

நல்வினை யேறினால் சொர்க்கமும், தீவினை யேறினால் நரகமுமுண்டா யனுபவித்து, மீண்டுஞ் செனித்தலால், இருவினை யொப்பில், (ஆன்மா) செனனமரணத்திற்குப் பயந்து, சிவனை வேண்டி நினைக்கும். இப்படி நினைந்த காலத்திலே மூல மலஞ் சிறிது விட்டு நீங்கும், அப்போது மந்தம், மந்ததரம், தீவிரம், தீவிரதரம், என்னும் நால்வகைப் பரிபக்குவங்களுண்டாம். இவற்றை யப்பால் விவரிப்பாம். முன் சொன்ன சத்தினிபாதமாவது-திரோதையென்னும் ஆதிசத்தி ஆன்மாக்களுக்குக் கன்மத்தைப் புசிப்பிக்கப் பண்ணுவது, காரணமாகத் தேகாதி பிரபஞ்சத்தின்மீதில் அபேட்சை யுண்டாகப் பண்ணும், இருவினையு மொத்து; மலபரி

பாகமான காலத்திலே ஆன்மாக்களுக்கு மோட்சாபேட்சை பிறப்பதாக சத்தி முன்பின்னாகத் திரும்புவதாம்.

இப்படி சத்திநிபாதமான காலத்திலே ஆன்மாக்களுக்கு அறிவு விளையும்படி எப்படியென்னில்:—சிலர் அழகாகவும், சுகமாகவும் வுண்டுடுத்துப் பூண்டுவருகிறார்களே நாமும் அவர்களைப் போல் உண்டுடுத்து வாழாதிருப்ப தேதென்றும், உடல் ஒரு தன்மையா யிராது நரை திரைப்பட்டு வருவானேனென்றும், இவைகளையெல்லாஞ் செய்வான் ஒரு கர்த்தா வுண்டென்றும் நினைந்திருப்பதே மந்தமாம்.

இனி மந்தமென்றால்:—கர்த்தனை யறிவதற்கு, அறிவிப்பானை யன்றியிலே நம்மா லறியப்போகாதெனறும், நம் வினையை நாமே * யொழிக்க வறியோமென்றும் ஆன்மா அறிதலாம். இன்னும் மந்தமென்றால்-கடபடாதிகள் முதலாகிய வுருவங்களையெல்லாஞ் சூரியனையன்றி, கண்ணானது தானே காணமாட்டாதுபோலவும், பூமியன்றியிலே கால்கள் தானே நடக்கமாட்டாதுபோலவும், குருவன்றி பரத்தை யறியமாட்டோம். அறிந்து நடக்கமாட்டோமென் றறிதலுமாம்.

இதுவன்றியும் மந்தமென்றால்:—விஷந் தலைக்கேறி மெய்ம் மறந்து கிடந்தவனை மெய்யான கருடன் பார்வையாலும் மாளாதென்று, ஒருவனைக் கெருடனாகப் பாவித்து, அவன் கெருடப் பார்வையாலே தீருவதுபோல ஆன்மாக்கள் தாங்கள் செய்த வினையாகிய விஷமெல்லாம் சிவன் றிருநோக்காலுந் தீராதென்றும், தேசிகன் திருக்கண் சாத்திடத் தீர்ந்திடுமென்றும், அறிவதுமாம்.

இதுவன்றியும் மந்தமாவது:—ஆசான் ஆணவமாகிய யிருளுக்கு அருளாதித்த னென்றும், அருவாயிருக்கும் பரம்பொருளைக் காண்பதற்கு அஞ்சன மென்றறிவதூஉமாம்.

---

* நம் வினையை நாம் ஒழிக்காத முறைமை எப்படியென்னில்:—பித்தனானவன் பித்தந் தீர தான் மருந்து கொள்ள வறியான்போலவும், விஷந் தலைக்கேறி மூர்ச்சித்தவன் தலைக்கேறியிருந்த விஷத்தை தானே மீட்டுக்கொள்ள வறியானபோலவுமாம்.

இனிமந்த மென்றால்:—அருளே யுருவாய் அறிவிக்கவந்த குருவை வேண்டாமல் அருவா யிருக்கிற பரமேச்சுரனைத் தங்க ளறிவினாலே யறிந்து, மோட்சத்தை யனுபவிப்போ மென்றும் ஆசை கொளல் என்போல வெனில்! உருவாயிருக்கும் பாலை, தேனை, பாகை, வேண்டாதவர் தித்திப்பைக் கொள்ளவேண்டிய செயலென்ற வென்று நினைப்பதுமாம்.

இன்னும் மந்தமென்றால்:—மானைக்காட்டி மானைப பிடிப பதுபோல அருவமாகிய சிவகாருண்ய பராபரந்தானே பக்கு வான் மாக்களை யிரட்சிப்பது பொருட்டாக வுருவமாய் வந்தது போல வென்றும், இப்படியாகவந்த காரணகுருவே குருவல்லது காரியக் குருவாலே பயனில்லை. அதெதன்போல வென்னின் கண் ணில்லாதவனுக்கு கண்ணுள்ளவன் கோல்காட்டாமல், குருடனு க்கு குருடன் கோல்காட்ட நடந்தால் முன்னே யிருப்பது குழி யென்றும், வழியென்றுங் காணான். இப்படி யேது மறியாத காரிய குருவானவனை நீங்கிக், காரண குருவாலே, ஆன்மலாப முண்டென்று நினைப்பதுவுமாம்.

இனி மந்ததரமாவது:—கர்த்தாவை யறியவேண்டு மென்கிற ஆசையே.

தீவிரமாவது:—கர்த்தாவை யறிவிப்பானைத் தேடுதல்.

தீவிரதரமாவது:—தேடினபடியே கிடைப்பது.

இங்ஙனம் அறிவிப்பானை யடைந்த பக்குவன் குண மேதென் னில்:—வாழைத்தண்டும் அக்கினியும் போலவும், பச்சை மரமும் அக்கினியும் போலவும், விறகும் அக்கினியும் போலவும், கரியும் அக்கினியும் போலவும், பிரபஞ்ச வழியிற் செல்லவும், முத்திவழி யில் நடக்கவும் அறியாமல் திகைப்பன்.

எழுபத்தி யைந்தி லெழுபதிற் சத்திக ளென்னசொல்லும்
எழுபத்தி யைந்தி லெழுபதிற் கிர்த்திய மென்னசொல்லும்
எழுபத்தி யைந்தி லெழுபதில் லாத வெழுத்தென்னவோ
எழுபத்தி யைந்தி லெழுபதில் பூத நிறமியம்பே.

(எ-று) எழுபத்து ஐந்தில் எழுபது இல் சத்திகள் என்ன சொல்லும் - (௭௫-ல் ௭ இல்லாதது ௫) சத்திகள் ஐந்தும

சொல்வதென்ன? எழுபத்து ஐந்தில் எழுபது இல் கிர்த்தியம் என்ன சொல்லும்-கிருத்தியங்கள் ஐந்தும் என்ன சொல்லும்? எழுபத்து ஐந்தில் எழுபது இல்லாத எழுத்து என்னமோ-பஞ் சாட்சரங்கள் என்ன சொல்லுமோ? எழுபத்து ஐந்தில் எழுபது இல் பூதம் நிறம் இயம்பு ஏ-பஞ்சபூதங்களின் நிறம் (என்னவோ) சொல்லும் (எ-று) (75)

பஞ்சசத்திகளின் பெயருந் தன்மையும் ஏதென்றால்:—

1. பரா சத்தியாவது:—சிவபோதமாய், அகண்ட பரிபூரண மாய், நிர்மலமாய், நிர்விகாரமாய், நிராகாரமாய் நிற்கிற திருவரு ளாம்.

2. இச்சா சத்தியாவது:—சர்வான்மாக்களையும் திருவடியிலே சேர்த்துக்கொள்ளல் வேண்டுமென்கிற காருண்யமாம்.

3. ஞான சத்தியாவது:—சர்வான்மாக்களையு முணர்ந் தானு கிற சிவஞானமாம்.

4. கிரியா சத்தியாவது.—பஞ்ச கிருத்தியங்களையும் நடத்து கிற சிவகிர்த்தியமாம்.

5. திரோதன சத்தியாவது:—இவையெல்லாம் ஆன்மாக்க ளுக்குத் தோன்றாமல் மறைக்கிற சிவ மகுத்துவமாம்.

பஞ்ச கிருத்தியங்களின் பெயரும் தன்மையும் ஏதென்றால்:—

1. சிருஷ்டியாவது:—ஆன்மாவையுந் தத்துவங்களையும் கூட்டு கிறதாம்.

2. திதியாவது.—கூடின வுடம்பிலே யான்மாவை நிறுத்திக் கன்மத்தைப் புசிப்பிக்கிறதாம்.

3. சங்காரமாவது:—ஆன்மாவுக்குப் புசிப்பு ஒழிந்த காலத் திலே முன் கூடியிருந்த தத்துவத்தையும் ஆன்மாவையும் பிரித்து விடுகிறதாம்.

4. திரோபவமாவது:—இம்மூன்று காரியமும் ஆன்மாவுக் குத் தெரியாமல் மறைப்பதுவாம்.

5. அனுக்கிரமாவது:—அருளா லறியப்பட்ட ஆன்மாக்க ளுக் குணர்த்துவதுவாம்.

பஞ்சாக்கரங்களின் பெயரும் தன்மையும் ஏதென்றால்.

1. அகாரமாவது:—ஐம்பத்தோரெழுத்துக்கும் பிராணனாய் சிவபீசமாயிருக்கும்.

2. உகாரமாவது:—உயிர்ப்பீசமா யிருக்கும்.

3. மகாரமாவது:—மலபீசமா யிருக்கும்.

4. விந்தாவது:—மந்திரபீசமா யிருக்கும்.

5. நாதமாவது:—வேதபீசமா யிருக்கும்.

பஞ்சபூதங்களின் பெயரும் நிறமும் என்னெனில்:—

1. பிருதிவி:—பொன்னிறம்.

2 அப்பு.—வெண்ணிறம்.

3. தேயு:—செந்நிறம்.

4. வாயு:—கருநிறம்.

5. ஆகாசம்:—தூமநிறம்.

உண்மை நெறிவிளக்கத்துட் காண்க.

எழுபத்தி யாறி லெழுபத்தோன் றிற்பூத வுருவமென்னே
எழுபத்தி யாறி லெழுபத்தோன் றிற்பூதசு பாவமென்னே
எழுபத்தி யாறி லெழுபத்தோன் றிற்பூத குணமியம்பே
எழுபத்தி யாறி லெழுபத்தோன் றிற்பூத வியாபகமே.

(எ-து.) எழுபத்து ஆறில் எழுபத்து ஒன்று இல் பூத உருவம் என்னே - (எய்கூ-ல் எயக இல்லாதது நி) ஐம்பூதங்களினுடைய உருவம் என்ன? எழுபத்து ஆறில் எழுபத்து ஒன்று இல் பூத சுபாவம் என்னே-ஐம்பூதங்களின் இயற்கை யென்னமோ? எழுபத்து ஆறில் எழுபத்து ஒன்று இல் குணம் இயம்பே-ஐம்பூதங்களின் குணம் என்ன சொல், எழுபத்து ஆறில் எழுபத்து ஒன்று இல் பூத வியாபகம் ஏ - ஐம்பூதங்களின் வியாபகம் என்ன. (எ-று.) (76)

பஞ்சபூதங்களின் உருவமாவன.—

1. பிருதிவி—உரத்திருக்கும்.

2. அப்பு—குளிர்ந்திருக்கும்.

3 தேயு—சுடும்

4. வாயு—சஞ்சரிக்கும்.
5. ஆகாசம்—இடந்தரும்.

பஞ்சபூதங்களின் சுபாவமாவன:—

1. பிருதிவி—கிடக்கும்.
2. அப்பு—பருகும்.
3. தேயு—எழும்பும்.
4. வாயு—நிறையும்.
5. ஆகாயம்—நிறக்கும்.

ஐம்பூதங்களின் குணமாவன:—

1. பிருதிவி—பொறுக்கும்.
2. அப்பு—கட்டுண்ணும்.
3. தேயு—பாகஞ்செய்யும்.
4. வாயு—பிரிக்கும்.
5. ஆகாசம்—கவிக்கும்.

ஐம்பூதங்களின் வியாபகமாவன:—

ஆகாயம் நூறாயிரங்கோடி யோசனைதூரம் விரிந்து நின்று பிருதிவி, அப்பு, தேயு, வாயு வென்னும் நாலு பூதங்களையுந் தன்னுள்ளே யடக்கிக்கொண்டு வெட்டவெளியா யிருந்து உடம்பிலே குரோதமாய், மோகமாய், மதமாய், மாற்சரியமா யிருப்பதுவாம். இப்படியே பஞ்சபூத வியாபகமு மறிய.

எழுபத்தி யேழி லெழுபத் திரண்டிலாச் சேடமென்னே
எழுபத்தி யேழி லெழுபத் திரண்டில்ல தேதிலுண்டாம்
எழுபத்தி யேழி லெழுபத் திரண்டற்ற தேதிலிடமாம்
எழுபத்தி யேழி லெழுபத் திரண்டற்ற சுத்தியென்னே.

(எ-து.) எழுபத்து எழில் எழுபத்து இரண்டு இலா சேடம் என்னே - (௭௰௭-ல் ௭௰௨ இல்லாதது ௫) ஐம்பூதங்களின் விசேடம் என்ன? எழுபத்து எழில் எழுபத்து இரண்டு இல்லது எது இல் உண்டு ஆம்-ஐம்பூதங்களும் எதெதினின்றும் பிறந்தது? எழுபத்து எழில் எழுபத்து இரண்டு அற்றது எதில் இடம் ஆம்-ஐம்பூதங்களும் எதெதினிடமாபிருக்கும். எழுபத்து எழில் எழுபத்து இரண்டு அற்றது சுத்தி என்னே-பஞ்ச சுத்திகளாவன யாவை. (எ-று.) (77)

பஞ்பூதங்களின் விசேடமாவன:—

1. பிருதிவி—சிறப்பாயிருக்கும்.
2. அப்பு—நொய்மையாயிருக்கும்
3. தேயு—பெருமையாயிருக்கும்.
4. வாயு—தெரியாதாயிருக்கும்.
5. ஆகாயம்—நண்மையாயிருக்கும்.

பஞ்பூதங்களும் எதனிடமாய் உண்டாச்சுதென்னில்:—

1. பிருதிவி—கெந்தத்திலே தோன்றும்.
2. அப்பு—இரசத்திலே தோனறும்.
3. தேயு—ரூபத்திலே தோன்றும்.
4. வாயு—பரிசத்திலே தோன்றும்.
5. ஆகாயம்—சத்தத்திலே தோன்றும்.

பஞ்ச பூதங்களும் எதேதினிடமா யிருக்குமென்னில்:—

ஆகாசத்தின் குணம்:—சத்தம். சத்தத்தைச் சுரோத்திரம் அறிகையினாலே, சுரோத்திரம் ஆகாசத்தினிடமாம்.

2. வாயுவின்குணம்:—பரிசம். பரிசத்தைத் தொக்கு அறிகையினாலே தொக்கு வாயுவினிடமாம்.

3. தேயுவின்குணம்:—ரூபம். ரூபத்தைச் சட்சு அறிகையினாலே சட்சுதேயுவினிடமாம்.

4. அப்புவின்குணம்:—இரசம். இரசத்தை சிகுவை யறிகையினாலே, சிகுவை யபபுவினிடமாம்.

5. பிருதிவியின்குணம்:—கெந்தம் கெந்தத்தை ஆக்கிராண மறிகையினாலே ஆக்கிராணம் பிருதிவியினிடமாம்.

இவை யன்றியும்.

1. பிருதிவியின் குணம்:—ஆநந்தம். ஆநந்தத்தை உபத்தஞ் செய்கையினாலே உபத்தம். பிருதிவியினிடமாம்.

2. அப்புவின் குணம்:—விசர்க்கம் விசர்க்கத்தைப் பாயுரு செய்கையினாலே பாயுரு அப்புவினிடம்.

3. தேயுவின் குணம்:—தானம். தானத்தைப் பாணிசெய்கையினாலே பாணி தேயுவினிடமாம்.

4. வாயுவின் குணம்.—நடத்தல். நடத்தலைப் பாதஞ் செய்கையினாலே பாதம் வாயுனிடமாம்.

5. ஆகாசத்தின் குணம்:—வசனம், வசனத்தை வாக்கு செய்கையினாலே வசனம் ஆகாசத்தினிடமாம்.

1. பிருதிவியின்குணம்:—கடினம். கடினத்தைமனமுடைத்தாகையினாலே மனம் பிருதிவியினிடம்.

2. அப்புவின்குணம்:—கிகழ்ச்சி, கிகழ்ச்சியைப்புத்தியுடைத்தாகையினாலே புத்தி அபபுனிடம்.

3. தேயுவின்குணம்:—கோபம். கோபத்தைஆங்காரமுடைத்தாகையினாலே ஆங்காரந் தேயுவினிடம்.

4. வாயுவின் குணம்:—சாபம். சலத்தை சித்தமுடைத்தாகையினாலே சித்தம் வாயுவினிடம்.

5. ஆகாசத்தின் குணம்:—இடந்தால்-சர்வமுந் தன்னிடத்தொடுக்கிக் கொள்கையினாலே ஆன்மா ஆகாசத்தினிடமாம்.

இனி பஞ்ப சுத்தியி னிலக்கண மாவதேதெனில்,—

1. ஆன்மசுத்தியாவது:—தத்துவங்களை யெல்லாஞ் சேடமென்று கழித்துவிட்டு, அந்த அறிவிலே யறியாமல் நிற்குமதாம்.

2. திரவிய சுத்தியாவது:—தோன்றிய விடயங்களை ஞானதிட்சையா லழியப் பார்ப்பதாம்.

3. மந்திர சுத்தியாவது:—பஞ்சாட்சரத்தை விதிப்படியே 'சிவ'முன்னை நடுநின்ற அவ்வாகிய ஆன்மாவும், நவ்வாகிய திரோதையும், மவ்வாகிய மலத்தையும் அழித்து நீக்கி, வவ்வாகிய ஞானசத்தியினிடமாக நின்று, சிவ்வாகிய சிவத்திலே நின்று, வவ்வானது கழல் நின்றழுத்துமதுவேயாம்.

4. இலிங்க சுத்தியாவது:—பஞ்சாட்சரத்தின் வழியாகச் சென்று, அகண்ட பரிபூரணமான சிவத்தி னுள்ளே யழுந்தி, உட்புறம் பெண்ணுமல், சிவனை யுள்ளபடி கண்டு நிற்பதாம்.

5. பூதசுத்தி யாவது:—தத்துவ முப்பத்தாறையும், சேடமென்று கழிந்து தானறிந்ததாகாமல் நிற்பதாம்.

எழுபத்தி யெட்டி லெழுபத்து மூன்றற்ற பூதமெய்யோ
எழுபத்தி யெட்டி லெழுபத்து மூன்றினி லிந்திரியம்
எழுபத்தி யெட்டி லெழுபத்து நாலில தோவுயிர்தான்
எழுபத்தி யெட்டி லெழுபத்து யேழிற் பிராணமதோ.

(எ-று.) எழுபத்து எட்டில் எழுபத்து மூன்று அற்ற பூதம் மெய்யோ-(எம்அ-ல் எமிந அற்றது நி) ஐம பூதங்கடான் தேகமோ? (அல்லது) எழுபத்து எட்டில் எழுபத்து மூன்றினில் இந்திரியமோ-இந்திரியங்கடா (ன் தேகமோ) ஞோ? அல்லது, எழுபத்து எட்டில் எழுபத்து நால் இலதோ உயிர்தான்-(எம்அ-ல் எமச இல்லாதது ச) அந்தக் கரணங்களுளும் உயிரோ? (அல்லது.) எழுபத்து எட்டில் எழுபத்து ஏழில் பிராணம் அதோ-(எம்அ-ல் எமஎ இல்லாதது க) பிராணவாயு ஒன்று தானோ? (எ-று.) (78)

பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாய மென்னும் பஞ்சபூத சம்பந்தமான வுடம்புதானோ நான் என்பது சொல்லுமெனில்: உடம் பல்லநீ. ஏனெனில் உன்னுடம்பை யுன்னுடைய தென்று என்ற லறியப் படுகையினாலும் யென்னுடம்பானது இளைத்துப் பருத்த தென்று, உன்ற லறியப் படுகையினாலும், உறங்கும்போது நின்னுடம்பை நின்னலறியாமற் கிடக்கையினாலும், நின் ஆடையாபரணங்களை யென்னுடைய தெனற்போல வுன் னுடம்பையும் நீ என்னுடைய தென்கையினாலும், (நின் சித்தாந்தப்படி) நீயாகிய) உன் தலைமயிரும் விரல் நகமும் கழன்று போய பின்னும் நீ காண்கையினாலும், கண்ணாடி பிற் காணுஞ் செயல்களெல்லாம் பார்ப்பவனைப் பொருத்ததுபோல, உடம்பின் செயலெல்லாம் உன்னுடைய செயலாகையினாலும், தேரானது அசைவதும் இருப பதும், ஓடுவதும் ஆயவெல்லாம் இழுப்பவன் செயலைப்போல தேகம் அசைவதும், இருபபதும், ஓடுவதும் உன்னுடைய செயலாகையினாலும், மரயானைக்குள் ஆளிருந்து நடத்த நடந்தும், நடத்தாவிடிற் கிடப்பதுபோல, தேகத்தைச் சிவன் நடத்திட நடக்கும். நடத்தாவிடிற் கிடக்கையினாலும், வேடதாரி பற்பல வேடங்கள் தரிப்பதுபோல நீ பூண்டது தேகமாகையினாலும், கூண்டிற் பட்சி யிருப்பதுபோல நின் தேகமாகையினாலும், தேகம நீ

யல்ல. அங்ஙனமேல் சுடுசாதம் உண்ணும்போது, சாதம் சுடுகிறது என்றறிவது உடலன்றோ வெனின், உடலன்று எங்ஙனமெனில் சுட்டதும் சுடாததும் அறிவதும் நீயேயானால், சவமானபோது சுட்டால் மாத்திரம் ஏனறிவதில்லை. உயிரின்மையால் என்றறிய.

இனி, ஞானேந்திரியங்க ளைந்துந்தானோ நானெனில்: அல்லவாம். எப்படிக்கெனில் இந்திரியங்க ளைந்தும், இன்னின்னதைச் செய்யுமென்று நீ யறிவா யாகையாலும், ஓ ரிந்திரியம் மற்றோ ரிந்திரியத்தின் செயலை யறியாதாகையாலுமாம்.

இலையேல் அந்தக் கரணங்களோ? அல்ல. எப்படிக் கெனில் யாதா மொன்று கண்டு கேட்டதை மனம் பற்று மென்றும், அவ்வாறு பற்றினதை புத்தி நிச்சயிக்கு மென்றும், நிச்சயித்தை யாங்காரம் எழுப்புமென்றும், எழுப்பியதைச் சித்தஞ் சிந்திக்குமென்றும் உன்னா லறியப் படுகையினாலும், இந்நாலும் ஒன்றறிந்ததை யொன்றறியாதபடியினாலுமாம்.

பிராணவாயுவோ வெனில்:—அல்ல. எப்படிக்கெனில் பிராணவாயுவே நீயாகில், இதனுடன் கூட்டி யெண்ணிக்கை யிட்டு வரும் வாயுக்களெல்லாம நீயாகவேண்டும். அன்றியும் நித்திரையில் கைகாப்பை யொருவன் திருடிக்கொண்டு போனால் இன்னானென்று நீ யறியாமற் கிடப்பானேன். ஆனாலும் இப்பிராணவாயு அரமனைக்காத்த பாவனைபோலே யிந்த வுடம்பை காத்துக் கொண்டிருக்கும். உடம்பைப பிராணவாய்வு காத்திராமல் உசுவாச நிசுவாசமில்லாதபோது, சவமென வெடுத்துச் சுட்டுப்போடுவார்கள். இதனால் உடம்பைக் காக்குந் தன்மைப் பிராணவாயுக் குடைத்தாமென்ப தேற்பட்டது.

இவ்வாறே வித்தியாதத்துவமும் 7-உம் சிவதத்துவமும் 5-ம் நீ யல்ல.

தத்துவங்க ளெல்லாம் அல்ல வென்று யான் அறிவிக்க நீ யறிந்த அறிவே நீயாம்.

எழுபத்தோன் பத்தி லெழுபத்தி லெட்டினே யெண்பசுப்பேர்
எழுபத்தோன் பத்தி லெழுபத்து நாலகற் கிருதமென்னே
எழுபத்தோன் பத்தி லெழுபத்து நாலிற்பே ரிறையவராம்
எழுபத்தோன் பத்தி லெழுபத்தே ழில்லா வுடலியம்பே.

(எ-று.) எழுபத்துஒன்பதில் எழுபதுஇல்-(எய்கூ-ல் எய் இல்லாதது கூ.)-ஒன்பதும், எட்டு-எட்டும், இனே-இவை யிரண்டும், அதாவது பதினேழும், பசு எண் பேர்-ஆன்மாவினுடைய பேர்களாம். எழுபத்து ஒன்பதில் எழுபது இல் நால் அகல் கிருதம் என்னே-(எய்கூ-ல் எய்ச போக ரு) ஐம்பூதங்களின் கலப்பு என்ன? எழுபத்து ஒன்பதில் எழுபத்து நால் இல்பேர்இறையவராம்-(எய்கூ-ல் எய்ச இல்லாதது ரு) ஐங்கர்த்தாக்களாம். எழுபத்து ஒன்பதில் எழுபத்து ஏழ் இல்லாது இவ்வுடல் இயம்பே. (எய்கூ-ல் எய்எ-இல்லாதது உ) இருவகை வுடல்களாம். (எ-று.) (79)

ஆன்மாவுக்கு வந்த பதினுறு பேர்களும், அவற்றின் காரணங்களு மென்னேயெனில்:—

1. பசுத்துவ முண்டாகி ஆணவத்துடனே பொருந்தி வரலாலே பசு வொருபெயர்.

2. அந்தக் கரணங்களுடனே கூடி விகாரங்களைச் செய்கையினுலே சீவனென் றேரு பெயர்.

3. மாயா விகாரமாகிய தத்துவங்களுடனே பூரணனுகையினுலே ஆன்மா வொரு பெயர்.

4. உடம்பை யறிதலினுலே வுள்ளமென் றெரு பெயர்.

5. சர்வேந்திரியங்கட்கும் நாயக னுகையினுலே க்ஷேத்திரிக்ய னென்று பேர்.

6. சற்றறிவ னுகையினுலே பூமா னென்ற பேர்.

7. அதிசூக்குமனுகையினுலே கிஞ்சிக்கிய னென்ற பேர்.

8. சேதன னுகையினுலே அணு வென்ற பேர்.

9. தனக்கொன் றில்லாதவ னுகையினுலே சைதன்ய னென்று பெயர்.

10. அறியாதவனுகையினாலே அசுவதந்திரனென்று பேர்.

11. அடுத்தடுத்துத் தானாய் நிற்கையினாலே அகர்த்தாவென்று பேர்.

12. உடம்பை யாசைக்கிற தன்மையுண்டானவனுகையினாலே பிரகிருதியென்று பேர்.

13. பிராண வுடம்புக்கு வேறுபட்டிருக்கையினாலே பிராணனென்று பெயர்.

14. உடம்பை யன்றி வேறொன்றோடும் பற்றிருக்கையினாலே வுயிரென்று பேர்.

15. தேகாபேட்சை யுண்டாகையினாலே ஆவியென்று பேர்.

16. சத்துடனும் அசத்துடனுங் கூடி யிருக்கையினாலே சதசத்தென்று பேர்.

இனி மனம் கூறும்படி யெப்படி யென்னில்:—

கூறிய தத்துவங்களனைத்தையும் யான் அறிகையினாலும், என்னுடம்பு யானல்லாதபடியினாலும் யானென்றுஞ் சீவனென்றும் இரண்டு பொருளில்லை. நானே சீவன், சீவனே நான். உனக்கெப்படித்தேகமுண்டாச்சு தென்னில்சிலந்திதன் வாயினாலிழையினாலே, ஒரு கூண்டு செய்துக்கொண் டிருப்பதுபோல, சீவனும் எண்பத்து நான்கு நூறாயிரம் தேகாதிகளைத் தன்னருளினாலே யுண்டாக்கிக்கொண்டிருப்பனென்னில் கூறும்படி முன்னே நீஉன்னுடம்பைத் தானே நானென் றிருந்தாயே. இப்பவும் நாம் உனக்கறிவித்த அறிவைத்தானே சீவனென் றுரைத்தாய். நீயேழையான அறிவினாலே நீயே சீவனானால் நீ நித்திரை போகச்சேவுன் கையுடைமையை யொருவன் களவாய் வாங்கிக்கொண்டு போனால் வாங்கிக்கொண்டு போனவனை நீ யறியாதே போவானேன்.

இதன்றியும் உன்னுடைய பொறி புலன் கரணாதிகளெல்லாம் பிரகாசிககச்செய்தே நீ வுன் கையில் திருவாழி மோதிரத்தை யொருவன கையிலே ;கொடுதது மறந்து (நீ) ஆர் கையிற்

கொடுத்தோமோ! ஆரெடுத்துப்போனார்களோ! எங்கே விழுந்து போச்சுதோவென்று மெத்தவும் வியாகூலப்பட்டுக்கொண் டிருக்கச்செய்தே மோதிரம் வாங்கிப்போனவன் எதிராக வரக்கண்டு இவன் கையிலன்றோ கொடுத்தோமென்று நீ நினைவுவந்து வாங்கிக் கொள்கையினாலே நீ சீவனல்ல. உன் மனமும் உன் வழியதாக வருகிறதுமல்ல. ஆகையினாலே உன்னுடைய மனத்தையும் உன்னையும் திருவருள் அறிவித்திடுகையினாலே நீ சீவனல்லவென்ன- நான் என் கையில் திருவாழி மோதிரத்தையொருவன் கையிலே கொடுத்து நானறியாதே யென்னை யறியும் மனமில்லாமற் போகையினாலேயும், அவனைக் கண்டபின்பு மனது கூடி யறிந்து வாங்கினபடியினாலேயும், அறிவே நானாகையினாலும் நானே சிவனென்று பின்புங் கூற, அவனை மறுத்தருளிச் செய்யும்படி எப்படி யெனனில் —

தானே அவனவன் செய்த வினைக்கீடாக சுகதுக்கங்கள் கொடுப்பான். அதென்போலவென்னில பூமியானது அவனவனுழைப்புப்படி பிழைக்கவைப்பதபோலவென் றறிய.

ஆன்மாக்கள் செய்த வினைசகீடான பயன் பெறுவதெப்படியென்னில்—சூரியன சந்நிதியிலே தாமரை மலர்வதுபோலவும, தண்ணீர் சுவர்வதுபோலவும், மெழுகானது இளகுவது போலவும் எனவறிய. சர்வான்மாக்களிலும, திருவருளென்று மொரு பொருளிருந்து அனைத்தையும அறிவிக்கும். அத் திருவருளையுமுனக்கு நாம் அறிவிக்கிறோமல்லாமல், ஈண்டுதகரித்தபடியே சொல்லுவாயாக. நீயாய் தெரிந்து சொல்லுமென்னில் நான் தத்துவ மனைத்தையும் அறிந்து, அத் தத்துவத்தையெல்லாம் நீங்கி நின்ற அறிவே நானென்ன, அறிவே நீயானால் அறிவே நானென்று, நீதானே யறியவேண்டாமோ! அறிவு நீயென்று அறிவிக்க நீ யறிவானேன். இதுவன்றியும, அறிவே நீயானால் ஒருவனுடன் ஒரு காரியஞ் சொல்லுமென்று நினைத்திருந்த நீ அவன் அண்மையிலே வந்திருந்தபோது, அவனுடனே அக் காரியஞ் சொல்ல வறியாதே போவானேன்.

நீ சீவனேயாகில் சீவன கருவி கரணாதிகளைக்கொண்டு அறிவதிலலால் நீ கருவி கரணாதிகளைக்கொண்டு அறிவானேனை. சீவனா

சதாநந்தசொரூபன். சிவனுக்குத் துக்கவேதனை யில்லையே. உனக்குத் துக்கவேதனை யுண்டாவானேனென்னில்:—

எவனெவனும் அவனவன் செய்த நல்வினை தீவினை அவனவனனுபவிப்பதுண்டே? உண்டு. ஆகையினாலே நான் செய்த நல்வினை தீவினையை நானே யனுபவிப்பேன். அவ்வவ் வினைப்பயன் இன்ப துன்பமாக வரும். அதென்போல வென்னில் மந்தை மாட்டிலே யிருக்கிற பசுக்களையெல்லாம் கன்றானது தேடினதாயை யறிந்து சேருவதுபோல என்னாளும் யான் செய்த நல்வினை தீவினை யென்னைச் சுக துக்கமாக வந்து சேர நான் அனுபவிப்பேனென்ன பசுவின் கன்று சேடமல்ல காணும். நீ செய்த கன்மஞ் சேடங் காணும். சேடமான கன்மம் நீ சென்ன மெடுத்திருக்கு மிடமறிந்து, இன்ப துன்பமாக வுன்னைச் சேர வறியாது. இதுவன்றியும், நா முனக்குச் சொன்ன தத்துவங்க ளெல்லாம் உனக்கு அசேதனமானதுபோல சிவனுக்கு நீ அசேதன மாகையினாலே செய்த கன்மத்தை யனுபவிக்க வறியாய். ஆகையினாலே நீ யறிவுமல்ல, அறியாதவனுமல்ல.

நீயே யறிவானா லுன்னை யொருவ ரறியாமலே நீதானே யறியவேண்டாமோ? அறிவே நீ யல்லாவிட்டால் ஒருவர் அறிவித்தாலும் அறியாமல் போகவேண்டாமோ வென்ன? கூறும்படி: நா னறிந்தவனுமல்ல, அறியாதவனுமல்ல. ஆனால் நா னெத்தன்மை யுடையவனென்னில், அடுத்ததின் தன்மையானவன் அதென் போலவென்னில், கண்ணைப்போலவும், ஆகாயத்தைப்போலவும், படிகத்தைப் போலவுமாம். கண்ணானது இருள்வந்து கூடினால் இருளாயும், ஒளிவந்து கூடினால் ஒளியாயு மிருக்கும். அவையிரண்டுமல்லாத ஆகாயத்தைப்போலவும் படிகமானது தன்னை யடுத்த வருணந் தானாக விருந்தும், தா னொந்த வர்ணமு மில்லாதது போலவும், மலம் வந்து கூடினால் மலமாயும், சிவம் வந்து கூடினால் சிவமாயு மிருக்கப்படாநின்ற நீ, அனாதியே யுயிர்க்குயிராய்த் திருவருளிருந்து அறிவிக்க அந்த அருளே ஆதாரமாக நின்றறிகிற அறிவு நீ.

ஆன்மா அங்கத்திலிருக்கும் முறைமை எப்படியென்னில்:—
சுத்தாடியானவன் தான் பதுமைக்கு வேறாக நின்று ஆட்டினைப்

பதுபோல, ஆன்மா பஞ்சகோசத்திலே நிலைபெற்ற பஞ்சபூத தேகத்துக்கு வேறாக நின்று, பஞ்சபூத காயத்தை சீவன் ஆட்டி வைக்கும்.

ஆன்மாவின் தசகாரியம் ஏதெனின்:—

1, உருவம்:—இச்சாஞானக் கிரியையாதல்.

2. சொரூபம்:—உருவம் மேவிட நான் என்பது மிகுத்ததுமாம்.

3. சுபாவம்:—கருவிகளுடனே பற்றுதலாம்.

4. விசேஷம்:—கருவிகளை மேவிட்டு அறிவதாம்.

5. வியாத்தி:—பரிசன்ன முள்ளளவுமாம்.

6. வியாபகம்:—அட்டமாசித்தியளவு நிறைவதாம்

7. குணம்:—ஒருவரறிவிக்க வறிவதுவாம்.

8. நிறம்:—சிற்றுணர்வா யிருப்பதுவாம்.

9. தெரிசனம்:—எல்லாஞ் சிவன்செயலென்றிருக்கையாம்.

10. சத்தி:—தற்போதமற்றுச் சிவபோத மேவிட்டிருக்கையாம்.

பஞ்சபூதமும் ஒன்றிலே யொன்று கூடி பஞ்ச பூதமாம். அதெப்படியென்னில்:—சத்தத்திலே பாதியிருப்ப, மற்றப்பாதியும் நாலாகப் பிரிந்து, ஒரு கூறு பரிசத்திலும், ஒரு கூறு ரூபத்திலும், ஒருகூறு ரசத்திலும், ஒருகூறு கெந்தத்திலும் கலக்கும் இவ்வாறே மற்ற பூதங்களிலும் பப்பாதி பிரிந்து நன்னாலாகி மற்ற பூதங்களிற் கலக்குமென் றறிய.

காயம் இரண்டாவன:—(ஐம்பூதங்களுஞ் சேர்ந்தது) பூதகாயம், (ஐம்புலன்களுந் தவிர்ந்த மற்றய அந்தக்கரணங்கள் மூன்றுஞ் சேர்ந்தது ஆகூ 8-ம்) புரியட்ட காயம்.

எண்பது மாமுக மானது வேயியல் வேத(ன்)சிருட்டி
எண்பது மாவகை மாலவ னீசனிம் மூவருக்கும்
எண்பது காணி முகமிவர் தந்தொழி லேகமதாம்
எண்பது வீச முகஞ்சிவ னைந்து மியற்றுமென்றே.

(எ-து) எண்பது மா முகம் ஆனதுவே இயல்வேதன் சிருட்டி-(அயன் பஞ்ச) நால்வகைத் தோற்றமானதுவே பிரம்மதேவ

னுடைய படைப்பு, எண்பதுமா வகை மால் அவன் ஈசன் இம்மூவருக்கும், விஷ்ணு ருத்ர மகேஸ்வரருக்கும், எண்பது காணிமுகம்-(அய × காணி = க) ஒவ்வொரு முகங்களேயாம், ஏகம தாம் தொழில-கிருத்தியமும் ஒவ்வொன்றே, எண்பது வீசம் முகம் சிவன்-(அய × மாகாணி = ந) சதாசிவனுக்கு ஐம்முகங்களாம், ஐந்தும் இயற்றும் பன்று-பஞ்ச கிருத்தியங்களுஞ் செய்வானென்று. (எ-று)

பிரம்மனைப்போல் சிருட்டிப்பானாலும், திதிப்பமொன்றே தொழிலாகலான் விண்டுவுக்கும முகம் ஒன்றே.

பிரம்மனைப்போலும விண்டைப்போலும சிருட்டி, திதி நடத்துவானாலும் சங்கரிப்பமொன்றே தொழிலாகலான் உருத்திரனுக்கும முகம் ஒன்றே.

பிரமம விஷ்ணு ருத்ரனைப்போல சிருட்டி, திதி, சம்மாரம் இம்மூன்றும் நடத்துவானேனும திரோபவமொன்றே தொழிலாகலான் மகேசனுக்கும் ஒன்றே முகம.

சதாசிவனுக்கு ஐந்து திருமுகமுண்டாம. அதெதாலென்னில்:—தாமனுக்கிரகஞ் செய்யுந் தொழிலொன்று. இதுவன்றி மற்ற நாலும் தம்முகாந்திரமாகவே நடக்கிறதாகையினால், இப்பால் தான் பிறந்து அனைத்தையும பிறப்பிப்பவனாகலான் பிரம்மனென்றும், தேகத்தை விட்டுவிட்டு எடுப்பவனாகலான் விண்டுவென்றும், உலகங்களிலுள்ள உருவங்களை யத்தத்திற்பட அழித்துத் தான உருத்திரப்பட்டிருப்பவனாகையினால் உருத்திரனென்றும், மாயைக் குட்படாமல் மாயையை ஐக்கியப்படுத்தி யிருப்பவனாகலான் மயேஸ்வரனென்றும், சதாகாலமும சிவனை மறவாமல் சிவபாவனை யுண்டாயிருப்பவனாகலான் சதா சிவனென்றும் கூறப்படும்.

இனி சிருஷ்டியாவது:—ஆன்மாவையும் அவரவர் செய்த கன்மத்தையும அறிந்து கணக்கு கூட்டுவ னாகையினாலே பரம பண்டாரத்துக்கு பிரம்மா கணக்கனும்.

திதியாவது:—கூடின வுடம்பிலே ஆன்மாவுக்கு கன்மத்தைப் புசிப்பதாகையினாலே உருத்திரன் அதிகாரியாம்.

சங்காரமாவது:—அவரவர் கன்மத்தையும் ஆன்மாவையும் பிரித்துவிடுவாருகையினாலே உருத்திரன் அதிகாரியாம்.

திரோபவமாவது:—சிருட்டி முதல் முக்காரியத்தையும் ஆன்மாவுக்குத் தொத்தாமல் மறைப்பானாகலான் மகேசன் முடிப்பிரியாம்,

அனுக்கிரகமாவது—ஆன்மாவெனனும் பொருளை பரமபண்டாரத்திலே செலுத்துவனாகலான் சதாசிவன் மணியக்காரனாம்.
(80)

எண்பத் தொருபத மிருநூற் றிருபத்து நாற்புவனம்
எண்பத்து வொன்றி லிருபதும் பத்துமில் லாவண்ணமும்
எண்பத்து வொன்றி லெழுபதின் மந்திரமா றுறுதத்துவம்
எண்பத்து வொன்றி லெழுபத்தா றில்கலை யிறையுருவே.

(எ-து.) எண்பத்து ஒருபதம்-(வியோமம்-வியாபினி யென்கிற பதமுதல் ஓம என்கிற பதம் ஈறாகப) பதம எண்பத்தொன்றும், இருநூற்று இருபத்து நால் புவனம-(காலாக்கினி யென்கிற புவன முதலாக அனாதி ஸ்ரீதாய மென்கிற புவனமீறாக) புவனம்-இருநூற்று இருபத்து நாலும், எண்பத்து ஒனறினில இருபதும் பத்தும் இல்லாவண்ணமும்-(௮௰௧-ல் ௨௰-ம ௰-ம் இல்லாதது ௫௰௧) அகார மென்ற எழுத்து முதல் க்ஷ காரமென்ற எழுத்தீறாக ஐம்பத்தோரெழுத்தும், எண்பத்து ஒன்றினில் எழுபதில் மந்திரம்-(௮௰௧-ல் ௭௰ இல்லாதது ௰௧) (ஈசானமாதியா யிருதயமீறாக) மந்திரம் பதினொன்றும, ஆறு ஆறு தத்துவம்-(௬ × ௬ = ௩௰௬)முப்பானாறு ஆன்ம தத்துவங்களும் எண்பத்து ஒன்றினில் எழுபத்து ஆறு இல் கலை - (௮௰௧-ல் ௭௰௬ இல்லாதது ௫) ஐந்து கலைகளும், இறை உரு - பதியின் தூலதேகமாம். (எ-று.) (81)

ஆன்மதத்துவம்-௨௰௪, வித்தியாதத்துவம் ௭, சிவதத்துவம் ௫. ஆக ௩௰௬.

நிவர்த்தி, பிரதிஷ்டை, வித்தை, சாந்தி, சாந்தியாதீதம் ஆக கலை ௫.

'அத்துவா அறியாதவன் ஆசாரியன் அல்ல' 'தத்துவம் அறியாதவன் தவசியல்ல' என்ற பழமொழியை யிப்பாட்டில் விளக்கியபடியாம்.

மந்திரம் ௰௧-ம அறிவாகவும், பதம் அ௰௧-ம் அட்சரம் ௫௰௧-ம் - அஸ்தபாதமும் வயிறும் அவையவமு மாகவும், புவனம் உ௱உ௰௪-ம் பஞ்சபூதங்களாகவும், தத்துவம் ௩௰௬-ம் இந்திரியங்களாகவும், கலைகள் ௫-ம் அந்தக்கரணங்களாகவும், பிரபஞ்சமெல்லாந் திருமேனியாகவும் கர்த்தாவுக்கு இருக்குமென வறிய.

பதியின் தசகாரியமாவன:—

1. உருவம்:—ஆனந்தம்.

2. சொரூபம்:—இச்சா ஞானக் கிரியா.

3. சுபாவம்:—அசைவற்று நிற்கை.

4. விசேஷம்:—ஆதியந்த மின்மை.

5. வியாத்தி.—எங்கும் அகண்டபரி பூரணமா நிறைந்திருக்கை.

6. வியாபகம்:—கல்லினும், சுமரினும், கதிர் முனையினும், வான்முனையினும் தோன்றியிருக்கை.

7. குணம்:—காருண்யம்.

8. வண்ணம்:—யாதொருவ னிப்படி யிருக்குமென்று பாவித்தானோ அப்படியே யிருக்கை.

9. தெரிசனம்:—சுகாதி தத்துவப் பிரம்மமா யிருக்கை.

10. சுத்தி:—தற்போதம அற்று தான் பதையாதே யிருப்பதாம்.

இனி பரையின் தசகாரியம் யாவை யெனில்:—

1. உருவம்:—சுத்த மாயை, அசுத்த மாயை யிரண்டையும் நிறைத்து பரந்த தளவு முண்டாயிருக்கை.

2. சொரூபம்:—எக்காலமும் பிரகாசமா யிருப்பது.

3. சுபாவம்:—பரத்துக்கு இச்சா ஞானக் கிரியையாய்ப் பொருந்தைத் தருவது.

4. விசேஷம்:—சீவன் எந்த கருமத்தைச் சிந்திந்தாலும், சிந்தித்ததுவே தானாக யிருப்பதாம்.

5. வியாத்தி:—பரமெவ்வளவுண்டோ அவ்வளவும் வந்து நிறைந்திருப்பதாம்.

6. வியாபகம்:—நால்வகைச் சத்தியும தானாகவே தொழில்களை வேற்றுமைப்படவே மிகவுஞ் செய்து திரிவதாம்.

7. குணம்:—அஞ்ஞானங் கூடாதிருப்பதுவாம்.

8. நிறம் —தன்னிட்டப்படி யாதலாம

9. தெரிசனம்:—எந்த நாளும் ஆதுமாவை யழுத்தி தன் வியாப்தி மேலிட்டிருப்பதுவாம்.

10. சுத்தி:—பரையை நீங்கி ஆன்மா சிவத்தோடு கூடுவதாம்

இச்சா ஞானத்தினுடைய தசகாரியம் ஏதென்னில்:—

1. உருவம்:—சர்வான்மாக்களையுந் தன்னுடைய அசைவாக நடத்துதல்.

2. சொரூபம்:—சிவன் கொண்ட வடிவமெல்லாம் அழுந்தி நிற்பது.

3. சுபாவம்:—ஆன்மாக்கள் அளவிலேயிருளையோடிருத்தல்.

4. விசேஷம்:—உருவுக் குருவாயும், அருவுக் கருவாயும் அருவுருவுக் கருவுருவாயும் ஆதல்.

5. வியாத்தி:—திரோதை யாவாதலாம்.

6. வியாபகம்—குரு வடிவம் கொள்வதாம்.

7. குணம்:—சிவனை யறிகிற யிச்சையை யான்மாக்களுக்கு உண்டாக்குவதாம்.

8. நிறம்:—பிரசாத நிறமாம்.

9. தெரிசனம்:—எண்வகை நிலைமையு முடையதென வறிவது.

10. சுத்தி:—பரையினிடத்தில் ஒடுங்குவதாம.

ஞானசத்திக்கு தசகாரிய மேதென்னில்:—

1. உருவம்;—மூலகை யான்மாக்கள் செய்வதை யெல்லாம் அறிவது.

2. சொரூபம்:—சர்வான்மாக்களும் அறிவுக் கறிவாய் அகலாமல் நிற்பதுவாம்.

3. சுபாவமாவது:—விஞ்ஞானகலர்க்கெல்லாம் அற்ப அறிவாகியும் பிரளயாகலர்க் கெல்லாம் சமவறிவாகியும், சகலர்க்கெல்லாம் பிரபல அறிவாகியும், இருப்பதாம்.

4. விசேஷம்:—எக்காலமும் சர்வான்மாக்களிலும் தானேகமாய் நின்று அஞ்ஞானமும், மாயையும் அணுகாமல் தடுத்து இருப்பதுவாம்.

5. வியாத்தி:—இச்சா சத்தியனாவாதலாம்.

6. வியாபகம்:—சிவனுடைய வடிவுகளுக் கானபடியே குணமும் காரணமுமாகக் கூடியிருப்பதுவாம்.

7. குணம்:—எக்காலத்தும் பிரியாம லிருந்த தன்னை ஆன்மாக்களுக்குத் தோற்றும லிருப்பதுவாம்.

8. நிறம்:—பரமசிவம் எந்தவடிவ மெடுத்தாலும் அந்த வடிவமாகி நிற்றலாம்.

9. தெரிசனம்:—தற்செயலற நிற்பதுவாம்.

10. சுத்தி:—பரையுடனே காப்பதுவாம்.

இனி கிரியாசத்தியின் தசகாரியமாவன:—

1. உருவம்:—சகத்தை நடத்தப்படா நின்ற கர்த்தனுக்கு வடிவுங் கரணமுமா யிருப்பதுவாம்.

2. சொரூபம்:—சர்வான்மாக்களுக்கும் தொழிலை யெழுப்புவதுவாம்.

3. சுபாவம்:—பஞ்சகிருத்தியங்களை நடத்துவதாம்.

4. விசேஷம்:—கர்த்தனுக்காகிய தவம் பண்ணுகிற நேரைக் காட்டுவதாம்.

5. வியாத்தி:—ஆன்மாக்கள் மேனியுள்ள மட்டுமாம்.

6. வியாபகம்:—பரமேஸ்வரன் செய்யும் பஞ்சகிருத்தியத்துக்கு ஆனவுருவா யிருப்பதுவாம்.

7. குணம்:—ஆன்மாக்கள் குணத்ரயங்களை நடத்துவதாம்.

8. நிறம்:—உருவங்கள் தோறும் நிறம் பேதமாய் இருப்பதுவாம்.

9. தெரிசனம் —இம் முறைமைகளை யெல்லா முடையது வாம்.

10. சுத்தி —மறைப்புடனே கலப்பதுவாம்.

எண்பத் திரண்டினி லெண்பதிற் சத்தசத் தென்றுமொன்று
எண்பத் திரண்டினி லெண்பதில் லாவொளி யிருளுமொன்று
எண்பத் திரண்டினி லெண்பத்தோன் றிற்சத சத்திசையும்
எண்பத் திரண்டினி லெண்பதி லொளியிருட் கிசையுங்கணே.

(ப-ரை.) எண்பத்து இரண்டினில் எண்பது இல் சத்து அசத்து என்றும் ஒன்று (அப்படி இல்லாதது) சத்தசத்தென் றிரண்டாகிய பதியும் பாசமும் எக்காலத்தும் ஒன்று கூடாது. [அதைத் தீபோலவென்றல்] எண்பத்து இரண்டில் எண்பது இல்லா ஒளி இருளும் ஒன்று - இரண்டாயுள்ள ஒளியும் இருளும் ஒன்றுகமாட்டாது. (ஆனால்) எண்பத்து இரண்டினில் எண்பத்து ஒன்றில் சதசத்து இசையும் - அப்படி அயிக்கியமாகப் போக, ஒன்றாய்ச் சதாத்காரியிருந்து பதியொன்றே பதி பாசமிரண்டிலுமே கூடியிருக்கும் (அதெங்ஙனமெனில்) எண்பத்து இரண்டினில் எண்பது இல் ஒளி இருட்கு கண் இசையும் - ஒளியிருளிரண்டிலே கண்கள் கூடுமென்று அறியவேண்டும் (ப-ரை.)

“நீடுமொளியும் மறையிருளும் ஒரிடத்து நடவாது” என்று சித்தாந்த சாத்திரத்தாற் காண்க. (82)

எண்பத்து மூன்றினி லெண்பதி லாசையற் றேன்னபயன்
எண்பத்து மூன்றினி லெண்பதில் லாமல மேயிருந்தால்
எண்பத்து மூன்றினி லெண்பதில் லாமல மேதுதற்கே
எண்பத்து மூன்றினி லெண்பதிற் பத்தி யிருத்துநெஞ்சே.

(ப-ரை) நெஞ்சே-மனமே! எண்பத்து மூன்றினில் எண்பதில் ஆசை அற்ற பயனென்ன (அப்படி ஆசை இல்லாதது எது) மூவாசை யற்றல்தானென்னை? எண்பத்து மூன்றினில் எண்பது இல்லா மலமே இருந்தால் மும்மலமிருப்பு, எண்பத்து மூன்றினில் எண்பதிலா மலம் அகற்றுதற்கு ஆம் மும்மலமும் நீங்குதற்கு, எண்பத்து மூன்றினில் எண்பது இல் பத்தி இருத்து-(பூ)ப் பத்தியுறப் பண்ணு (ப-ரை)

மூவாசையாவன:—மண், பெண், பொன், இவை புறமலப் பற்று.

மும்மலமாவன.—ஆணவம், மாயை, காமியம் இவை யக மலப்பற்று.

சதா அறியாமையை யுண்டாக்குவது: ஆணவம்.
சதா பிறப்பிறப்பி லழுத்துவது: காமியம்.
சதா பொய்யை மெய்யென்பது: மாயை.

முப்பத்தியாவன:—குருபத்தி, லிங்கபத்தி, சங்கம பத்தி இம்முப்பத்தியும் ஒருவன் மாட்டிருந்தால் மும்மலமும் நீங்கிப் போய்விடுமென்றபடி.

மும்மலமற்றுப் பரமசாம்பிராஜ்ய பதத்தைப் பெறுவதற்குப் பரம்பொருள் ஒருவன் மீதே பத்தி நாட்டினாற் போதாதோ? அநேகனமாகிய குரு லிங்க சங்கம பத்தியும் வேண்டுமோ வென்னில்:—

அகண்ட பரிபூரணமாய் வாக்குக்கும் மனத்துக்கும் எட்டாததாகையினாலே அந்த பரத்தினுடைய மனம் வாக்கு சகாயந்தானே குருலிங்க சங்கமமாய் நின்று பத்திகண்டு முத்திகொடுக்கும்.

அந்த குருலிங்க சங்கமம் மூன்றிலே குருசங்கமம் மானிடசாதியானாலும் அவர்களையே தெய்வமென்று சொல்லும். அதெப்படி யென்னில் பலபலவாகிய பாஷைகளிலே பஞ்சாட்சரம் கூடியிருந்தாலும், அது பொருளென்று கொண்ட பேர்க்குப் பொருளானது போலவாம்.

இனி, சிவலிங்கம் சிலைதானே யானாலும் அந்த சிலைதானே தெய்வமாம். அதெப்போல வென்னில்: காட்டமாகிற விரகைக் கடையக்கடைய அக்கினி பிறக்கும் முறைமையைப்போல மந்திராதீனமாயிருப்பது தெய்வமாகையினாலே சிவமந்திரத்தைச் சிலையிலே ஆவாகனம் பண்ணுகையினாலேதானே சிவலிங்கமாமென்றறிய.

முற்கூறிய பரமசிவன் அகண்டபரிபூரணமா யிருந்தாலும், குருலிங்க சங்கமத்தினிடத்திலே அதி வியாபகமா யிருப்பன், அதெப்படி யென்னில்.—சூரியக்கிரண மெங்கும் வியாபகமா யிருந்தாலும்

சூரிய காந்தத்திலே கிரணம் அதிகம்போலவும், பசுவுக்குக் கொம்புமுதற் குளம்பிறுதப் பால் எங்கும் நிறைந்திருந்தாலும் மடியிலே பொழிவதுபோலவுமாம்.

இப்பால் குருலிங்க சங்கம மூன்றும் ஒன்றே பொருளாம். அதேன்போலவென்னில்:—பசுவுக்கு உடம்பும் முலையும் முகமும் ஏகமானாற்போலவே, குருவும் லிங்கமும சங்கமும் ஏகமாம். குருவே யுடம்பும், லிங்கமே முலையும், சங்கமமே முகமுமாம் என்றறிய.

பிரமாணம்:—

சூரிய காந்தமும் சூரியனும் போலவே
சூரிய காந்தமும் சூர்பனுமை [illegible]
சூரியனை யன்னதி நடமையை யு போலவே
ஆரியன் சோற்றமுமன் னைற்ற மையகமே

என்னு மிதிற் கண்டுகொள்க.

இனி குருலிங்க சங்கமம் மூன்றும் ஒன்றென்பதற்குப் பிரமாணம்:—

திருவிருத்தம்.

கோதனத்தின் முலைலிங்கம குருவா மேனி
கூறரிய சங்கமமும் முலையுங் கீரம்
போதமுலை யொழுகிடுமென் றதற்கன் பாகப்
புல்லைனிக்கி லருந்தியிடற் றுடலங் கொள்வார்
நீதியினு லருந்திமுகத் தளித்த வைங்கும்
நிறைவாகு முத்திசிவ லிங்கத் தேனும
ஏதமிலச் சங்கமத்தை வழிப்படுவோர்க் கென்றும
எண்ணரிய சிவானுபவ மெய்தொணுதே.

என்னு மிதிற் கண்டுகொள்க.

அன்றியும் முற்கூறிய பதி பசு பாசத்தை யறிவித்த சிவ ஞானத்தை யறிந்து தெரிசித்த ஞானவான்களே சற்சமயாசாரிய ரென்று பேராம்.

அவதாரபோதஞ் சிவியாமல் சிவபோதத்திலே யழுந்தி பரமானந்தமே வடிவாய் நிற்பது சிவப்பேறு. இந்த உண்மை நிட்

டைச் சைவராதாகில் இதுபோல உபாய நிட்டை யுண்டாம். அதெப்படியென்னில் யாவராலும் பாவிக்கப்படாநின்ற காசு தன் தானே தனைக் கண்டு பார்த்து வழிபாடேயன்றி நமது டைய பொருட்டாய்க் கொண்டுவந்திருந்த குருலிங்க சங்கம மென்று மெய்யன்புடனே வழிபாட்டு வணங்கினு முண்மை நடை யுண்டாம். (83)

எண்பத்து நாலினி லெண்பதில் லாப்பத மென்னசொல்லு
எண்பத்து நாலினி லெண்பதில் லாப்பத மென்னசொல்லே
எண்பத்து நாலினி லெண்பதில் மாயை யொதையொடுக்கும்
எண்பத்து நாலினி லெண்பதில் லாதுரை ஞானமென்னே

(வ-து.) எண்பத்து நாலினி லெண்பத்து இல்லா பதம் என்ன சொல்லு (அப்படிச் சொல்லுவது இல்லாததுக்கு) நால்விதமான மார்க்கம் என்னை? எண்பத்து நாலினில் எண்பத்து இல்லா பதம் என்ன சொல்லே—நால்விதப் பதவி என்னை? எண்பத்து நாலினில் எண்பத்து இல்லா மாயை யோதை யொடுக்கும். நால்வித மாயை யெவற்றை யொடுக்கும். எண்பத்து நாலினில் எண்பத்து இல்லாதது உரை ஞானமென்னே நால்வித ஞானம் என்னை? (என்று)

மார்க்கம் நாலாவன — தாசமார்க்கம், புத்திரமார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம்.

தாசமார்க்கமாவது — பரமசிவனுக்கு அடிமையாகிய தொழில் செய்வது எப்படியென்னில் — சிவலிங்கப் பெருமான் எழுந்தருளியிருக்கின்ற திருக்கோவிலில் திருவலகிடுதல், திருமெழுகு சாத்துதல், திருப்பள்ளித்தாமஞ்செய்தல், திருமாலை தொடுத்தல், திருநந்தவனம் உண்டாக்குதல், சிவனைத் துதித்தல், சிவ பணிவிடை செய்தல், சிவனடியார்களைக் கண்டால், இவைமுதல் இவைபோல்வன பிறவுமாம் இதுவே சரியா பாதம்.

புத்திரமார்க்கமாவது —வடிகட்டின நல்ல திருமஞ்சனமும், சந்தனங்கள், நல்ல புஷ்பங்கள், தீபங்கள், பணிமாறல், மட்டுறும் எண்ணும்பல ஓதுகிறதது அருள்வழியாக மினரம் முறைகூறிய பஞ்சசுத்தியும் பண்ணி, அக்கினி காரியமுஞ் செய்வது புத்திரமார்க்கமாம். இது கிரியா பாதமாம்.

சகமார்க்கமாவது:—யோனிக்கு மேலே நாலுவிரற் பிரமாணம் இருக்கிற முக்கோணமாகி நாலிதழுடைய பற்பமாயிருக்கும்.

நாலெழுத்திருக்கும்படி யிருக்கப்பட்டதின்ற வக்கினிமண்டலத்தைப் பிறத்தமேல் இருதய கமலத்தில் ஏகமாய் அறுகோணமா யெட்டிதழுடையதா யிருக்கும். இது தாமரைப்பூபோன்று கீழ் நோக்கி பொற்பணிக்குபோல் அஷ்ட சத்திகள் சூழ மனோன்மணி யெழுந்தருளியிருந்து அந்த வெட்டிதழிலும் எட்டிதழிருக்கும். இப்படி யிருக்கப்பட்டின்ற அதித்தமண்டலமும் இதற்கு மேலாகி சிரசிலே கூடியிருப்பதால் அதை வாயிரங் கோடி சந்திராதித்தர்கள் உதயத்தைப்போல், அதி லுக்ர மக்னி மண்டலத்திலே சோதியைப் பாராத்தி யெழுந்தருளியிருக்கத் தக்கதாக இப்படி நிற்கிற சந்திர மண்டலமும் இப்படியாகிய மண்டலங்கள் மூன்றையும் அறிந்து, இதுவென்றியும் இராசத தாமத சாத்வீக மென்னும் மூன்று குணத்தையும் அடக்கி பஞ்சயிந்திரியங்களை விஷய வியாபாரங்களிலே போகவொட்டாமல் அடக்கி, உச்சுவாசம் நிசுவாசம் இரண்டையும் ஒடுக்கி முற்கூறிய ஆதாரத்தையறிந்து, அந்த ஆதாரங்களிலேயிருக்கிற அதிதேவதைகளையு மறிந்து, அந்த அதிதேவதைகளையும் அர்ச்சனைபண்ணி, அதின்பிறகு சந்திரமண்டலம் போய், அந்த சந்திரமண்டலத்திலே யுண்டான அமிர்தத்தைப் பலமுறை யுண்டு புசித்தும் நிற்பக் கொண்டிருந்து அங்கே யிருக்கிற பரமபொருளையே சாக்கிற சித்தனைக் கண்டிருப்பதாம்.

இப்படி யந்தப் பரம்பொருளைக் கண்டிருக்கக் கண்டிருக்க, இவனுடைய கன்மம் இரண்டுந் நாசமாம். இப்படி யிருப்பது யோகமாம்.

இது எட்டுவிதப் படும். அவையாவன.—இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி. இவற்றின் விரிவை யகராதியிற் கண்டுகொள்க.

சன்மார்க்கமாவது—நாலு வேதமும் இருபத்தெட்டு திவ்யாகமங்களும், பதினெண் புராணங்களும் அறுபத்துநான்கு கலைக்கியானங்களும், பலபலவாகிய புடை நூல்களையு மறிந்து பதிபசு பாசத்தின் நிலைமையுமறிந்து ஞாதுரு ஞானஞேயமாகிய காண்

பாலுங் காட்சியுமாய்த் தற்போதமுற்று சங்கற்ப விகற்பமும் நீங்கி நிற்பதுவேயாம். இதுவே ஞானபாதம்.

அவ்வப் பக்குவிகட்குகந்த பதவிகளாவன:—சரிதை செய்யுந் தாதமார்க்கருக்குச் சாலோகமாம. சாலோகமாவது சிவலோகத்திலே யிருப்பதுவாம. கிரியை செய்யும் புத்திர மார்க்கருக்குச் சாமீபமாம். சாமீபமாவது சிவ சந்நிதானத்திலே யிருப்பதுவாம். யோகஞ் செய்யுஞ் சகமார்க்கருக்குச் சாரூபமாம். சாரூபமாவது குளவி புழுவை யெடுத்துப் பதேசித்துத் தன்னுடைய வுருவஞ் செய்துக்கொள்ளு முறைமையைப்போலவே சிவனுந் தம்முடைய திருமேனியைப்போலவே சதுர்ப்புஜமும் காளகண்டமுந் திரிநேத்திரமுமா யிருக்க வைப்பதுவாம.

ஞானிகளாகிய சன்மார்க்கருக்குச் சாயுச்சியமுண்டாம். சாயுச்சியமாவது பதியுடனே வேறின்றி யொன்றாகக் கூடியிருப்பதுவாமென வறிய. தநு, கரண, புவன, போகமென்று நாலு வகையாயிருக்கிற அசுத்த மாயைக்கு மா-என்றும், யை-என்றும் இரண்டெழுத்தும் பேரில விளங்கும. எப்படிக்கெனில்:—

மா—ஆன்மாக்களை கன்மம் புசிப்பிக்கிற காலத்திலே நிலை நிறுத்தும்.

யை—ஒடுங்குகிற காலத்தில் தன்னுள்ளே யொடுக்கிக்கொள்ளும்.

எப்படி யொடுங்குமென்னில்:—ஆன்மா ஆணவத்திலொடுங்கும. இப்பால் தத்துவ மலமாக, கெந்தத்திலே பிருதுவியொடுங்கும். இரசத்திலே அப்பு ஒடுங்கும். ரூபத்திலே தேயு வொடுங்கும். பரிசத்திலே வாயுவொடுங்கும். சத்தத்திலே ஆகாயம் ஒடுங்கும. இச்சத்தாதிகளைந்தும் பூதாதி யாங்காரத்திலே யொடுங்கும். இந்த ஆங்காரமூன்றும் புத்தியிலே யொடுங்கும். புத்தியும் சித்தமும முக்குணமும் அவ்யவத்திலே யொடுங்கும். இப்படியாக போககாண்ட மொடுங்கும்.

இனி மூலப்பிரகிருதியும் ருத்திர தேவரும் வித்தையிலே யொடுங்கும. வித்தை கலையிலே யொடுங்கும் கலை நியதிகாலத்துடனே மாயையிலொடுங்கும். இப்படியாக போக்கிய காண்ட மொடுங்கும்.

சகல சாத்திரங்களும், சப்தகோடி மகா மந்திரங்களும், ஐம்பத்தோரக்ஷரங்களும், சூக்குமை முதலான நாலு வாக்குகளும், சுத்தவித்தை, சாதாக்கியம், ஈசுரம் இவைகளும் விந்துவிலே யொடுங்கும். அவ்விந்து நாதத்திலே யொடுங்கும், அந்நாதம் பராசத்தியருளினாலே மகா மாயையிலே யொடுங்கும். அம்மகாமாயை கிரியாசத்தியிலே யொடுங்கும் அக்கிரியாசத்தி, ஞானசத்தியிலே யொடுங்கும். அஞ்ஞானசத்தி இச்சாசத்தியிலே யொடுங்கும். அந்த இச்சாசத்தி ஆதிசத்தியிலே யொடுங்கும். அந்த ஆதிசத்தி பராசத்தியிலே யொடுங்கும். அவ்வாறானதே பரமானந்தமென்றறிய.

ஞானம் சதுர்விதமாம். அவையாவன.—கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை கூடல்.

கேட்டலாவது —ஞானாசாரியன் அருளிச்செய்த பதி, பசு, பாச மென்னுந் திரிவித பதார்த்தத்தின் உண்மையை யறிவது.

சிந்தித்தலாவது — அப்படிக் கேட்டதை தனக்கேற்ப வொப்புசெகொள்ளுதல்.

தெளிதலாவது —தானே கேட்டு சிந்தித்ததை யறிந்து ஊர்ச்சிதப்படுத்தலாம்.

நிட்டை கூடலாவது — அவ்வாறு தெளிந்ததை தானே சிவனைத் தன்னை யறிவித்த திருவருளையும் தானறியாம லிருப்பதுவாம்.

கேட்டலால் சாலோகமும், சிந்தித்தலால் சாமீபமும், தெளிதலால், சாரூபமும, நிட்டை கூடலால் சாயுச்கியமும் உண்டாம்.

(84)

எண்பத்தி யஞ்சினி லெண்பதி லிந்திரிய மோரேரிகரை
எண்பத்தி யஞ்சினி லெண்பத்தி நான்கற் றணுவேறிடா
எண்பத்தி யஞ்சினி லெண்பதி லேரி கரையுடைந்தால்
எண்பத்தி யஞ்சினி லெழுபத்தோன் பதின்றரு ளிறைகடற்கே.

(எ-து) எண்பத்து அஞ்சினில் எண்பது இல் இந்திரியம்-(அயிரு-ல் அயி இல்லாத்து ரு) பஞ்சேந்திரியங்களும், ஓர் ஏரி கரை-ஒரு ஏரிக்கரையாம். எண்பத்து அஞ்சினில் எண்பத்து நான்கு அற்று அணுவேறிடா-(அயிரு-ல் அயி நீங்க-க) ஒன்றாகிய

ஆன்மா அவவேரிக்கரையை யேறமாட்டாது. எண்பத்து அஞ்சினில் எண்பது இல் ஏரி கரை உடைந்தால்-பஞ்சேந்திரியமென்னும் ஏரிக்கரை உடைந்துவிட்டால், எண்பத்து அஞ்சினில் எழுபத்தொன்பது இன்றா அநாதி-(அ௰௫-ல் எ௰௯ போக ௬) திருவருளென்னும் ஆற்று நீருடனே கூடி, இறை கடற்கே-சிவசமுத்திரத்திற்குள்ளே போய்ப் புகுமென வறியும் (எ-று.)

ஏரி கரையான து தண்ணீரை யெங்கும் போகவொட்டாமல் சிறைபடக் கட்டிப்பிடித்திருப்பதுபோல, ஆன்மாவை யிந்திரியங்கட்டிப்பிடித்துக்கொண்டிருக்கும்.

பக்குவான்மாக்கள் சிவஞானமுண்டாய்ப் பரமேஸ்வரனுடைய பாதாரவிந்தத்திலே நியானமுற்றிருந்து பரமானந்தநிலையிலே நிற்க, அந்த ஆனந்தக் கண்ணீரென்னும் மழை பொழிந்து, அதுவே மிகப் பெருமையாய்ப் பஞ்சேந்திரியமென்னுங் கரையுடைந்தான்மாவென்னும் நீருள்ளதெல்லாங் கரைபுரண்டு அந்நீர் திருவருளென்னும் ஆற்று நீருடனே கூடிச் சிவக்கடலாம். (85)

எண்பத்தி யாறினி லெண்பத்தஞ் சின்மலச் சிறைச்சாலையும்
எண்பத்தி யாறிலெண் பத்திரண் டின்மாயை யெனும்விலங்கும்
எண்பத்தி யாறினி லெண்பத்து நான்கில் வினையின்பிடரும்
எண்பத்தி யாறிலெண் பத்தைந்துபோகுநா ளென்றைக் குண்டோ.

(எ-து) எண்பத்து ஆறினில் எண்பத்து அஞ்சு இல் மலம் சிறைச்சாலையும்-(அ௰௬-ல் அ௰௫ இல்லாதது ௧) ஒன்றாகிய ஆணவ மலமென்னும் காராக்கிரகசாலையும், (விட்டு,) எண்பத்து ஆறில் எண்பத்து இரண்டு இல் மாயை யெனும் விலங்கும்-(அ௰௬-ல் அ௰௨ இல்லாதது ௪) தனு கரண புவன போகமாகிய நாலாவித மாயைகள் என்னும் (கால்) விலங்கும், கழற்றிக்கொண்டு, எண்பத்து ஆறினில் எண்பத்து நான்கு இல் வினையின் பிடரும்-(அ௰௬-ல் அ௰௪ போக நீக்கு ௨) சுகதுக்கமென்றிருவகையாய்ப் புசிக்கப்படாநின்ற பிறவிநோய் மருந்தையும் துறந்துவிட்டு, எண்பத்து ஆறினில் எண்பத்து ஐந்து போகும் நாள் என்றைக்கு உண்டோ? (அ௰௬-ல் அ௰௫ போக ௧) அருளென்னும் ஒரு பெருவெளி வழிப்பட்டு வீட்டுக்குப் போகிற நாளென்றைக்கு உண்டாமோ? (எ-று) (86)

எண்பத்தி யேழினி லெண்டில் லாமுன் னியம்புதத்துவம்
எண்பத்தி யேழினி லெண்ணுறு முன்றிங்லை மைகயிகழ
எண்பத்தி யேழிலெண் பத்தஞ்சி லாவினை மாயைவிடும்
எண்பத்தி யேழிலெண் பத்தாறி லுன்னப்போ மிருண்மலமே.

*(இ-ள்) எண்பத்தேழதில் எண்பத்தொன்றிலாய் (அயன்-ல் அய போக ன) எனமையமடா மனமே! முன் இயம்பு தத்துவம - முன்னே (யானகூறுமான) சொன்ன தத்துவம், எண்பத்தேழிலெண் ஆயிரமொன்று ... ( ... ( ... x ... = ... ) ... போக நீக்கும்) முப்பத்தாறு தத்துவங்களாய், இதை ஒக்கு இவர்களுமியல் வினைக் கிருந்து ... ... ... , எண்பத்தேழில் எண்பத்தைந்து ... இவை வினை-(அ... ல் ... போக ...) ... மாயை. (சாக்கிரமா கிய) மாயையும், விடும்-விட்டுவிடும், எண்பத்தேழில் எண்பத்து ஆறில் உன்னை இருள் மலமே-( ... ... ... நீங்க க) ஒன்றாய்ப்பட்டிருக்கிற முன்னை (காரணமாகிய) ஆணவமலம் விட்டுப் போய்விடும். (எ-று.)* (87)

எண்பத்தி யெட்டினி லெண்பதிவ் லாப்பொரு ளானென்னவன்
எண்பத்தி யெட்டிலெண் பத்தோ நான்றி லோதின் றியல்பாமையதான்
எண்பத்தி யெட்டெ னெட்டு முணர்ந்தரு ளோமுணங்கில்
எண்பத்தி யெட்டினி லெண்பத்து முன்றிற் றிரோதையின்றே.

*(இ-ள்.) எண்பத்தெட்டினில் எண்பதில் (இல்லை) பொருள் நான் என்ன-(அ... ல் ... போக ... ) (யாக்கும்) எட்டாத பரம்பொருள் நான் என்று (எனையறிந்துகொண்டேன்) உன்-உன்றுடைய, எண்பத்தெட்டில் எண்பத்தொன்றில்-(அய... -ல் அய்க போக ல) எழுமையுமின்னதென, ... - நாம சொல்ல, (நீ கேட்டவுடனே, இயல் மாயைதான் ... ... கிவரு மாயை போய்விடும், இனி எண்பத்தெட்டின் எட்டும் உணர்ந்து அருள் ஓமுணங்கில்-(அயி ... ம ... -ம = ... ) கொண்டுற்ற தத்துவங்களையும் உனக்கு ... நின்ற நிருவருளுடனே கூடினால், எண்பத்தெட்டில் எண்பத்து மூன்று இல் திரோதை - (அயி ... போக ... ) பாசமலத்துள் ஒன்றாகிய திரோதை, இன்று-இல்லையாய்ப் போய்விடும். (எ-று.)*
(88)

ஆணவம், காமியம், மாயை, மகாமாயை, திரோதை யென்னும் இப்பஞ்ச மலங்களையே பாசமென்று கூறுவது.

இந்த பாசத்தை விட்டுப் பதியையடைவதுவே முத்தியாம்.

இதற்குப் பிரமாணம் —சித்தியார்

பாசத்தைப் பருக்கி விட்டுப் பதியினை யடைய முத்தி
யாசற்ற வாகமங்க ளறைந்திடு மதினை நீயே
மாசற்ற மார்க்கத்தை யறிந்து மறுவ னொன்றில்
கூறிய பின்னொரு பொருளா நினைக்காமற் குறைப்படு நாளே.

பன்னுமிதிற கன்றிநோக்க.

எண்பத்தி யோன்பதி லெண்பத்தி யெட்டற் றிறையேதுபோய்
எண்பத்தி யோன்பதி லெண்பதிற் காண்டன்மெய் கருதல்பொய்யே
எண்பத்தி யோன்பதி லெண்பதி னாளிலுன் றாயிறந்தால்
எண்பத்தி யோன்பதி லெண்பதிற் றாயுண் டெனவுன்னுமே.

(எ-து) எண்பத்தொன்பதில் எண்பத்தெட்டு அற்று இறை ஏது? (ஐம்பொறிக்கு அறிவதற்கு) ஒன்றேயுடையவர் எண்பது ஏது? போய் அசத்தியம், [இல்லையென்ற நாஸ்திக மதத்தாவிய லோகாயத மதமாம்] எண்பத்தொன்பதில் எண்பது இல் (அறிகருவியில்லாததாக) ஒன்பது வகையாகிய, காண்டல் மெய் தன்னாற் கண்டதே மெய்யான சாக்ஷி, கருதல் பொய்-சிந்தித்ததே பொய்யாம், எண்பத்தொன்பதில் எண்பது இல் நாளில்-அ ஒன்பதாம் நாளிலே, உன் தாய் இறந்தால்-உன்னைப் பெற்ற தாய் இறந்துபோயவிட்டால், எண்பத்தொன்பதில் எண்பது இல் ஒன்பதாம் நாளுக்குமேற் பிழைத்து வளர்ந்து வந்த தாயுண்டென உன்னுமே- (நின் மனமே) யுனக்கு தாயுண்டென நினைவிக்குமே எ-று)

ஒன்றுமறியாத மூடர்கள் சொல்லுவதெப்படியென்னில் ஒரு கர்த்தா வுண்டென்றும், அந்த கர்த்தா முத்தி கொடுப்பனென்றும் சிற்சில தவத்தோர் கூறப்படும் தன்மநெறி செய்தவ

அ (பிறந்த) ஒன்பதாம நாள் தாயிறந்தால பிள்ளை பிழைக்கும என்று கருத்தாலோ, புண்ணியமாகவாதனை மாகும் முன்னே யென்ற கருத்தாலோ அறியேம.

கள் செய்து செய்து மாய்கிறதல்லாமல், இவர்கள் சேர்ந்த திரவியமும் வரக்கண்டதில்லை. வருந்தின தேகத்துக்கு இன்பங் கண்டதுமில்லை. வீணே யுழைத்திருந்து, செத்துப்போவதே கண்டதல்லாமல் அதினாலே யின்பங் கண்டாரில்லை.

இனி மாந்தர்களுக்குண்டான தொழில்! அர்ச்சனை தானம் முதலான செய்தல். அவர்களாற் பெறு நன்மையே யுடற்கும் உயிர்க்குங் காணப்பட்ட சுகமாகிய யின்பத்தைத் தருமாதலால், அவ்வில்லறமே நல்லறமாம். அவ்வில்லறமொழியப் புறவறமாகிய துறவறமே நெறியாமென்றும், அவைபோன்று கோடியாகப் பொசிப்பிக்குமென்றும், இரவும் பகலும் உறக்கமற்றுடலை வருந்துவார்கள்.

உடலம் மாய்கிற பின்பு பிராரத்தத்துவமென்று சொல்லுகை யிந்த வுலகத்துக்கு முன்னே கண்டெவர்தே னென்றொருவருஞ் சொல்லக் கண்டதுங் கேட்டதுமில்லை. ஆதலால் எந்த சமயமும் பொய்ச்சமயமாம். இது புதுமையல்லவோ?

நீ நான் கண்ணுற் கண்டதே மெய்யாம். அதினாலே யின்பமென்று கண்ட வுனக்குச் சிற்றின்பந் தருவதாகிய ஸ்திரியினுடைய முலை விழுந்து, உடலதிரங்கி, சணப்போலத் தலைமயிரும் நரைத்து உடல் கூனி, நடை தளர்ந்து விடாத யிருமல் பற்றிவருங் காலத்திலே நீ விரும்புந்தன்மை கண்டாயில்லையே. இது கண்டிருந்தும் அதனை அறியாமல் மாதரை தெய்வமென்று நீ கண்டது பொய்யாச்சுதே. இனி நினைத்தது பொய்யென்கிற தெதைக் கண்டு சொல்லுகிறதாச்சுது.

பிரத்தியட்சம், அனுமானம், ஆகமம் என்று மூன்று. இதிற் பிரத்தியட்சமே யல்லாமல் அனுமானமும் ஆகமமும் பொய் யென்கிற தல்லாமல் மெய்யென்று நீ கண்டதில்லையாகில் நீ பிறந்த வொன்பது நாளையிலே, உன்னைப்பெற்ற தாயானவள் இறந்துபோனால், நீ வளர்ந்து பெரியவனானபின்பு என் தாயைக் கண்ணுறக் கண்டதில்லையே. எனக்கேது தாயில்லையென் றிருக்க வல்லவோ வேண்டும். அப்படி நீ யிராதது மெத்தவும் புதுமையல்லவோ? அனைவருக்குந் தாயுண்டானதுபோல, எனக்குந்தாயுண்டாச்சுதென்று நினைப்பதேன்? உன் தாயை யறிந்தவர்கள்' உன்

தாயினுடைய சொரூப சுபாவத்தைச் சொன்னால் மெய்யென்று ஒப்புக்கொள்வானேன்.

இதுவன்றியும் மேகமானது மந்தாரமா யிடித்து, மின்னுக் குமறிபு மழை பொழியாமல் ஆறு வந்தால், அந்த மந்தாரமும் இடியும் மின்னலுந் தூர மழை பொழிந்து, ஆறு வந்ததென்று கண்டது அனுமானமாமே. அந்த அனுமானம் மெய்யாமே. ஆகையினால் அனுமானமும் மெய்யாம், இனி யுன் தாயையறிந்தவர்கள் உன் தாயினுடைய சொரூப சுபாவஞ் சொன்ன வார்த்தையை மெய்யென்று ஒப்புக்கொண்டது போலவும், ஆறு வரக் கண்டவன் இன்னவிடத்தில் மழை பொழிந்ததென்ற வார்த்தையை மெய்யென்று ஒப்புக்கொண்டதுபோலவும் வேதாகமங்கள் சொன்ன சொல்லையும் மெய்யென்று கொள்க. ஆகையினாலே பிரத்தியட்சமும் அனுமானமும், ஆகமமும் மெய்தான் என்றபடியாம். (89)

தொண்ணூறும் பத்து மிருப்ப தரித்த தோலுடம்பு
தொண்ணூறும் பத்துகம் நிற்பது போற்றுற வாசையென்னே
தொண்ணூறும் பத்தா றுடையான் பகைவன் றொழும்படிக்குத்
தொண்ணூறி லெண்பத்தஞ் சில்லாவித் தோடந் தொலைப்பதென்
[றோ.

(எ-து) தொண்ணூறும் பத்தும் (௯௰-ம் ௰-ம் ௱) நூறு வயது, தோல் உடம்பு இருப்பது அரிது-தோலாலாய சரீரம் ஜீவித்திருப்பது அருமை, என்றறிந்திருந்தும், தொண்ணூறும் பத்து உகம்-நூறு கோடி யுகாந்த காலம், நிற்பதுபோல-இருப்பதுபோல, (ஆன்மலாபந் தேடுகிற வழியறியாமல்) அற ஆசை ஏன்-பொல்லாத ஆசை யேதுக்கு? தொண்ணூறும் பத்து ஆறு உடையான் பகைவன்-நூறு நகங்களுடையவனான இராவணனுக்குப் பகைவனான ஸ்ரீராம மூர்த்தியாகிய விண்டு, தொழும்பு அடிக்கு-தொழும்படியான திருவடிக்கு, தொண்ணூறில் எண் பத்து அஞ்சு இல்லை ஐ தோடம்-(௯௰-ல் ௮௰௫ இல்லாதது ௫) அஞ்சாதே யிருக்கிற வித்தத் தோடத்தை, தொலைப்பது என்றோ-தொலைக்கிறது எந்த காலத்திற்கோ (எ-று.)

யுத்தத்தை உத்தம் என்பார்போல் யுகத்தை உகம் என்றார்.

(90)

தொண்ணூற்றி யொன்றிற்றெண் ணூறிற்கல் வீசிடப் பாசிவிடும்
தொண்ணூற்றி யொன்றிற்றெண் ணூறி லிழைபிரித் தாற்றுகிற்போம்
தொண்ணூற்றி யொன்றிற்றெண் ணூறின் மரம்பிரிக் கிற்றாலவில்
தொண்ணூற்றி யொன்றினிற் றெண்ணூறிற் பாசந்தோன் றருட்
[கே.

(எ-று) தொண்ணூற்று ஒன்றில் தொண்ணூறு இல் கல் வீச (கயிக-ல் கயி இல்லாததாக) ஒரு கல்லை, வீச-விட்டெறிய, விடும் பாசி-பாசானது விட்டுவிடும், (அதுபோலவும்) தொண்ணூற்று ஒன்றில் தொண்ணூறு இல் இழை-ஒரு இழையை, பிரித்தால்-ஒவ்வொன்றாக வாங்கிப்போட்டால், தறில் போம்-புடவை (அல்லது துணி) போம், அதுபோலவும், தொண்ணூற்று ஒன்றில் தொண்ணூறு இல் மரம்-ஒரு கொம்பை, பிரிக்கில்-பிடுங்கிப் போட்டால், இல் தால இல்-வீடானது இல்லையாகும், (அதுபோலவும்) தொண்ணூற்று ஒன்றினில் தொண்ணூறு இல் பாசம்-ஒன்றுபட்ட பாசம், தோன்று-தோன்றமற் போம். அருள்குல-திருவருளே பிரகாசிக்கும். (எ-று.)

ஞானம் பிரகாசிக்கும் முறைமை எப்படியென்னில்:—

அக்கினியை யுண்டாக்கவேண்டின நேரத்தில் நெருப்பை பலகால் விசிறியும், துருத்திகளாலும், குழலாலும் ஊதியும் உண்டாக்கும் முறைமையைப்போலவே, கற்ற நூல்களை ஆசையுடனே படித்தவன் பயனை யறிந்த ஞானத்திலே யுறைத்துறைத்து நிற்ப ஞானம் பிரகாசிக்கும்.

இதற்குப் பிரமாணம்:—சித்தியார் விருத்தம்.

பாசிபடு குட்டத்திற் கல்லினைவிட் டெறியப்
  படும்பொழுது நீங்கியது விடும்பொழுது பாக்கும்
ஆசுபடு மாமாயை யருக்கன்ம மனைத்தும்
  அரனடியே யுணரும்போ தகலும்பின் னணையும்
நேசமொடு திருவடிக்கீழ் நீங்காதே தாங்கும்
  நினைவுடையோர் நின்றிடுவர் நிலையிதுவே யாகும்
ஆசையுட னிங்குமங்கு மாகியலம் வருவோர்
  அரும்பாச மறுக்கும்வகை யருளின்வழி யுரைப்பாம்.

என்னு மிதிற் கண்டுகொள்க. (91)

தொண்ணூற் றிரண்டிற்றொண் ணூற்றொன்றி லாதரு டோற்றதனுள்
தொண்ணூற் றிரண்டிற்றொண் ணூற்றொன்றி லாச்சிவ சுகசொரூபந்
தொண்ணூற் றிரண்டிறொண் ணூற்றொன்றிலாதருட் சுபாவமல்லால்
தொண்ணூற் றிரண்டிற்றொண் ணூற்றொன்றி லாச்சிவஞ் சொல்வ
|தென்றே.

(எ-து.) தொண்ணூற்று இரண்டில் தொண்ணூற்று ஒன்று இலாது-(கூடுதல் கூடுக இல்லாததாக) ஒன்றாகிய, அருள் தோற்று-திருவருள் தரிசனமானவுடனே, அதன் உள் - அத் திருவருளில், தொண்ணூற்று இரண்டில் தொண்ணூற்று ஒன்று இலா சிவ சுக சொரூபம்-சிவமென்னும் ஒரு பொருள் சுகமேவொரு சொரூபமாகப் பிரகாசிக்கும், (திருவருளொன்றுஞ் சிவமென்றும் இரண்டு பொருளுண்டோ சொல்லுமென்னில்) தொண்ணூற்று இரண்டில் தொண்ணூற்று ஒன்று இலாது அருள் சுபாவம் அல்லால்-திருவருளொன்றின்றி, தொண்ணூற்று இரண்டில் தொண்ணூற்று ஒன்று இலா சிவம் - சிவமென்ற வொரு பொருள், சொல்வது என்னே-எதுக்குச் சொல்வது. (எ-று.)

அருளை யொழித்து சிவம் தனித்தொருபொருளாயிராது. ஆகவே சிவத்தை யொழித்து அருள் தனித்தொரு பொருளாயிராது. எப்படியெனில்:—பிரகாசமானது ஆதித்தனை யொழிந்துத் தனித்து நில்லாது, ஆதித்தனும் பிரகாசத்தை யொழித்துத் தனித்து நில்லான்.

இன்னணம் திருவருளும் சிவமும் ஒன்றுபட்டிருக்க, அருளே யமையாதோ? அரன் ஏனென்னில்: அரனிடத்தில் விளங்காநின்ற அருளானது, அரனுக் கொரு சத்தியாம். ஆகையினாலே அருளினால் ஆன்மாவுக்கு பலனில்லை. ஆன்மா சிவனோடு கூடி யின்பத்தை யனுபவிக்கையினாலே (பின்னை) ஆன்ம நாயகி யென்று கூறப்படும்.

ஆகவே ஆன்மநாயகியும், அருளாகிய சத்தியுங் கூடினால் இன்ப முண்டாகாது. எதுபோல் எனில்: இரண்டு ஸ்திரீகள் கூடியவாறும்.

இதற்குப் பிரமாணம்:—திருவருட்பயன்.

இருவர் மடந்தையர்க் கென்னபய னின்புண்டாம்
ஒருவ னொருத்தி யுறில்.

என்பதாற் கண்டுகொள்க.

இப்பால் வண்டானது மதுவை யுண்டு பூவை யகலக்காமல் அதிலே யுறைகின்றோமென்ற தன்மையு முணராமல் மயங்கிக் கிடக்கின்ற தன்மையைப் போலவும், விஷமுதிர்ந்து மேலிட்டால் அந்த விஷத்தின் வசத்தால் அதுவென்றுந் தானென்றும் தெரியாமல் மூர்ச்சித்துக் கிடக்குந் தன்மையைப்போலவும் ஆன்மா பதியுடன் நிற்கும். அப்படி நிற்கவே சிவம் அகன்றுபோக வொட்டாமல் தன்னுள்ளே யடக்கிக்கொண்டு தன் வியார்த்த மேலிட்டு வொழிவற நிற்கும். அந் நிலைதானே சாயுச்சியம்.

இதற்குப் பிரமாணம்:—தத்துவப்பிரகாச விருத்தம்.

மதுவுண்ட வண்டுபோலும் வல்விட முதிர்தல் போலும்
நிதியுற விகாரங்கெட்டுத் தெளிந்திடங் குலைவேயாகி
லைதுபிரிந் தகல வொட்டா தருள்வசா யுச்சி யந்தான்
கதிபெற வந்தவர்க்கே கணக்கையார் மதிப்பர் தாமே.

என்று மிதிற் கண்டுகொள்க.

இந்நிலையே யனுபவிப்பானும் அனுபோகமும் ஒன்றுபோல நின்று, ஒன்றுவதே சிவானுபவமாம். (92)

தொண்ணூற்று மூன்றிற்றொண் ணூறிற் பதார்த்தமுந் தூய்முத்தியில்
தொண்ணூற்று மூன்றினிற் றொண்ணூறு தானில் லதுசாற்றுகேன்
தொண்ணூற்று மூன்றிற்றொண் ணூறிற் குணந்தூய ஞானிக்குண்டாம்
தொண்ணூற்று மூன்றினிற் றொண்ணூறி லின்பந் துணையுயிர்க்கே.

(எ-து.) தூய் முத்தியில் - சாயுச்சியத்தில் தொண்ணூற்று மூன்றில் தொண்ணூறு இல் பதார்த்தமும்-(௯௰௩ - ல் ௯௰ இல்லாதது ௩) பதி, பசு, பாசம் ஆகிய) முப்பொருளும், தொண்ணூற்று மூன்றினில் தொண்ணூறு தான் இல் அது சாற்றுகேன்-அம் முப்பொருளையும் பற்றிச் சொல்வேன், தொண்ணூற்று மூன்றினில் தொண்ணூறு இல் குணம்-முக்குணங்களும். தூய்

ஞானிக்கு உண்டாம் - மெய்ஞ் ஞானிகளுக் குண்டாம், தொண்ணூற்று மூன்றில் தொண்ணூறு இல் இன்பம்-மூவித பத்தியும், உயிர்க்கு துணை - உயிர்க்குத் துணையாம். (எ-று.)

முப்பொருள்கள் முத்தியினும் அழியா. எங்ஙனமெனில்:—பரமசுகத்தை ஆன்மாக்களுக்குக் கொடுக்கையினாலே கர்த்தா வுண்டாம், அச் சுகாநந்தத்தை யனுபவிப்பதுண் டாகையினாலே ஆன்மா வுண்டாம். அவ்வின்பம் என்றுந் தொலைவில்லாமல் அளவிறந்த தாகையினாலே பாசமுண்டாம்.

ஞானிகட்கு முக்குண முண்டாம்.

எங்ஙனமெனில்:—ஒன்றை விரும்பித் தொடாமையினாலே பாலரோ டொப்பாம். தீமை நன்மையென்னும் விகாரமற நிற்கையினாலே உன்மத்தரோ டொப்பாம். தற்செயலற்று, எல்லாம் பொய்ச்செயலாய் நிற்கையினாலே பேயரோடொப்பாம்.

இதற்குப் பிரமாணம்.

பாலருடன் பித்தும் பசாசகுணம் ஞானிக்
கேல வுவமை யியம்புவனே—மேலொன்றைத்
தேடா திருத்தலாற் றீமைநன்மை யற்றலா
லாடாது தானொழித லால்.

என்னு மிதிற் கண்டுகொள்க.

மூவித பத்தியாவது:—சிவன்மீதும், சிவனடியார்கள்மீதும், பிறவுயிர்கள்மீதும் அன்பா யிருத்தலாம். (93)

தொண்ணூற்று நாலினிற் றொண்ணூறில் லாப்படி துய்க்குமவர்
தொண்ணூற்று நாலினிற் றொண்ணூறி லேநெறி துறப்பர்துறவார்
தொண்ணூற்று நாலிற்றொண் ணூறின் மறைநூற் றுறந்துவிட்டார்
தொண்ணூற்று நாலிற்றொண் ணூறில் நெறியைத் துறத்தனன்றே.

(எ-று.) தொண்ணூற்று நாலினில் தொண்ணூறு இல்லைபடி துய்க்கும் அவர்-(௯௰௪-ல் ௯௰ இல்லாதது ௪) நாலாம் பதவியை யனுபவிக்குமவர், தொண்ணூற்று நாலினில் தொண்ணூறு இல் நெறி துறப்பர் - அந்தக் கரணங்கள் நாலையுந் துறந்துவிடுவார். தொண்ணூற்று நாலில் தொண்ணூறில் மறை நூல் துறந்து

விட்டார். நாலு வேதங்களையும் விட்டுவிடுவார். (இவ்வாறு துறந்து ஆகமத்திற் கூறியபடியே தனுகரணபுவன போகங்களாய) தொண்ணூற்று நாலில் தொண்ணூறு இல் நெறியை துறத்தல் நன்றே-நால்வித நெறிகளையுந் துறப்பதே நன்று. (எ-று.) (94)

தொண்ணூற்றி யஞ்சினிற் றொண்ணூறிற் றந்தோது பரநெறிக்குத்
தொண்ணூற்றி யஞ்சிற் றொண்ணூறின் மலத்துக்குத் தோயமதா
தொண்ணூற்றி யஞ்சிற் றொண்ணூறிற் கர்த்தர்க்குந் தொந்தியதாம்
தொண்ணூற்றி யஞ்சிற் றொண்ணூறிற் கரத்தாற் றொழுங்குருவே.

(எ-று.) பரநெறிக்கு, தொண்ணூற்று அஞ்சில் தொண்ணூறு இல் தந்து-(ஐயிரு-ல் ஐம் இல்லாதது ௫) அஞ்சனாந் தந்து, தொண்ணூற்று அஞ்சில் தொண்ணூறு இல் மலத்துக்கு-பஞ்சமலங்களையுஞ் சூனமாகவும், தொண்ணூற்று அஞ்சில் தொண்ணூறு இல் கர்த்தர்க்குத் தொந்தியது ஆம்-பஞ்சகர்த்தாக்களும் ஒரு சொர்ப்பமாகவும், தொண்ணூற்று அஞ்சில் தொண்ணூறு இல் கரத்தால்-அஞ்சலியத்தத்திலே, தொழும் குருவே-தொழப்படாநின்ற ஞானாசாரியர். (எ-று.) (95)

தொண்ணூற்றி யாறு விரற்கடை நீளத்துண் டித்தமெய்யில்
தொண்ணூற்றி யாறான தத்துவ முண்டுதோன் றாதிருந்தேன்
தொண்ணூற்றி யாறான தத்துவந் தன்னையுந் தோன்றச்சொலில்
தொண்ணூற்றி யாறுமல் லாதேனைக் காட்டினன் றூய்குருவே.

(எ-று.) தொண்ணூற்று ஆறு விரல் கடை நீளம் துண்டித்த மெய்யில் - (அவனவன் பெருவிரலாலே) தொண்ணூற்றாறு விரற்கடை நீளமாகத் துண்டிக்கப்பட் டிருக்கிற சரீரத்திலே, தொண்ணூற்று ஆறு ஆன தத்துவம் உண்டு - தொண்ணூற்றாறு தத்துவங்களு முண்டு, தோன்றாது இருந்தேன் -(இது இது என்று அறியாம லிருந்தேன், தொண்ணூற்று ஆறு ஆன தத்துவம் தன்னையும்-தொண்ணூற்றாறு தத்துவங்களையும், தோன்ற சொலில்-தெரியும்படிச் சொன்னால், தொண்ணூற்று ஆறும் அல்லாது ஏனைக் காட்டினன் தூய் குருவே-தொண்ணூற்றாறு தத்துவமும் நீயல்லவென்று என்னை யானறியக் காட்டினன் பரமாசாரியன். (எ-று.)

தத்துவங்களுடைய விரிவுக்குப் பிரமாணம்:—திருமந்திரம்.

*நாலு கோடியு நாற்பத்தெண் ணாயிர*
*மேலுமொ ரஞ்ஞா றாகி வெளிப்படும்*
*பாலவை தொண்ணூற் றொடெதிர் படுமவை*
*கோலிய வைந்து மாகுங் குறிக்கிலே.*

*என்னு மிதிற் கண்டுகொள்க.*

*கூறப்படாநின்ற தத்துவங்கள் நாலுகோடியே நாற்பத்தெண்ணாயிரத்து ஐஞ்ஞூறு என்பர். இவற்றுள் சுருங்கச் சொல்லின் ௩௰௬.*

விபரம்.

சித்தாந்திக்கு:—*ஆன்ம தத்துவம் ௨௰௪-ம் வித்தியாதத்துவம் ௭-ம், சிவதத்துவம் ௫-ம் ஆக ௩௰௬.*

வேதாந்திக்கு:—*ஆன்ம தத்துவம் ௨௰௪-ம், புருடகாலம், பரம், வியோமம், பரம் ஆக ௨௰௮.*

வைணவர்க்கு:—*ஆன்ம தத்துவம் ௨௰௪.*

மாயவாதிக்கு:—*ஆன்மதத்துவம் ௨௰௪-ம் பிராணவாயு ௧-ம் ஆக ௨௰௫.*

இதற்குப் பிரமாணம்:—திருமந்திரம்.

*ஆகின்ற தொண்ணூற்றோ டாறும் பொதுவென்பர்*
*ஆகின்ற வாறா றஞ்சிவ தத்துவம்*
*ஆகின்ற நாலேழு வேதாந்தி வைணவர்க்கு*
*ஆகின்ற நாலாறு மாயாவாதிக் கையைந்தே.* (96)

தொண்ணூற்றி யேழினி லெண்பத்து மூன்றைத் துடைத்தமுத்தி
தொண்ணூற்றி யேழினிற் றெண்ணூற் றிரண்டைத்துரத்தன்முத்தி
தொண்ணூற்றி யேழிற் றொண்ணூற்றி யொன்றிற் றெழுவா முத்தி
தொண்ணூற்றி யேழிற் றெண்ணூறிற் பிறப்பைத் துலைப்பவர்க்கே.

(எ-து.) *தொண்ணூற்று ஏழினில் எண்பத்து மூன்றை துடைத்த முத்தி-(௯௰௭-ல் ௮௰௩ துடைத்தது ௰௪) பதினான்கு உபாதியும் நீங்கினதே வேதாந்திக்கு மோட்சம், தொண்ணூற்று ஏழினில் தொண்ணூற்று இரண்டை துரத்தல் முத்தி - (௯௰௭-ல் ௯௰௨-ஐ ஒட்ட ௫) ஐங்கந்தங்களையு மறுத்ததே மாயாவாதிக்கு மோட்சம், தொண்ணூற்று ஏழினில் தொண்ணூறு இல் பிறப்*

யைத் துலைப்பவர்க்கு ௭-(கூயிா-ல் கூய் இல்லாதது ௭) எழு பிறப்பையுந் துலைத்திடுவோர்க்கு, தொண்ணூற்று எழினில் தொண்ணூற்று ஒன்று இல் தொழுவாம் முத்தி-(கூயிா-ல் கூயிக இல்லாதது கூ) ஆறந்தங்களையுங் கடந்ததே மோட்சம், (எ-று)

காரிய வ்யாதி ௭. காரண வ்யாதி ௬.

தேகம் க, இந்திரியம் க, அந்தக்கரணம் ச, பிராணவாயு க, ஆக ௭-ம் காரிய வ்யாதியாம்.

சர்வ சிருட்டி, சர்வ திதி, சர்வ சம்மாரம், சர்வேஸ்வரம், சர்வ காரணம், சர்வேந்தர்யாமி ஆக ௬-ம் காரணவ்யாதியாம்.

வேதாந்தம், சித்தாந்தம், நாதாந்தம், போதாந்தம், தத்துவாந்தம், காலாந்தம், பந்தனம், மயேஸ்வரம், பிரசாதி, பிராணலிங்கி, சரணன், ஐக்கியன் என்பாருண்டாம்.

இவர் ஆரெனில்:—பத்தன்-தேவேந்திரனும், மயேஸ்வரன்-பிரம்மாவாம், பிரசாதி-விண்டுவாம், பிராணலிங்கி - ருத்திரனும், சரணன்-மகேஸ்வரனும், ஐக்கியன்-சதாசிவனும்.

இவர்கள் லிங்கமாவன:—ஆசார லிங்கம், குருலிங்கம், சிவலிங்கம், சங்கம லிங்கம், பிரசாத லிங்கம், மகாலிங்கம்.

இந்த லிங்கங்கள் எங்கன மிருக்குமெனில்:—முறையே நாசி, நாக்கு, விழி, சரீரம், காது, இருதயம்.

இந்திரிய மாத்திரைகளாலே வருகிற பிரமகிதம் அனைத்தும் மகாலிங்கமே யனுபவிப்பதாகச் செய்து சதானந்த லிங்கத்தின் பிரசாதமே கொண்டால் ஆன்மாவுக்குச் செனன மரணமில்லை.

இனி முன்சொன்ன ஆறு லிங்கமும் மூன்று லிங்கமாம்.

மூன்றுலிங்கமாவது எதெனில்:—இட்டம், பிராணம், பாவம்.

இம்மூன்று லிங்கத்துக்கும் அற்பிதா அவதானம் எப்படியென்னில்:—முறையே உருபு, ருசி, திருப்தி. இவை யற்பிதச் செயல்.

இத் திரிவித பதார்த்தத்தையும் வணங்குவதே தொழிலாகையினாலே வீரசைவருக்கு மோட்சம்.

இதற்குப் பிரமாணம்:—வீராகமம்.

இந்திரிய மாத்திரை யினைக் காலே
யிவ்விதம கிதமனைத்து மிறைவன் றனே
பந்தமற வருந்தினுயிர்க் குதிப்பி றின்றும்
பரனருந்த முன்னருந்தி யிரைக்கா மென்னில்

முன்றொருவன் பரிக்கொருவ னாகுதல் வேண்டும்
முதல்வனருந் தாயுபிறற் றருந்து மென்றே
சிந்தைதெளிய நருள்வழியாற் செலுத்த யாவுஞ்
சிவார்ப்பிதமாம் பிரசாதஞ் சீவர்க் காமே. (97)

தொண்ணூற்றி யெட்டினிற் றொண்ணூறில் லாததோ தூயருளோ
தொண்ணூற்றி யெட்டிற்றொண் ணூற்றே ழிலாக்கதி சுகமீவது
தொண்ணூற்றி யெட்டிற்றொண் ணூற்றே ழிலாவுயி தோழியருள்
தொண்ணூற்றெட் டிற்றொண்ணூ றில்லா ததுடன் துவக்கிடுமே.

(இ-ள்.) தொண்ணூற்று எட்டினில் தொண்ணூறு இல்லாததோ (எட்டில் தொண்ணூறு இல்லாதது) (யாருக்கும் - எவைக்கும்) எட்டாத பரம்பொருளோ? [அல்லது] தூய் அருளோ - தூய ஞான திருவருளோ? எனவோ வெனின், தொண்ணூற்று எட்டினில் தொண்ணூற்று ஏழ் இலா சுகம் ஈவது - (எட்டில் ஏழ் இல்லாதது) ஒன்றாகிய (ஞான மெனப்படுவதாகிய) மோட்சத்தைக் கொடுப்பது, (என்று மனமே நீ சேர்ப்பாய்) தொண்ணூற்று எட்டினில் தொண்ணூற்று ஏழ் இல்லா உயிர் - ஒன்றாகிய ஆன்மாவைக் கொண்டு சேர்வித்து, அருள் தோழி திருவருளே பாங்கியாம், தொண்ணூற்று எட்டினில் தொண்ணூறு இல்லாததுடன் - எட்டாத பரம்பொருளுடன், துவக்கிடுமே - (அவ் வருளாகிய பாங்கி) கூட்டிடுமே. (எ-று.) (98)

*தொண்ணூற்றி யொன்பது மொன்றுங் கலித்துறை சொன்னபிழை
தொண்ணூற்றியொன்பதொன்றென்னும்பொறுக்கத் தூயோர்கடனே
தொண்ணூற்றி யொன்பதிற்றொண்ணூறி லல்லயான் சொன்னதுதான்
தொண்ணூற்றி யொன்பதிற் றொண்ணூறி லஞ்சிற் சுருதிசொல்லே.

---

* "தொண்ணூற்றி யொன்பது மொன்றுங் கலித்துறை" என்று கூறிய செய்யுளால் நூறு கட்டளைக் கலித்துறைகள் முற்றியே பாடிவிட்டதாக வேற்படுகிறது. அவ்வாறு நூலாசிரியர் பாடியிருப்பரேல் தொண்ணூற்றொன்பதாவது கலித்துறை வேறொன்றாகக் கூறி, நூறாவதும் பின்னர்க் கூறி நூற்றியொன்றாவதாக இவ்வவையடக்கத்தைக் கூறியிருக்கவேண்டும். அங்ஙனம் கூறப்படவுமில்லை. கூறுதற்கும் நியாயமில்லை. ஒருகால் நூறும் பாடியிருப்பரேல், அப்பால் நூற்றொன்றென்றொடாது. தொண்ணூற்றொன்பதெனப் பிரயோகப்படுத்தார்.

(எ-து.) தொண்ணூற்று ஒன்பது ஒன்றாம் கலித்துறை-(௯௰௯-ம் ௧-ம் ௱) நூறு கலித்துறைகளிலே, சொன்ன பிழை-சொல்லிய தப்புகள், தொண்ணூற்று ஒன்பது ஒன்று - நூறை இரட்டினும்-நூறிலேயே பெருக்க, (அதாவது ௱×௱ ௰௲) பதினாயிரமானலும், பொறுக்க - பொறுப்பது நல்லோர்களுக்குக் கடமையாம், தொண்ணூற்று ஒன்பதில் தொண்ணூறு இல்-(௯௰௯-ல் ௯௰ இல்லாதது ௯) நவமாயினுடைய சீர்கொண்டயான், சொன்னது தான் அல்ல-நான் சொன்னதல்ல, (மற்றியாரெனில்) தொண்ணூற்று ஒன்பதில் தொண்ணூற்று அஞ்சு இல்-(௯௰௯-ல் ௯௰௫ இல்லாதது ௪) நாலாய, சுருதி சொல் - வேதங் கூறியபடியாம். (எ-று.) (99)

(சம்பூரணம்.)

---

இவற்றுள் நூலாசிரியர் முதன்முதல் முடிவீறாகப் பாடிய கட்டளைக் கலித்துறைகளெல்லாந் தொண்ணூற்றொன்பதென்றே முற்றுந் துணியப்படுகிறது.

இனி, முதலில் ஒன்று கணக்கில் ஒன்று எடுத்து, ஒன்பதோடு நிறுத்தாமல் பத்தும் பாடியதால், பத்து கணக்குப்படி தொண்ணூறும் பாடி, அதற்கினமான (ஒன்று) கணக்குடன் தொண்ணூற்றொன்பதும் பாடினார். (இதற்குள் விஷயம் யாவும் அடங்கிவிட்டது) இனி நூறை யாரம்பிப்பரேல் நூறு கணக்காக வொவ்வொரு நூறும் பாடி, தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றொன்பதில் நிறுத்தவேண்டும். இவ்வாறே ஆயிர முதலிய வெண்களுக்குமாம்.

இக்கருத்து கொண்டே நூலாசிரியர் தொண்ணூற்றொன்பதோடு விட்டவராகக் காணப்படுகிறது. இப்பால் ஆசிரியர் கருத்தென்னோ வறிகிலேன்.

இனி, நூறு கலித்துறை பாடியதாகத் தாமே சொல்வதேனெனின்: சொற்பொருளை யவ்வாறு கொள்ள, எனக் குடன்பாடல்லை. மற்றெவ்வாறோவெனின், தொண்ணூற்றொன்பது பாக்களும், கட்டளைக் கலித்துறையைச் சாரும். ஆகலான் இவற்றுள் சொல்லிய பிழைகளை யென்றென்றேயாம். இன்னும் தொண்ணூற்றொன்பது இலக்கங்களோடு பொருந்திய கட்டளைக் கலித்துறைகளில் சொன்ன பிழையென்றுங் கொள்ளலாம்.

# செய்யுண் முதற் குறிப்பு

## ஒ ன் று தி.


| இலக்கம். | பக்கம். |
|---|---|
| ஒன்று | 1 |
| இரண்டு | 2 |
| மூன்று | 2 |
| நான்கு | 3 |
| ஐந்து | 4 |
| ஆறு | 5 |
| ஏழு | 6 |
| எட்டு | 7 |
| ஒன்பது | 8 |
| பத்து | 8 |
| பதினொன்று | 9 |
| பனிரண்டு | 10 |
| பதின்மூன்று | 10 |
| பதினான்கு | 11 |
| பதினைந்து | 11 |
| பதினாறு | 12 |
| பதினேழு | 12 |
| பதினெட்டு | 1[illegible] |
| பத்தொன்பது | 13 |
| இருபது | 14 |
| இருபத்தொன்று | 14 |
| இருபத்திரண்டு | 15 |
| இருபத்து மூன்று | 15 |
| இருபத்து நான்கு | 17 |
| இருபத்தைந்து | 17 |
| இருபத்தாறு | 18 |
| இருபத்தேழு | 18 |
| இருபத்தெட்டு | 19 |
| இருபத்தொன்பது | 19 |
| முப்பது | 20 |
| முப்பத்தொன்று | 21 |

| இலக்கம் | பக்கம் |
|---|---|
| முப்பத்திரண்டு | 21 |
| முப்பத்துமூன்று | 22 |
| முப்பத்துநான்கு | 23 |
| முப்பத்தைந்து | 25 |
| முப்பத்தாறு | 26 |
| முப்பத்தேழு | 27 |
| முப்பத்தெட்டு | 32 |
| முப்பத்தொன்பது | 32 |
| நாற்பது | 32 |
| நாற்பத்தொன்று | 33 |
| நாற்பத்திரண்டு | 33 |
| நாற்பத்துமூன்று | 34 |
| நாற்பத்துநான்கு | 34 |
| நாற்பத்தைந்து | 35 |
| நாற்பத்தாறு | 36 |
| நாற்பத்தேழு | 36 |
| நாற்பத்தெட்டு | 36 |
| நாற்பத்தொன்பது | 37 |
| ஐம்பது | 37 |
| ஐம்பத்தொன்று | 37 |
| ஐம்பத்திரண்டு | 38 |
| ஐம்பத்துமூன்று | 39 |
| ஐம்பத்துநான்கு | 40 |
| ஐம்பத்தைந்து | 41 |
| ஐம்பத்தாறு | 41 |
| ஐம்பத்தேழு | 42 |
| ஐம்பத்தெட்டு | 42 |
| ஐம்பத்தொன்பது | 43 |
| அறுபது | 44 |
| அறுபத்தொன்று | 46 |
| அறுபத்திரண்டு | 49 |
| அறுபத்துமூன்று | 48 |
| அறுபத்துநான்கு | 50 |
| அறுபத்தைந்து | 52 |
| அறுபத்தாறு | 53 |
| அறுபத்தேழு | 54 |
| அறுபத்தெட்டு | 57 |
| அறுபத்தொன்பது | 59 |

எழுபது
எழுபத்தொன்று
எழுபத்திரண்டு
எழுபத்துமூன்று
எழுபத்துநான்கு
எழுபத்தைந்து
எழுபத்தாறு
எழுபத்தேழு
எழுபத்தெட்டு
எழுபத்தொன்பது

எண்பது
எண்பத்தொன்று
எண்பத்திரண்டு
எண்பத்திமூன்று
எண்பத்திநான்கு
எண்பத்தைந்து
எண்பத்தாறு
எண்பத்தேழு
எண்பத்தெட்டு
எண்பத்தொன்பது

தொண்ணூறு
தொண்ணூற்றொன்று
தொண்ணூற்றிரண்டு
தொண்ணூற்றுமூன்று
தொண்ணூற்றுநான்கு
தொண்ணூற்றைந்து
தொண்ணூற்றாறு
தொண்ணூற்றேழு
தொண்ணூற்றெட்டு
தொண்ணூற்றொன்பது